101

# வணிகத்தளிர்

# VANIKATHALIR

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 3611

1993 1994

திருக்குடும்பக் கன்னியர் மடம், யாழ்ப்பாணம்

## HOLY FAMILY CONVENT

JAFFNA

தளிர் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments of :*

# MEDI AIDS PHARMACY

644 Point Pedro Road Nallur.

Dealers in Milk Foods and Pharmaccuticals

# MEDI AIDS DISPENSARY

182 Chemmaney Road Nallur.

★ **LEADING CHEMISTS IN THE CITY** ★

# MEDI AIDS CLINIC

88 Point Pepro Road Kalveyankadu.

*VISIT,*

MEDI AIDS CLINIC

*For*

all your Medical ailments and the best of Medical attention

**WORKING HOURS : 9.30 a. m. — 5.30 p. m.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிகத்தளிர்
# *VANIKATHTHALIR*

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 3611

## 1993 1994

இதழாசிரியர்கள்

**1993**
*செல்வி. தர்மினி யேசுதாசன்*
*செல்வி. சுரேஜினி ஜோசவ்*

**1994**
*செல்வி. மாறிவனுதா அன்புராஜா*
*செல்வி. அமொறின் ஜோசவ்*

**Commerce Students Association**
J / Holy Family Convent
Jaffna.

**வர்த்தக மாணவர் மன்றம்**
*யா/திருக்குடும்ப கன்னியர் மடம்*
*யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளிரில் துளிர்த்தவை


## பொருளியல்

1. நீடித்திருக்கும் வளர்ச்சி - ஓர் நேர்காணல் ... திரு. மா. சின்னத்தம்பி
   நேர்கண்டவர் செல்வி. ஜரா சிவபாஸ்கரன்
2. இலங்கையின் அரசவருமானத்தில் வரி அர சிறையின் பங்கும் அதன் முக்கியத்துவமும் ... செல்வி. கொலஸ்ரிக்கா தார்சீசியஸ்
3. பேரினப் பொருளாதாரத்தின் நோக்கங்களும் அவற்றை அடைந்துகொள்வதற்கான கருவிகளும் ... செல்வி, அஜந்தா வலன்ரையின்
4. இலங்கைப் பொருளாதாரத்தில் கடலகவளம் ... செல்வி நொறின் நீரஜா

## கணக்கியல்

5. கணக்கிட்டுச் சமன்பாடும் ஐந்தொகையும் ... செல்வி. கே. தேவரஞ்சினி
6. கணக்கீட்டின் முக்கியத்துவம் ... செல்வி. யூடிலியா சர்மிலா விஜயராஜா
7. பங்காளர் விலகல் தொடர்பான பங்குடமை நடைமுறைகள் ... செல்வி. கிருஸ்ணபிள்ளை நளினி
8. வழுக்களும் சிராக்கமும் ... செல்வி. மரியறொசானி எமடியூஸ்
9. துணை ஏடுகளும் அவற்றின் தொழிற்பாடுகளும் ... செல்வி. தமயந்தீ நடராஜா

## வர்த்தகம்

10. காப்புறுதி நடைமுறைகளும் அண்மைக்கால மாற்றமும் ... திரு. ஏ. கிறிஸ்ரி
    தொகுப்பு ... செல்வி. அனற் நீலோஜினி சூசைப்பிள்ளை
11. கடன் அட்டை ... செல்வி. றோஸ்மேரி மைக்கல்
12. சர்வதேச வர்த்தகமும் பொருளாதார அபிவிருத்தியும் ... செல்வி. மாறிவனுதா அன்புராஜா
13. இருப்புக்கட்டுப்பாட்டின் விலையிடல்முறைகள் ... செல்வி. றின்சி சாள்ஸ்
14. பிரதேச கிராமிய அபிவிருத்திவங்கிகள் ... செல்வி. தாரணீ நடராஜா
15. ஏற்றுமதியாளருக்குக் கொடுப்பனவை உறுதிப் படுத்தும் நாணயக்கடிதம் ... செல்வி. அமலராணீ ஞானப்பிரகாசம்

## பொது

16. பரீட்சைக்கு ஆயத்தமாகும் மாணவர்களுக்கு ... அருட்திரு. எட்வின் வசந்தராஜ்
    தொகுப்பு ... செல்வி. வேஜினீ சில்வெஸ்ரர்
17. வர்த்தகப் பாடநெறியைக் கற்றோர் பெற்றுள்ள தொழில் வாய்ப்புக்கள்-யாழ் நகரில் ஓர் ஆய்வு ... திருமதி ர. அச்சுதம்பிள்ளை
18. நாட்டுக்கு நான் செய்ய - கவிதை ... செல்வி. றெனிற்றா தர்மினி யேசுதாசன்
19. அருளப்பர் காணும் கிறீஸ்து ... செல்வி. றொபினா பிலிப்
20. இந்துமதத்தின் சிறப்பியல்புகள் ... செல்வி. கிருஸ்ணவதனி யோகரட்ணம்
21. யொகானெஸ் கெப்ளர் (1571 - 1630) ... செல்வி. பிரியம்வதா திலகநாயகம் போல்
22. Why I wish to Study English ... *Miss. Sumangala Rajeswaran*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

# சமர்ப்பணம்

## திருக்குடும்ப கன்னியர் சபை

ஆரம்பகாலந்தொட்டு எமது பாடசாலையை நிறுவி, நிர்வகித்து வழிநடத்தி வந்த, திருக்குடும்பக் கன்னியர் சபைக்கு வணிகத் தளிரின் 4 வது இதழைச் சமர்ப்பணம் செய்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.

இலங்கையில் மறைப்பணி புரிய வந்த முதல் கத்தோலிக்க கன்னியர் சபையாகிய திருக்குடும்ப சபையினரால் அடியிடப்பட்ட முதல் பாடசாலை எமது யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் என்பது எமக்குப் பெருமை தருவதொன்றாகும். கடந்த 132 ஆண்டுகளாக யாழ்ப்பாணத்திலும் பிறஇடங்களிலும் கல்விப்பணி புரிந்து தமது போதனையாலும் சாதனையாலும் ஆயிரக்கணக்கான நன் மக்களை உருவாக்கி, அவர்கள் அறிவிலும், ஒழுக்கத்திலும், பண்பாட்டிலும் மேம்பட்டு விளங்கச் செய்தவர்கள் திருக்குடும்பக் கன்னியர். சாதி சமய வேறுபாடின்றி அனைவரையும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இறைக் குழந்தைகளாய்க் கருதி பொதுநலப்பணி புரிந்தது திருக்குடும்ப சபை. துறவறம் என்னும் தமது அர்ப்பண வாழ்வின் மூலம் மனிதமாண்பைப் பேணி மறைப்பணிக்கு தம்மை அர்ப்பணித்து நிற்கும் தியாகிகள் இவர்கள்.

அவர்களது சபையும், அவர்களது தன்னலமற்ற மறைப் பணியும் கல்விப்பணியும் மேன்மேலும் ஓங்குக என வாழ்த்தி எமது இதழை திருக் குடும்பக் கன்னியர்க்கு எமது நன்றிக் காணிக்கையாக சமர்ப்பிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது அதிபரின் வாழ்த்துச் செய்தி

எமது கல்லூரி வர்த்தக மாணவ ஒன்றியத்தின் சஞ்சிகையான 'வணிகத்தளிர்' நான்காவது மலராக மலர்வதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

மாணவர்களின் சிந்தனைகளை வகுப்பறைக்கற்பித்தல் என்ற குறுகிய வட்டத்திற்குள் அடக்கி ஒடுக்கி விடாது, ஆய்வு மனப்பாங்கினை வளர்க்கக் கூடிய வகையில் திசைப் படுத்தல் வேண்டும். அத்தகைய ஆய்வுச் சிந்தனைகள் கால ஓட்டத்தால் அழிந்து விடாது செயற் திறன் பெறுதல் வேண்டும். அந்த வகையிலேயே எமது கல்லூரி வர்த்தக மன்றத்தினர் ''வணிகத்தளிர்'' மூலம் தமது ஆக்கத் திறன்களை - அறிவுச்சிந்தனைகளை வெளிக்கொணர்ந்துள்ளனர். பாடப்பரப்பின் அறிவையும், புத்தம் புதிய அனுபவங்களையும் ஊட்டவல்ல பல விடயங்களை உள்வாங்கி இத் தளிர் வெளிவருகின்றது.

மாணவர்களை அவர்கள் திறமைக்கும் ஊக்கத்திற்கும் ஈடுபாட்டிற்கும் ஏற்ப உகந்த துறைகளுக்கு ஆற்றுப் படுத்தல்வேண்டும். அண்மைக்காலங்களிலே தொழிற்துறைகளிலே வர்த்தகக்கல்வியின் முக்கியத்துவம் உணரப்பட்டு விஞ்ஞானத்துறையில் புகுவதற்குத் தகுதியிருந்தும் பலமாணவர்கள் வணிகத்துறையையே தெரிவு செய்கின்றனர். இதன் வெளிப்பாடாக ஏனைய துறைகளைவிட வணிகத்துறைக்கு வெட்டும்புள்ளி உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

எமது கல்லூரி வர்த்தகப்பிரிவு தனிச்சிறப்புடையது. இம்மன்றத்தின் ஆக்கபூர்வமான செயல்கள் பெரிதும் பாராட்டற்குரியன. நெருக்கடி நிறைந்த இன்றைய சூழ் நிலையில் மனந்தளராது இந்த நான்காவது தளிரினையும் வெளியிட முன்வந்த வணிக மன்றத்தினரின் விடா முயற்சியைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

காலத்தின் தேவையை உணர்ந்து, பயனுறுதி மிக்க ஆக்கங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும் இத்தளிர் வர்த்தகக் கல்வியை மேற்கொள்வோர் அனைவருக்கும் பெரும் பயன் அளிக்குமென்பதில் ஐயமில்லை.

இம்மலரின் வெளிப்பாட்டுக்கு உறுதுணையாக இருந்த மன்ற நிர்வாக உறுப்பினர்களையும், பொறுப்பாசிரியரையும் வர்த்தகத்துறை ஆசிரியர்களையும் பாராட்டுவதுடன், இத் தளிரானது ஆண்டுக்கொரு முறை துளிர் விட்டு வணிகக் கல்விக்கு வளமூட்ட வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

அருட்சகோதரி யோலன்ட்
31 . 5 . 94

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUR PRINCIPAL



## Sr. YOLANDE

**B.A (Cey.), Dip. in. Ed, Dip. in. Mgt., M.A.(Ed.)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் கல்விப்பணிப்பாளரின் ஆசியுரை

யாழ்ப்பாணம், திருக்குடும்பக் கன்னியர் மடம் ஆங்கில வித்தியாலயத்தின் வர்த்தகத்துறை மாணவியர் மன்றத்தின் பெருமுயற்சியால் வணிகத்தளிரின் நான்காம் இதழ் வெளிவர இருப்பது கல்வி உலகோர்க்கு - குறிப்பாக வணிகத் துறையினருக்கு மகிழ்ச்சி தரும் நற்செய்தியாகும்.

மாணாக்கர் மருத்துவம், பொறியியல் போன்ற துறைகளிற் கற்பதற்குப் போட்டியிட்ட காலம் போய், இன்று வணிகத்துறைக்குப் போட்டியிடுகின்றனர். இம்மாணவர்களுக்கு வேண்டிய தகவல்களை உள்ளடக்கிய சஞ்சிகைகளைப் பல்வேறு கல்லூரிகளும் வெளியிடுவது மாணாக்கரின் அறிவுவிருத்திக்குப் பெரிதும் உதவுமென்பதில் ஐயமில்லை. இந்த வகையில் துறைசார்ந்த சிறப்புக் கட்டுரைகளைக் கொண்ட வணிகத்தளிர் வணிக மாணாக்கருக்காற்றும் சேவை போற்றுதற்குரியது.

பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெறுவோரிற் பலர் இலகுவிற் கிடைக்கும் ஆசிரியத் தொழிலையே நாடி நிற்கின்றனர். வணிகத்துறையினருக்கு தனியார் மற்றும் வங்கித் துறைகளில் சிறந்த வாய்ப்புக்களுள. வணிகமாணவர் தன்னம்பிக்கையுடன் இத்துறைகளிற் புகுந்து, வாழ்க்கையில் முன்னேற முடியும். அங்ஙனம் அவர்கள் முன்னேற வேண்டுமென விரும்புகிறேன். இவர்களால் எம் நாடும் இனமும் பலதுறைகளிலும் அபிவிருத்தியடைய வழியுண்டு.

வர்த்தகத்துறையில் தனி முத்திரை பதித்துள்ள இக் கல்லூரியின் பணி இடையூறின்றித் தொடர அருளுமாறு இறைவனை இறைஞ்சுகின்றேன். இப்பணிக்கு வேண்டிய வழிகாட்டலை வழங்கும் அதிபரையும் வர்த்தக ஆசிரியர்களையும் பாராட்டுகிறேன்.

இம்மலர் ஆண்டுதோறும் மலர்ந்து வணிக மாணாக்கருக்குத் தொடர்ந்து அறிவு மணம் பரப்ப வாழ்த்துகின்றேன்.

**செல்வி. தி. பெரியதம்பி**
கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம் - வலயம் - 1.
14 - 05 - 94

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்றப்பொறுப்பாசிரியையின் கருத்து

எமது கல்லூரியின் வணிகமாணவ மன்றத்தினர் ''வணிகத்தளிர்'' என்னும் வெளியீட்டின் நான்காவது மலரை வெளிக்கொணர்வது மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தருகின்றது. இந்தச்செயற்பாடானது மன்றத்தினரின் இடையறா உழைப்பையும் படிமுறை வளர்ச்சியையும் பறைசாற்றுகின்றது.

''தெய்வத்தால் ஆகா தெனினும் முயற்சி தன்
மெய்வருந்தக் கூலி தரும்'' – என்பது தமிழ் மறை தந்த குறள் நெறியாகும்.

தெய்வ சங்கற்பம் இல்லா விட்டாலும் முயற்சி செய்து செயற்பட்டால் சிறந்த பலனைத்தரும், என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.

ஏக்கமும், தாக்கமும், இல்லாமையும், இயலாமையும், பொல்லாத போர் அனர்த்தங்களும் எல்லாவகையிலும் எம்மைத் தாக்கும் இச்சூழலில், புவியில் பூக்கும் இயற்கை மலர்களே இடையில் உதிர்ந்து போகின்றன. அப்படியிருக்க, மாணவியராகிய எமது வணிக மன்றத்தினர் தனித்தும் ஒருமித்தும், தமது தளிர்க்கரம் நீட்டி வளங்களைப் பெற்றும், வாய்ப்புக்களைப் பயன்படுத்தியும், உளம் நிறைந்த ஆக்கங்களைப்படைத்தும், உணர்வு பூர்வமாக தமது பங்களிப்பைச் செய்து, நிறைவாக இவ் வணித்தளிரை - பசுங்கிளை ஓச்சிப் பயன் தரும் நற்கனிகளை - கட்டுரைகளாகவும் கருத்துருவங்களாகவும் படைத்தளித்திருக்கின்றனர்.

இந்த நன்முயற்சிக்கு எமக்கு வழிகாட்டியாக நெறிப்படுத்திய கல்லூரி அதிபர் அருட்சகோதரி யோலண்ட் அவர்களுக்கும், ஏனைய துறைசார் எமது கல்லூரி ஆசிரியைகளுக்கும் மன்றப்பொறுப்பாசிரியை என்ற வகையில் எனது உளமார்ந்த நன்றியைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்வதில் பெருமிதமும் பூரிப்பும் அடைகின்றேன்.

இம்மன்றம் இன்று போல் என்றும் அளப்பரும் பணியாற்றி வணிகத்துறை வளம் பெறவும், வாட்டமும், நலிவும் பெற்றுள்ள எமது மக்கள் நலம் பெறவும், உழைத்து, ஒப்பில்லாப் பெரும் புகழ் அடைய வேண்டுமென இறையருளை வேண்டி நிறைவு செய்கின்றேன்.

திருமதி. லெ. பரராசசிங்கம்
4 - 5 - 94

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்குழு - 1994



**இருப்பவர்கள் (இடமிருந்து வலம்)**

*திருமதி அன்ரனி, திருமதி சௌந்தரலிங்கம், திருமதி அச்சுதம் பிள்ளை திருமதி இராஜரட்ணம், திருமதி லெ. பரராசசிங்கம் (மன்றப் பொறுப் பாசிரியர்) சகோ. யோலண்ட் (அதிபர்), செல்வி அன்ரனீற்றா (தலைவர்) திருமதி ஜெயப்பிரகாசம் (உப அதிபர்), திருமதி குணம், திருமதி தெய் வேந்திரா, செல்வி பெனடிக்ற்.*

**நிற்பவர்கள் (இடமிருந்து வலம்)**

*செல்வி. வேஜினியா அஜந்தா வலன்ரைன் (பொருளாளர்), செல்வி. அமொறின் ஜோசப், செல்வி. பிரியம்வதா திலகநாயகம் போல், செல்வி. ஜரா காமலிற்றா சிவபாஸ்கரன் (செயலாளர்), செல்வி நிரஞ்சனி இம்மானுவேல், செல்வி. சுவின்றலா டிலைனி ரவீந்திரன், செல்வி. கொலஸ்ரிக்கா தார்சியஸ், செல்வி. றின்சி சாள்ஸ், செல்வி. நிகிலா சண்முகநாதன், செல்வி. விலயோகினி பாலச்சந்திரன், செல்வி. மாறி வனுதா அன்புராஜா.*

**சமுகமளிக்காதோர்**

*திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா, திருமதி சிவபாலன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தக மாணவ மன்ற செயற்குழு 1993

காப்பாளர் : அருட்செல்வி. யோலன்ட்
உபகாப்பாளர் : திருமதி. மே. தி. ஜெயப்பிரகாசம்
பொறுப்பாசிரியர் : திருமதி. லெ. பரராசசிங்கம்

துணையாசிரியர்கள் :

திருமதி. சி. இராஜரட்ணம்
திருமதி. ஆர். சி. சௌந்தரலிங்கம்
அருட்செல்வி. கனிசியஸ்
செல்வி. பூ. பெனடிக்ற்
திருமதி. எஸ். அன்ரனி
திருமதி. ர. அச்சுதம்பிள்ளை
திருமதி. நி. தெய்வேந்திரா
திருமதி. எஸ். சிறிஸ்கந்தராஜா
திருமதி. க. குணம்
திருமதி. ப. சிவபாலன்

தலைவர் : செல்வி. அனுசாந்தி யேசுதாசன்
உபதலைவர் : செல்வி. சுனித்திரா நவரெட்ணம்
செயலாளர் : செல்வி. நளினி கிருஸ்ணபிள்ளை
உபசெயலாளர் : செல்வி. சர்மிலா விஜயராஜா
பொருளாளர் : செல்வி. ரூபிக்கா தவநேசன்
உபபொருளாளர் : செல்வி. யமுனாறாணி பொன்னுத்துரை
இதழாசிரியர்கள் : செல்வி. தர்மினி யேசுதாசன்
செல்வி. அஞ்செலா சுரேஜினி யோசப்

விளம்பரப்பொறுப்பாளர் :

செல்வி. றொசானா ரட்ணசிங்கம்
செல்வி. நிமாலினி அன்ரனி
செல்வி. கிறிஸ்ரீன் செல்வநாயகம்
செல்வி. மாலினி மயில்வாகனம்

# வர்த்தக மாணவ மன்ற நிர்வாகக் குழு 1994

காப்பாளர் : அருட்செல்வி யோலன்ட்
உப காப்பாளர் : திருமதி. மே. தி. ஜெயப்பிரகாசம்
பொறுப்பாசிரியர் : திருமதி. லெ. பரராசசிங்கம்

துணையாசிரியர்கள் :

திருமதி. சி. இராஜரட்ணம்
திருமதி. ஆர். சி. சௌந்தரலிங்கம்
அருட்செல்வி. கனீசியஸ்
செல்வி. பூ. பெனடிக்ற்
திருமதி. எஸ். அன்ரனி
திருமதி. ர. அச்சுதம்பிள்ளை
திருமதி. நி. தெய்வேந்திரா
திருமதி. எஸ். சிறீஸ்கந்தராஜா
திருமதி. க. குணம்
திருமதி. ப. சிவபாலன்

தலைவர் : செல்வி. அன்ரனீற்றா அடைக்கலமுத்து
உபதலைவர் : செல்வி. நிரஞ்சனி இம்மானுவேல்
செயலாளர் : செல்வி. ஐரா காமலிற்றா சிவபாஸ்கரன்
உபசெயலாளர் : செல்வி. பிரியம்வதா திலகநாயகம் போல்
பொருளாளர் : செல்வி. வேஜினியா அஜந்தா வலன்ரைன்
உபபொருளாளர் : செல்வி. கொலஸ்ரிக்கா தார்சீசியஸ்
இதழாசிரியர் : செல்வி. மாறிவனுதா அன்புராஜா
: செல்வி. அமொறின் ஜோசப்

விளப்பரப்பொறுப்பாளர் :

செல்வி. நிகிலா சண்முகநாதன்
செல்வி. சுவின்றலா டிலைனி ரவீந்திரன்
செல்வி. றின்சி சாள்ஸ்
செல்வி. லீலயோகினி பாலச்சந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்றத்தின் உதிர்ந்த மலர்கள்



செல்வி செல்வமதி
ஜெனிபர் விஜயரட்ணம்
1994 A/L



செல்வி ஜனனி
யோகநாதன்
1991 A/L



செல்வி கலிஸ்ரா அன்ரன்
1992 A/L

*எதிர் பாராத வேளையில்*
*எமையெல்லாம் விட்டுப் பிரிந்து*
*காற்றினில் கலந்து*
*கன்னங்கள் நனையச் செய்த*
*அன்புச் சகோதரிகளுக்கு*
*அஞ்சலிகள் செய்கின்றோம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக் கழக அனுமதி பெற்றோர்

## 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் உயர்தரப் பரீட்சை

### வணிகவியல் துறை

1. செல்வி. கிறிஸ்ரல் சுஜாந்தி மோகனதாஸ்
2. செல்வி. மறிஸ்ரெலா மாறி சூசைப்பிள்ளை
3. செல்வி. லுசிண்டா தர்மினி செபஸ்தியாம்பிள்ளை

### கலைத் துறை

1. செல்வி. டொறின் பாக்கியநாதர்
2. செல்வி. றஜிதா செபஸ்ரியன்

## 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் உயர்தரப் பரீட்சை

### முகாமையியல் துறை

1. செல்வி. வீணா மனோகரபூபன்

### வணிகவியல் துறை

1. செல்வி. மேரி அனிற்ரா ஷிராணி சவரிமுத்து
2. செல்வி கசில்டா கிரேஸ் யேசுகுருநாதன்

### கலைத் துறை

1. செல்வி. பௌலினா மேரி ஸ்ரனிலஸ்

*என்றும் நீங்கள் இதுபோல்*
*வென்று வர வேண்டும்*
*வெற்றிகள் பல.*

*எங்கள் திருக் குடும்பமும்*
*தங்கத் திரு நாடும்*
*உங்கள் சேவையில்*
*உயர்ந்து, வளர்ந்து*
*புகழ் ஓங்கட்டுமே.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க. பொ. த. உயர்தரப்பரீட்சையில் 4 பாடங்களிலும் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைப் புள்ளி பெற்றோர் 1992

1. அமுதினி அஞ்சலீனா பாலையா
2. அனுத்தா மிரியம் பாலேந்திரன்
3. எழிலரசி நடராஜ்
4. எமறனிற்றா சுமதினி ஆரோக்கியநாதன்
5. இன்பென்ரா ஜெயசீலி அமிர்தநாதர்
6. ஜெயா மேரி கொண்சி அந்தோனிப்பிள்ளை
7. மரியற் லயனி சூசைப்பிள்ளை
8. மேரி அனற்ரி சிறானி சவரிமுத்து
9. நிரூத்தா ராஜரட்ணம்
10. பிரமிளா தியாகராஜா
11. ரஜனி திருச்செல்வம்
12. வாணிசிறி பொன்னுத்துரை
13. வீணா மனோகரபூபன்
14. அன்ரேமீடா யஸ்மி அந்தோனிப்பிள்ளை
15. ஆன் யஸ்மின் அந்தோனிப்பிள்ளை
16. கனிசி சுபாசினி சந்தியாப்பிள்ளை
17. கிருஷாந்தி யஸ்மின் அன்ரன் தங்கராஜ்
18. டெய்சியானா யேசுராஜன்
19. யசிந்தா நல்லையா
20. மெசியா ஆரோக்கியநாதர்
21. பமிலா நிஷாந்தினி யேசுதாசன்
22. பவூலினா மேரி ஸ்ரனிஸ்லோஸ்
23. கவிதா ஆனந்தராஜர்
24. சந்திரவதனி பாலச்சந்திரன்
25. மேரி ஜெனிற்றா டேவிட்
26. சர்மிலா பிரான்ஸிஸ்
27. ஒலிவற் ஜெனீவா கணேசன்
28. கசில்டா கிறேஸ் யேசுகுருநாதன்
29. சிலோஜினி லூயிஸ் அல்பிரட்
30. கிறிஸ்ரில் சுஜாந்தி மோகனதாஸ்
31. சுதர்சினி நாகராஜா
32. செலனா வசந்தராணி பரமநாதம்
33. மரிஸ்ரெலா மாறி சூசைப்பிள்ளை
34. ஜீன் பிரியா தர்சினி சின்னத்துரை
35. ஜெனற் கரோலின் வின்சலோஸ்
36. விட்வின் அனுசாலா அலெக்சாண்டர்
37. சிறானி கிறிஸ்ரபெல் இம்மனுவேல்
38. சுபாசினி பேரின்பநாயகம்
39. டொறின் பாக்கியநாதர்
40. மரியன் சுபாசினி றிச்சேட்
41. ஜெயகிறிஸ்ரா துரைசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க. பொ. த. உயதரப்பரீட்சையில் 4 பாடங்களிலும் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைப் புள்ளி பெற்றோர் 1993

1. அனுசாந்தி யேசுதாசன்
2. அஞ்சலா சுறேஜினி ஜோசப்
3. அனிற்ரா சுபோஜினி ஜோசப் செல்வநாயகம்
4. கனனேஸ்வரி சுந்தரலிங்கம்
5. யமுனா ராணி பொன்னுத்துரை
6. யூட்லியா சர்மிளா விஜயராஜா
7. கவிதா நடராஜா
8. மேரி சொபியா முத்துக்குமார்
9. நளினி கிருஷ்ணபிள்ளை
10. பிரகலா சண்முகம்
11. றெனிற்ரா தர்மினி யேசுதாசன்
12. சுனித்திரா நவரட்ணம்
13. சாந்தி டேவிற்
14. அனுத்தா மிரியம் பாலேந்திரன்
15. எழிலரசி நடராஜா
16. எமறென்சியா சுமதினி ஆரோக்கியநாதன்
17. ஜெயா மேரி கொண்சி அந்தோனிப்பிள்ளை
18. மரியற் லயனி சூசைப்பிள்ளை
19. நஜினி மகேந்திரராஜா
20. நியூத்தா ராஜரட்ணம்
21. பிரமிளா தியாகராஜா
22. றுசிக்கா ரூபினி யெஜசீலன்
23. சிவோன் வினோதினி அந்தோனிப்பிள்ளை
24. சோபனா கிறிஸ்ரி
25. புஸ்பநாயகி அருளானந்தம்
26. நொய்லின் தனுஜா செபஸ்ரியன்
27. அமிர்தநாயகி அந்தோனிமுத்து
28. காமலின் செறினா அல்பிரட்
29. யூலியற் வலன்ரீனா பிலிப்ஸ்
30. லுக்சினி குணபாலராஜ்
31. மாலினி மயில்வாகனம்
32. மரிஸ்றெலா செல்வரெட்ணம்
33. சாந்தகுமாரி துரைசிங்கம்
34. கிருஷாந்தி யஸ்மின் அன்ரன் தங்கராஜ்
35. டெய்சியானா யேசுராஜன்
36. யசிந்தா நல்லையா
37. பமிலா நிஷாந்தினி யேசுதாசன்
38. பிரியந்தி மரீனா டியோனியஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர்களின் எண்ணத்துளிகள்....

யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்தின் வணிக மாணவ மன்றம், தனது நான்காவது வெளியீடான, இத் தளிரை மிகுந்த களிப்புடன் தங்கள் கரங்களில் தருகின்றது.

தற்போதைய உயர்கல்விக் கற்கை நெறிகளை நோக்கும் போது வர்த்தகக் கல்வி தொடர்பான நெறிகளையே அதிக எண்ணிக்கையான மாணவர்கள் விரும்புகின்றனர். வாழ்க்கையின் நடைமுறையில் வர்த்தகக்கல்வியானது அவசியம் என்பது மாணவர்களால் உணரப்பட்டுள்ளது. அதே போன்று பல்கலைக் கழகம் புகுவதற்குப் புள்ளிகள் இத்துறைக்கு அதிகரித்து வருவதும் தெட்டத் தெளிவாகும். இதிலிருந்தே வர்த்தகக் கல்வியின் வளர்ச்சியும், மாணவர்களின் ஆர்வமும் புலனாகின்றது.

இவ் ஆர்வத்துக்கு ஈடுசெய்யக் கூடியவாறு தற்போதைய சூழ்நிலையில் தொலைத் தொடர்புச் சாதனங்கள், போக்குவரத்து, நேரடி அனுபவம் பெறக் கூடிய நவீன தொழில் நுட்ப சாதனங்கள் என்பன இம் மாணவர்களுக்கு முழுமையாக உதவுவதில்லை.

ஆனாலும், 'யானைப் பசிக்கு சோளப் பொரி' என்பது போன்று பாடசாலை வணிக மன்றங்கள் சஞ்சிகைகளை வெளியிட்டு வர்த்தகக் கல்விக்குப் பேருதவி புரிகின்றன. அச்சஞ்சிகைகளைப் பெற்றுப் பயன்படுத்துவது மாணவர்களின் ஆர்வத்தில் தான் தங்கியுள்ளது. இவ்வளவு பொருட்செலவுடன், எம் உழைப்பையும் சேர்த்து சஞ்சிகைகள் வெளியிடுகின்றோம். அவற்றால் ஏனையோரும் பயன் பெறும் போது தான் அது பயனுள்ள செயலாக அமைகின்றது. எனவே மாணவர்கள் இவ்வாறான சஞ்சிகைகளை ஆர்வமுடன் வாசிக்க வேண்டும். அப்போது தான் இச் சஞ்சிகை வெளியிடுகள் அர்த்தமுள்ளவையாக அமையும்.

விடாமுயற்சியுடனும், பொறுப்பாசிரியரின் ஊக்கத்துடனும், மகிழ்ச்சியாக அனைவரும் ஒன்று சேர்ந்து உழைத்து இத்தளிரைப் பிறப்பிப்பதில் பேருவகை அடைகின்றோம்.

எம்மை ஊக்கப் படுத்தித், தட்டிக் கொடுத்து, ஆலோசனைகள் வழங்கிய அதிபர், பொறுப்பாசிரியர், ஆசிரியர்கள், கட்டுரைகள் ஆக்கித்தந்த பெரியோர்கள் ஒத்துழைப்பு வழங்கிய மன்ற உறுப்பினர்கள், யாழ். புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தினர், இன்னும் பல்வேறு உதவிகள் புரிந்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எங்கள் மனம் நெகிழ்ந்த நன்றிகள் என்றுமே உரித்தாகும்.

நிலம் செழுமையாக்கி
வித்திட்டு, நீரூற்றி
கனிதரும் மரமாக
இத் தளிரைக்
காலங் காலமும்
எம் கல்விக் கூடத்தில்
வளர்ப்போம்.

— இதழாசிரியர்கள் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

**M. SINNATHAMBY**
B. A. B. Phil. Hons (Sri lanka)
M. A. (Jaffna) Dip. Ed. (Jaffna)
Lecturer in Education
Dept. of Education
University of Jaffna, Sri Lanka
Jaffna
Sri Lanka

# நீடித்திருக்கும் வளர்ச்சி (Sustaining Growth)

## — ஓர் நேர்காணல்

*யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. மா. சின்னத்தம்பி அவர்களுடன் எமது வர்த்தக மாணவ மன்ற உறுப்பினரான செல்வி. ஜரா காம லீற்றா சிவபாஸ்கரன் 15.03.94 பி.ப. 3.00 மணியளவில் மேற்குறிப்பிடப்பட்ட தலைப்பில் ஓர் நேர்காணல்.*

**1. வளர்முக நாடுகளில் காணப்படும் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான முக்கிய பிரச்சனைகள் எவை?**

இந்நாடுகளின் பொருளாதார கட்டமைப்பு அதன் இயல்புகளுடன் இணைந்ததாகவே இவற்றின் பிரச்சனைகள் பெரிதும் காணப்படுகின்றன. அவற்றை எளிமைப் படுத்தி பின்வருமாறு நிரற்படுத்த முடியும்.

1) விவசாயத்துறையில் மிகவும் குறைந்த விளைச்சல்
2) போட்டியிடும் தகுதியின்றிக் கைத்தொழில்கள் செயற்படுதல்
3) தொழில் நிறுவனங்கள் ஏனைய நிறுவன அமைப்புக்கள் சீரழிதல்
4) நாட்டுக்கான கடன் சுமை அதிகரித்துச் செல்லுதல்
5) சனத்தொகை வளர்ச்சியைவிட ஊழியப்படை வளர்ச்சி குறைவானதாயிருத்தல்
6) பொதுத்துறைத் தொழில்கள் திறமையற்ற முகாமையுடன் செயற்படுதல்
7) திருப்தியற்ற முதலீட்டுத் தெரிவுகள்
8) கீழ்மட்டத்தில் அபிவிருத்தியைத் தூண்டும் முயற்சிகளில் அதிக அக்கறை காட்டாமை
9) திருப்தியற்ற செயற்றிறனற்ற உட்கட்டமைப்புத்துறை
10) விலைத்தளம்பல் பெருமளவு சீரற்றதாதல், நாணயமாற்று விகிதங்களின் நிர்வாக முறை திருப்தியற்றதாதல்
11) திறமையற்ற வகையிலான வள ஒதுக்கீட்டு முறைகள்
12) இறக்குமதியிற் பெருமளவு தங்கியிருக்கும் தொழில் நுட்பங்களில் தங்கியிருத்தல்
13) நாட்டின் நுகர்ச்சியின் பெரும்பங்கு இறக்குமதியாகும் நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14) அரசின் திறமையற்ற பொருளாதார முகாமைத்துவம் போன்ற பலவற்றைக் குறிப்பிட முடியும். ஆனால் நாடுகளுக்கேற்ப இவற்றின் அளவும் சிக்கலான தன்மையும் காணப்படும்

## 2. அண்மைக்காலத்தில் ''நீடித்திருக்கும் வளர்ச்சி'' என்று குறிப்பிடுகின்றனரே, அதுபற்றிய அக்கறை ஏன் ஏற்பட்டது ?

வளர்முக நாடுகள் நீண்டகாலமாக வளர்ச்சி தொடர்பாக கையாண்ட பல கொள்கைகளும் நடவடிக்கைகளும் திருப்தியற்ற விளைவுகளையே உருவாக்கியுள்ளன. இதனால் முன்னைய கொள்கைகள் தொடர்பாக பல குறைபாடுகள் உணரப்பட்டுள்ளன

நாடுகளின் தொழிலின்மையும் வறுமையும் அதிகரித்துள்ளன. அரசாங்கங்களின் முதலீடு செய்யும் முயற்சிகளில் திறமையின்மை காணப்பட்டன. கோடிக்கணக்கான ரூபாய்கள் நட்டமாக உழைக்கப்பட்டன. தனியார்துறை தொடர்பாக நெகிழ்ச்சியுள்ள தெளிவான கொள்கைகள் கடைப்பிடிக்கப்படவில்லை

பொருளாதாரத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20% வரையிற் காணப்படும் முறைசாரத்துறைகள் தொடர்பாக அரசாங்கங்கள் போதிய கவனம் செலுத்தவில்லை. அபிவிருத்தி நடவடிக்கைகள் மேலிருந்து கீழ் நோக்கியதாக (Top - down approach) அமைந்திருந்தன. இதனால் கீழ்மட்டத்தில் சரியான தூண்டுதல்கள் அளிக்கப்படவில்லை.

உற்பத்தியை உயர்த்துவதில் செலுத்தப்பட்ட அளவு அக்கறை உற்பத்தித் திறனை உயர்த்துவதற்குப் பயன்படுதப்படவில்லை. உற்பத்தித்திறன் மேம்பாடு தொடர்பான நாட்டம் அதிக அளவில் இருக்கவில்லை. தொழில்வாய்ப்புக்கள்கூட உற்பத்தித் திறனுடையனவானதாக்கப்படவில்லை.

பொருளாதார உட்கட்டுமான அமைப்புக்களில் போதியளவு கவனம் சீராக காட்டப்படவில்லை. இது பல்வேறு துறைகளிலும் தாக்கங்களை உருவாக்கி இருந்தது.

மக்களின் இயலளவு, நிறுவனங்களின் இயலளவு என்பனவற்றை உயர்த்துவதில் போதியளவு கவனம் செலுத்தப்படவில்லை. மூலதன ஆக்கம் சேமிப்பு என்பனவற்றுக்கும் உழைப்பு, நிலம் போன்ற காரணிகளின் உற்பத்தித்திறனுக்குமிடையிலான தொடர்புகள் முக்கியமானவை. ஆனால் இவை கவனிக்கப்படவில்லை. இதனால் அபிவிருத்தி பெருமளவுக்கு பாதிக்கப்பட்டது.

இத்தகைய நிலைமைகள் பற்றி உலகவங்கியின் பொருளியலாளர்கள் கூடிய கவனம் செலுத்தினர். உபசகாரா நாடுகளின் அனுபவங்களையும் கூர்ந்து நோக்கியதன் விளைவாக நீடித்திருக்கும் வளர்ச்சி பற்றிய தேவையை வலியுறுத்தினர். லாண்டெல் மில்ஸ், ராம்கோபால், அகர்வாலா, ஸ்ரான்லி பீனீஸ் போன்றவர்கள் இக்கருத்துக்களை ஒரு தசாப்த காலப்பகுதிக்குள் வலியுறுத்தி வந்துள்ளனர்.

## 3. நீடித்திருக்கும் வளர்ச்சி என்பது பற்றி கருதப்படும் அடிப்படை அம்சங்களை விளக்குவீர்களா ?

நாட்டின் வளர்ச்சி அபிவிருத்தி என்பவற்றிற்கான பின்னணி நிலைமைகள் தொடர்பாக கூடியளவு கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பது இதில் முக்கியமான அம்சமாகும். இதன் அடிப்படையில் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதில் கூடியளவு கவனம் செலுத்தப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழிருந்து மேல்நோக்கிய (Bottom up) கொள்கை நடைமுறைகளில் கூடியளவு அக்கறை செலுத்த வேண்டும், என்பதற்கு முதன்மையான இடம் வழங்கப்படும்.

இதில் பின்வரும் அம்சங்கள் முக்கியமானவை.

1) சூழலை ஏற்றதாக மாற்றுதல்

விவசாயிகள் நிறுவனங்கள் என்போருக்கு ஊக்கம் வழங்கக்கூடிய நடவடிக்கைகளில் கவனம் செலுத்த வேண்டும். உற்பத்தி, உற்பத்தித்திறன் என்பனவற்றை மேம்படுத்தக்கூடிய சூழல் உருவாக்கப்படல் வேண்டும்.

இதற்குப் பின்வரும் அம்சங்களில் கவனஞ் செலுத்த வேண்டும்

**1:1)** வலுவுடைய பொருளாதார தூண்டுகைகளை வழங்கல்

பொருளாதார வளர்ச்சியடைந்த நாடுகள் முன்னேறுவதற்கு தூண்டுதல்கள் பெரிதும் பங்காற்றின. நாட்டின் கைத்தொழிலுக்கு எதிராக பாரபட்சமற்ற பாதுகாப்பு முறைகளைப் பிரயோகிப்பது விரும்பப்படுகிறது. விவசாயத்துறையில் விவசாய உற்பத்திகளின் விலை வீழ்ச்சியுறாதவாறு பார்த்துக்கொள்வதும் முக்கியமாகக் கருதப்படல் வேண்டும். ஏற்படும் செலவுகளை ஈடுசெய்யக்கூடிய வகையில், விலைகளை நிர்ணயம் செய்தல் வேண்டும்.

நிதிரீதியிலான, முதலீட்டு ரீதியிலான தூண்டுதல்களை வழங்கக்கூடிய வகையில், மெய்வட்டிவீதங்களை பேணுதல் அவசியம்

நாட்டின் மெய்க்கூலி வீதங்களை இயன்றளவு உற்பத்தித்திறனுடன் தொடர்பு படுத்தக்கூடிய நடவடிக்கைகளில் அதிகளவு கவனஞ் செலுத்த வேண்டும்.

பணவீக்க வீதங்கள் உயர்வடையும் போது வாழ்க்கைத்தரம் முதலீடு தொடர்பாகவும் சென்மதி நிலுவை தொடர்பாகவும் பாதகமான விளைவுகள் ஏற்படுகின்றன. இவை உற்பத்தித் துறைகளுக்கு எதிரான நிலமைகளை ஏற்படுத்துகின்றன. இதனால் இயன்றளவுக்கு ஒழுங்குபடுத்தப்பட்ட நாணய இறைக் கொள்கை மூலமாக பண வீக்க வீதம் உயராமல் பாதுகாப்பது அவசியமாகும்.

இவை அனைத்திலும் கவனம் செலுத்தினால் பொருளாதாரம் வளர்வதற்கான தூண்டுதல்கள் அதிகரிக்கும்.

1:2) போதுமான அளவு பௌதீக உட்கட்டமைப்பை உருவாக்குதல்

பொருளாதாரம் உறுதியான முறையில் வளர்க்கப்பட வேண்டுமானால் செயற்திறனுடையதாக பொருளாதார உட்கட்டமைப்பு விருத்தி செய்யப்படுதல் வேண்டும்

தொழில் நிறுவனங்களுக்கான செலவுகளைக் குறைக்கவும் இலாபத்தகுதியை அதிகரிக்கவும் கூடிய வகையில் வீதிகள், செயற்திறனுடைய துறைமுகங்கள், நம்பகமான போக்குவரத்து வாகனங்கள் போன்றவற்றை ஏற்படுத்தல் வேண்டும்

அத்தியாவசிய தேவைகள் ஏற்பட்டாலன்றி புதியவற்றை நிர்மாணிப்பதில் அதிகளவு முதலிடல் கூடாது. இயன்றளவு புனரமைப்பு விரும்பத்தக்கது. உட்கட்டுமானத்துக்கான செலவுகளுக்கென மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6% வரையில் இருத்தல் விரும்பப்படுகின்றது.

உட்கட்டமைப்பு தொடர்பாக திறமையான முகாமைத்துவம் தேவை.

இந்த அம்சங்களுக்கு கூடியளவு அக்கறை செலுத்த வேண்டுமெனப் படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. நீடித்திருக்கும் வளர்ச்சியுடன் ''இயலளவினை உருவாக்குதல்'' எவ்வாறு இணைகிறதென விளக்க முடியுமா ?**

பெரும்பாலான வளர்முக நாடுகளின் அரச துறைகளின் பலவீனங்கள் தொடர்பாக இயலளவு தொடர்பான விடயம் முக்கியமானதாக வற்புறுத்தப்படுகின்றது.

ஆபிரிக்க நாடுகள், இலங்கை போன்றவற்றில் அரசதுறைகளின் செயற்பாடு திருப்தி தருவதாக அமைந்திருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

இயலளவினை உருவாக்குதல் என்பது அரசாங்கம் பொது நிர்வாகத்தை சீரானதாக்கி கொள்கைகளைத் தெளிவாக ஆராய்ந்து அரசாங்கம் பொருளாதார முகாமைத்திறனை உயர்த்த வேண்டும் என்பதனைச் சுட்டுகின்றது.

அரசதுறை இயங்குவதானால் தெளிவான கொள்கை சுதந்திரமான முகாமை என்பவற்றை தீர்மானித்தல் வேண்டும். சுதந்திரமான உள்ளூராட்சி அமைப்புக்கள் ஈடுபடுவதற்கும் அனுமதி வழங்கலாம்.

கிராமிய மட்டத்தில் உள்ளூர்ச்சேவைகளை சிறப்பாக மேற்கொள்ள உதவ முடியும். வறியோர், பெண்கள் போன்றோரின் நிர்வாக ஒழுங்கமைப்பு முயற்சிகளில் கவனம் செலுத்த வேண்டும் என்பதையும் இது குறிப்பிடுகின்றது.

அரசசார்பற்ற பல நிறுவன அமைப்புக்களை விவசாயிகள் தொடர்பான பணிகளில் ஈடுபடுத்துவதற்கும் ஊக்கம் வழங்க முடியும்.

அரசதுறையிலான நிர்வாக ஊழல்கள் திறமையின்மைகளை அகற்றுவதும் நாட்டின் இயலளவினை உயர்த்த உதவும். இவற்றால் நீடித்திருக்கும் வளர்ச்சி ஏற்பட முடியும்.

**5. நீடித்திருக்கும் வளர்ச்சியானது மனிதமுதலீட்டுடன் எவ்வாறு தொடர்புபடுகிறதென விளக்குவீர்களா ?**

இந்நாடுகளின் அபிவிருத்திக்கு பெரிதும் உதவக்கூடியவர், மக்கள் தொகையினராவர். மனிதவளம் பிரதானவளமாகவும் அமையும். அவ்வாறு மக்களை வளமாக மாற்றுவதற்கு ஏற்ற வகையில் மக்களில் முதலிடல் - மக்களுக்குச் செலவிடுதல் வேண்டும்.

மனிதர்களை உற்பத்தித் திறனுடையவர்களாக்குவதற்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8% வரையிற் செலவிடுதல் அவசியம் என உலகவங்கி கருதுகிறது. உணவுப் பாதுகாப்பு, நலத்துறைவசதி, கல்விவசதி ஒவ்வொருவருக்கும் வழங்கப்படல் வேண்டும். வசதியுடையோரிடம் இவற்றை வழங்குவதற்குக் கட்டணம் அறவிடலாம் அது ஏழைகளுக்குக் கூடுதலான சேவைகளை வழங்குவதற்குப் பயன்படும்.

வறுமையைத் தவிர்க்கும் வகையிலும் இவைபற்றித் தீர்மானித்தல் வேண்டும். பெண்கள் குழந்தைகள் மேம்பாட்டில் விஷேட கவனம் செலுத்த வேண்டும்

இவ்வாறு மனிதரில் முதலிட்டு வளமாக்கினால் நீடித்த வளர்ச்சிக்கு அடிப்படையில் அவை உதவும்

**6. இவற்றுடன் உற்பத்திப் பெருக்கம் தொடர்பான கருத்து எவ்வாறு பிணைக்சப்படுகின்றது அதுபற்றி சுருக்கமாகக் கூறமுடியுமா ?**

இந்நாடுகளின் வளர்ச்சிக்கு அடிப்படையாக உற்பத்திப்பெருக்கம் தேவை என வலியுறுத்தப்படுகின்றது. விவசாய, கைத்தொழிற் துறைகளிலான உற்பத்திப் பெருக்கத்தை தூண்டவேண்டுமென்று கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயத்துறை ஆராய்ச்சி, தொழில்நுட்ப விரிவாக்கம், பயிற்சிமுறை, பரிசோதனைமுறை என்பனவற்றை ஊக்குவித்து விவசாயத்துறையின் வளர்ச்சியை வருடாந்தம் 4% மாகப் பேணுதல் வேண்டும். இதில் தனியார்துறை முழுமையான ஊக்கத்துடன் செயற்படுதற்கு இடமளித்தல் அவசியம். உள்ளீடுகளை வழங்குதல் வெளியீடுகளைச் சந்தைப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளில் தனியார் துறையினர் சுதந்திரமாக ஈடுபடல் ஊக்குவிக்கப்படல் வேண்டும்

வளர்முக நாடுகள் உலக விவசாயப் பொருட்சந்தையின் போட்டிவிலைப் போக்கு என்பவற்றை அனுசரித்து பழவகைகள், பூக்கள், காய்கறிகள் போன்றவற்றில் கவனம் செலுத்துவது விரும்பப்படுகிறது.

கைத்தொழில் துறையிலும் அரசு தன் பங்கினைக் குறைத்துக் கொண்டு உள்நாட்டு, வெளிநாட்டு, தனியார் ஈடுபட ஊக்கமளித்தல் அவசியம். உள்ளூர்க்கைத்தொழில்களை உள்நாட்டுச் சந்தையுடன் பிணைக்கும் முயற்சிகளிலும் கவனம் செலுத்த வேண்டும்

விவசாயத்துறை, கைத்தொழில் துறை என்பவற்றிற்கிடையில் இணைப்பை ஊக்குவித்தலும் அவசியம். முறைசாராத்துறைகளின் பங்கினை அதிகரிக்கக்கூடியதாகவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**7. நாடுகள் நீடித்தவளர்ச்சியைப் பெறுவதில் சர்வதேசரீதியிலான தொடர்பும், ஒத்துழைப்பும் பற்றிய நிலைமைகள் பற்றியாது கூறுவீர்கள் ?**

வளர்முகநாடுகள் மூடப்பட்ட வகையிலான நடவடிக்கைகளில் மாத்திரம் கவனம் செலுத்துவது பயனளிக்காதெனக் கூறுகின்றனர். பிரதேச ரீதியிலான ஒத்துழைப்பு முயற்சிகளில் கவனம் செலுத்துவது அவசியமாகின்றது. உயர்கல்வி ஆராய்ச்சி தொழில்நுட்பப் பயிற்சி என்பவற்றைப் பெறக்கூடிய தரமான நிலையங்களை விருத்தி செய்து கொள்ள வேண்டும்.

வெளிநாடுகளிலிருந்து இயன்றளவு தனியார்துறை முதலீடுகளை விவசாய* உட்கட்டுமான அபிவிருத்தி தொடர்பாகவும், மனிதவள அபிவிருத்தி தொடர்பாகவும் பெறுவது ஊக்குவிக்கப்படுகிறது.

வளர்முகநாடுகள் இயன்றளவு சலுகைக்கடன்களையும் நீண்டதவணைக் கடன்களையும் பெறுவது ஊக்குவிக்கப்படும் நிலமைகளை தமது நாடுகளில் வளர்க்க வேண்டும் இந்நாடுகள் தமது வளங்களை விரயமாக்காமலும் இயலளவினைப் பெருக்குவதில் அக்கறையுடனும் செயற்பட்டால் மாத்திரமே உதவிகளை வழங்கும் நாடுகள் உதவி செய்வார்கள்

**8. இக்கோட்பாட்டில் சுற்றுச்சூழல் தொடர்பான அம்சங்கள் பற்றி என்ன கூறமுடியும்?**

பொதுவாக தேசிய வருமானம் அதிகரித்தல் வளர்ச்சி என்று கூறப்படும் போது வளங்களில் விரயம், அழிவு ஏற்படும் என்பது கருத்தாகிறது, இதனால் இயற்கைச் சூழலினால்பெறப்பட்ட மெய்வருமானம், நேரடி நலன்கள் என்பன இல்லாமற் போய்விடும். முன்பு தேசிய வருமான அதிகரிப்பு என்பது காடுகளை அழித்து நெல் உற்பத்தி செய்தல், புல் நிலங்களை எரித்து வதிவிட வீடுகளை நிர்மாணித்தல் என்பதாக அமைந்தது. அதில் நெல் உற்பத்தி, வீடுகளின் அதிகரிப்பு மாத்திரமே கவனிக்கப்பட்டன. அழிக்கப்படும் காடுகள், புல் நிலங்கள் பற்றிய மதிப்பீடுகள் கவனிக்கப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது நிலமண்ணரிப்பு, இயற்கையான வதிவிட இழப்பு, வளிமண்டல அசுத்தமாக்கல் போன்ற எண்ணக்கரு முக்கியமானதாக நீடித்திருக்கும் வளர்ச்சியில் இணைக்கப்பட்டுள்ளது. சூழல் கண்காணிப்பு பற்றிய அக்கறை முன்பு பொருளாதார வளர்ச்சி நடவடிக்கைகளுடன் இணைத்து நோக்கப்படவில்லை.

மீன்பிடித்துறை வளர்ச்சியைக் கணித்த போது கடல் நீர் அசுத்தமாதல் அதன் தொடர் இழப்பீடுகள் பற்றியெல்லாம் அக்கறை செலுத்தவில்லை. ஆனால் இலங்கை போன்ற சிறிய தீவுப் பொருளாதாரங்களின் வளர்ச்சியில் மிகப் பெரிய பாதிப்பை இவை ஏற்படுத்துகின்றன.

இவ்வாறே மண்வள இழப்புக்களும் பல வகையில் இடம்பெறுகின்றன. மண்ணரிப்பு, உவர் நிலமாதல், ஈரத்தன்மை இழத்தல், கனிமண்களை இழத்தல், சதுப்பு நிலமாதல் போன்ற பலவகையில் பாதிக்கப்படுகின்றன. வேளாண்மை உற்பத்தியை தேசிய உற்பத்தியில் பிரதானமாக எதிர்பார்க்கும் இலங்கை போன்ற விவசாயப் பொருளாதாரங்களில் இத்தகைய இழப்புக்கள் மதிப்பிடப்பட்டு, அவற்றைக் குறைப்பது பற்றிய நடவடிக்கைகள் வளர்ச்சி செய்முறைகளுடன் இணைக்கப்படல் வேண்டும் என்பது நீடித்திருக்கும் வளர்ச்சி பற்றிய கருத்தியலில் முக்கியமானதாயுள்ளது.

சுற்றுச் சூழல் பாதிப்பு மனிதவள விருத்தியைப் பாதிப்பதன் மூலமாகவும் வளர்ச்சியைத் தடை செய்துவிடும். குழந்தைகளின் உடல் நலன், விளையாட்டுத்திடல்களினால் அவர்கள் பெறும் மகிழ்ச்சி, சுகாதாரமான காலநிலைகளினால் ஏற்படும் உற்பத்தி வினைத்திறன் அதிகரிப்பு என்பவற்றை சுற்றுச் சூழல் சிதைவு பெரிதும் பாதித்து விடுகிறது. இதனால் உற்பத்தியைப் பெருக்கும் மனித வளத்தின் மீது பாதகமான விளைவை உருவாக்கிவிடும்.

பொருளாதார வளர்ச்சி பலசமயங்களில் பல நாடுகளில் இயற்கைச் சூழலை நாசப்படுத்தி சமநிலையைக் குழப்பியுள்ளது. இதனால் அந்நாடுகளின் நீண்டகால பொருளாதார வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டது. இதனாலேயே நீடித்திருக்கும் வளர்ச்சியின் போது ஏற்படும் சுற்றுச் சூழல் இழப்பீடுகளும் கணிக்கப்படுகின்றன. பௌதிக நாணயமல்லாத, நாணய வடிவங்களில் இழப்பீடுகள் கணிக்கப்பட்டு தேசிய வருமானம் திருத்தமான முறையில் கணிக்கப்படுவதில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

### 9. முடிவாக ஒரு கேள்வி: நீடித்திருக்கும் வளர்ச்சியை உருவாக்க வளர்முக நாடுகள் நீண்டகாலத்தில் கவனம் செலுத்த வேண்டியன பற்றிச் சுருக்கமாகக் கூறுவீர்களா?

நீண்ட காலத்தில் சூழலைப் பொருத்தமானதாக்கி அதனைப் பேணும் வகையில் பின்வரும் நடவடிக்கைகளில் வளர்முக நாடுகள் கவனம் செலுத்த வேண்டும்.

1) உட்கட்டமைப்பு, அவற்றின் மாற்றங்கள் தொடர்பாக தொடர்ச்சியான அவதானம் தேவை

2) மக்களை மையப்படுத்திய தந்திரோபாயங்களுக்கு முதன்மையளித்தல் வேண்டும்; மனிதவளவிருத்திக்கான செலவுகளை இரட்டிப்பாக்க வேண்டும்.

3) தனியார் முதலீடு, முறைசாரத்துறைகள் உட்கட்டமைப்பு சேவைகள் தொடர்பான கொள்கைகள் அக்கறையுடன் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

4) விவசாய ஆராய்ச்சி, விரிவாக்கசேவை, குடும்பக்கட்டுப்பாடு, சூழல் பாதுகாப்பு, என்பவற்றில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) பிராந்திய ஒத்துழைப்பு ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளில் ஆர்வத்துடன் ஈடுபட வேண்டும்.

6) வெளிநாடுகளுடனான நல்லுறவைப் பேணுவதும் அவற்றிடமிருந்து உதவி பெறுவதற்கான விஷேட திட்டங்களில் கவனம் செலுத்துவதும் அவசியம்

7) இத்தகைய வளர்ச்சி நிலைமைகளின் போது ஏற்படக்கூடிய இயற்கைவளம் இயற்கைச் சூழல் தொடர்பான இழப்புக்களை ஈடுசெய்வதற்கான தொழில்நுட்பஉதவிகளையு பெற்றுக்கொள்ள வேண்டும். உலகரீதியான சூழலின் வசதியமைப்பு (The global Environment facility) என்பதிலிருந்து இயன்றளவு உதவிகளைப் பெற்று தமது இழப்புக்களை ஈடுசெய்து கொள்வதிலும் கூடிய அக்கறையுடன் செயற்பட வேண்டும்.

## 10. இலங்கையில் இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா?

ஆம்.

குறிப்பாக 1980 களின் பின் பல்வேறு நடவடிக்கைகள் இதே நோக்குடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் பின்வருவன குறிப்பிடத்தக்கன.

1) அரசாங்கம் நேரடியாக தொழில்களில் முதலிடுவதை நிறுத்தியுள்ளதோடு, அவற்றை மக்கள்மயப்படுத்தல் மூலமாக தனியார் துறைக்கு மாற்றிவருகிறது

2) அரசாங்கம் மூலதனமாற்றங்களாகப் பெருமளவு மூலதனத்தை உட்கட்டமைப்பு விரிவாக்கத்தில் செலவிட்டுள்ளது. துறைமுக, விமானநிலைய விஸ்தரிப்பு. பெருந் தெருக்கள் பாதைகள் அமைத்தல், தொடர்பாடல், சாதனவிருத்தி போன்றவற்றில் அதிகம் முதலிட்டு வருகிறது.

3) இயன்றளவு வீட்டுத்துறை மாற்றங்களைக் குறைத்து வருகின்றது. வசதிமிக்கவர்கள் கட்டணம் செலுத்தி சமூகத்துறைகளைப் பயன்படுத்த வகை செய்துள்ளது அதேசமயம் வறியோருக்கான உதவு தொகைகளை தெளிவு படுத்தி மட்டுப்படுத்துகிறது

4) வெளிநாட்டு மூலதனத்தை அபிவிருத்திக்குரிய வளமாக பயன்படுத்துவதற்கேற்ற வகையில் பணச்சந்தை, மூலதனச்சந்தை, பங்குச்சந்தை, செலாவணிச்சந்தை என்பவற்றை விரிவுபடுத்துவதில் ஊக்கத்துடன் செயற்படுகின்றது

5. கைத்தொழில் மயமாக்க முயற்சியில் உள்நாட்டு, வெளிநாட்டு தனியாருக்கு போதிய ளவு ஊக்கத்தையும் வழங்கிவருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

விரிவுரையாளர் அவர்களே, தாங்கள் தங்கள் சிரமத்தையும் பாராது எமது நேர் காணலுக்கு நேரம் ஒதுக்கித்தந்து ''நீடித்த வளர்ச்சி'' என்னும் பொருள் பற்றி பொருத்தமான வகையில் தங்கள் துறைசார் புலமை வெளிப்பட நுணுக்கமாகப் பதில் இறுத்து எமது சந்தேகங்களைத் தீர்த்து உதவியதற்காக எமது கல்லூரி வர்த்தக மன்றத்தின் சார்பில் உளமார்ந்த நன்றியைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் அரசவருமானத்தில் வரி அரசிறையின் பங்கும் அதன் முக்கியத்துவமும்

வரவு செலவுத் திட்டமானது ஒவ்வொரு நாட்டினதும் பொருளாதார கொள்கைகளை முன்னெடுத்துச் செல்லும் திட்டமாக அமைகின்றது. ஒவ்வொரு நாட்டினது அரசாங்கமும் அந்நாட்டினை துரித அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்லக் கூடியதாக பல அபிவிருத்தி திட்ட, செயற்பாடுகளை முன்வைத்து வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கும். அப்போது அங்கு வரவு என்றபதம் அரசாங்கத்தின் அரசிறையை குறிப்பதாக அமைகின்றது இவ் அரசிறை மூலமே அரசாங்கம் செலவினங்களை மேற்கொள்கின்றது. எனினுமஉலகிலே எல்லாநாடுகளின் வரவுசெலவுதிட்டமும்வரவுக்கு ஏற்ப செலவாக அமையாது. இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும்நாடுகளிலும் அரசிறையில் முக்கியபங்கு வகிப்பது வரி அரசியிறை யாகும். எனினும் ஏனைய நாடுகளிலும் அரசிறையில் முக்கிய பங்கை வகிப்பது வரி அரசிறையே என்பதைப் பின்வரும் அட்டவணை தெளிவுபடுத்துகிறது.

இலங்கையில் 1980 களின் நடுப்பகுதியைத் தவிர சமீப காலமாக ஏறக்குறைய 90% அரசறைக்கு வரி அரசிறையே பொறுப்பாக அமைந்துள்ளது.

| நாடுகள் | மொத்த அரசிறையின் சதவீதமாக | |
|---|---|---|
| | 1972 — 1990<br>வரி அரசிறை | 1972 — 1990<br>வரியல்லா அரசிறை |
| இலங்கை | 91·3 — 90·5 | 8·7 — 9.5 |
| இந்தியா | 86.8 — 80·1 | 13.2 — 19.9 |
| பாகிஸ்தான் | 84·2 — 73·1 | 15.8 — 21.9 |
| மலேசியா | 78·8 — 74.8 | 21·2 — 25.2 |
| ஐக்கிய இராச்சியம் | 89·2 — 90.4 | 10·8 — 9.6 |
| அவுஸ்திரேலியா | 87.5 — 90.7 | 12·5 — 9·3 |
| நெதர்லாந்து | 95.3 — 91.0 | 4.7 — 8.6 |
| கனடா | 89.1 — 91.0 | 10.9 — 9.0 |
| ஐக்கிய அமெரிக்கா | 94.3 — 92.1 | 5·7 — 7·9 |
| யப்பான் | 97.6 — 94.4 | 2.4 — 5.6 |

இன்று உலகிலே அனேகமான நாடுகள் அரசிறையில் 78 - 95 % அரசிறையை வரி அரசிறையிலிருந்து பெறுகின்றன.

World Development Report—1992

இலங்கை அரசானது சமூக நலன் நோக்கிலே இலவசக்கல்வி, இலவச சுகாதார மருத்துவ வசதிகள், வீடமைப்பு போசாக்கு போன்ற சமூக நலன் துறைகளிலும் பொருளாதார உள்ளமைப்பிலும் பலமுதலீடுகள் செய்ய வேண்டியுள்ளது. இது இலங்கைக்கு மட்டுமன்றி எல்லா நாடுகளுக்குமே பொருந்தும். இத்தகைய பொருளாதார குறிக்கோள்களை எய்துவதற்காகவும் வேலையின்மை வறுமை நிலை அகற்றல், வருமான சமமின்மையை குறைத்தல், வருமான மறு பங்கீடு ஆகியவற்றை சீர்செய்யவும், அரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையான வளங்களை ஒதுக்கீடு செய்து உச்சப் பயனைப் பெறவும் வரி விதிப்பின்மூலம் அரசிறை திரட்டுதல் எல்லாப் பொருளாதாரங்களுக்கும் இன்றியமையாததாக உள்ளது. இவற்றின் பின்னணியாக இலங்கையின் வரியமைப்பு, பிரதான வரிகள். அவற்றின் சார் பளவான பங்களிப்புகள் கடந்தகால மாற்றங்கள் என்பன இக்கட்டுரையில் ஆய்வுசெய் யப்படுகின்றன.

## இலங்கையின் பிரதான வரி வகைகள் :

1. வருமானங்கள் மீதான வரிகள் (Taxes on Income)
2. சொத்துக்கள் மீதான வரிகள் (Taxes on property)
3. பொருட்கள் பணிகள் மீதான உள்நாட்டு வரிகள் (T axes on Domestic goods and Services)
4. சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் (Taxes on International Trade)
5. ஏனைய வரிகள் miscellanious Taxes)

என இவ்வாறாக வகைப்படுத்தப்படும். எனினும் நேர்வரி, நேரில்வரி என வரியினை இரு வகைப்படுத்தலாம். நேர்வரி என்பது வருமானங்கள், சொத்துக்கள், செல் வங்கள் மீது விதிக்கப்படுகின்ற வரியாகும். இங்கு வரிப் புரட்டுகை காணப்படமாட் டாது. நேரில் வரி என்பது பொருட்கள் சேவைகள் மீது விதிக்கப்படும் வரியாக அமை யும். இங்கு வரிப்புரட்டுகை காணப்படும். அதாவது ஒருவர் மீது வேறு ஒருவர் (நுகர் வோர் மீது உற்பத்தியாளர்) வரியின் ஓர்பகுதியையோ அல்லது முழுவதையுமோ சுமத்தி விடுவர், இவ்வாறு உற்பத்தியாளர் வரியை நுகர்வோர் மீது சுமத்துவதன் அளவு அப் பொருளின் கேள்வி நெகிழ்ச்சியில் தங்கியிருக்கும். இலங்கையின் மொத்த அரசி றையில் நேர் வரி 20% மாகவும், நேரில் வரியின் பங்கு 80% மாகவும் காணப்படுகிறது.

### நேர் வரிகள்

#### 1. வருமானவரிகள்

இலங்கையில் வருமான வரிகள் 1932-ம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்டன. 1979-ம் ஆண்டு 28-ம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின்படி தற்போதைய வருமான வரிகள் விதிக்கப்படுகின்றன. ஒரு தனிநபரின் வருமானங்கள், பங்குலாபங் கள் என்பவற்றின் மீது குறித்துரைக்கப்பட்ட அளவு வீதங்களில் அறவிடுவதே வருமான வரியாகும். இங்கு இலாபங்கள், வருமானங்கள் என கருதப்படுபவை ஊழிய வருமானம் தொழில் முயற்சியிலிருந்து கிடைக்கும் இலாபங்கள், கட்டிடம் சொத்துக்கள் என்பவற்றி லிருந்து கிடைக்கும் தேறிய ஆண்டுப் பெறுமதி வாடகை, பங்குலாபம், வட்டி வரு மானங்கள் என்பன அடங்கும். இந்த வகையில் இலங்கையின் வருமான வரியை பின் வருமாறு வகுக்கலாம்.

#### 1. தனியார் வருமான வரிகள்

1992-ம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தின்படி தனியார் வருமானவரியின் விலக் கெல்லை 42000/- வாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதலாவது 42000க்கு வரியில்லை அடுத்த 21000க்கு 10% மும் அடுத்த 24000 20% மும், அடுத்த 24000ற்கு 30% மும் மிகுதி வருமானத்திற்கு 35% மாக வருமானவரி அறவிடப்படுகின்றது. அரச ஊழியர் கள் இவ்வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர்.

ஊழிய வருமானம் பெறுபவர்களுக்கு ஓர் வரி விடுதொகையினை 1990-ம் ஆண்டு அரசாங்கம் அறிவித்தது. 1992-ம் ஆண்டு வரவுசெலவு திட்டத்தின்படி இவ்வரி விடுதொகை 1800/- வாக நிர்ணயிக்கப்பட்டது.

#### 2. கம்பனிகள் மீதான வரிகள் (Corporate Income Tax)

கம்பனிக் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அனைத்துக் கம்பனிகளும் இலா பம் பங்குலாபவரி என்பவற்றைச் செலுத்த வேண்டும். பொதுக் கூட்டுத் தாபனங் களும் அரசால் பொறுப்பேற்கப்பட்ட நிறுவனங்களும் கூட இதில் அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. ஆட்கள் குழு (Body of Persons)

அங்கிகரிக்கப்பட்ட தரும நிறுவனங்கள், சிக்கன நலன்புரிச் சங்கங்கள், சேம லாப நிதியங்கள் ஆகியவற்றுக்கு வரவுக்கு 42000/- தொகை கழித்தபின் எஞ்சிய வற்றுக்கு 10% வரி விதிக்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் மீது 20% வரி விதிக்கப் படுகிறது.

2. மத்திய வங்கியிடமுள்ள திறைசேரி உண்டியல்கள் மீதான வரிகள்

மத்திய வங்கியினால் வைத்திருக்கப்படும் திறைசேரி உண்டியல்களின் முகப்பெறு மதியில் 9% மீளளிப்பு செய்யப்படாது நிறுத்தி வைத்தல் வரி அறவிடப்படுகின்றது.

3. சொத்துக்கள் மீதான வரிகள்.

இலங்கையிலுள்ள இவ் வரிகள் பின்வரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது.

அ. மரணச் சொத்துவரி
ஆ. நன்கொடை வரி
இ. செல்வ வரி
ஈ. முத்திரை வரி

(அ, ஆ, இ) இம்மூன்று வரிகளும் நீக்கப்பட்டுள்ளன.

இம்மூன்று வரிகளும் நீக்கப்பட்டமைக்கான காரணம் இவற்றின் சேகரிப்பு குறைவாக அமைந்ததனாலும், நிர்வாகச் செலவு அதிகரித்துக் காணப்படுதல் ஆகிய காரணங்களினாலும் ஆகும்.

செல்வ வரி.

இலங்கையிலுள்ள ஒருவர் அவருடைய அசைவுள்ள அசைவற்ற ஆதனம் இலங் கைக்கு வெளியேயுள்ள அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்கள் மீது வதிவற்றவர் (Non Resident) ஆயின் இலங்கையிலுள்ள அசைவுள்ள அசைவற்ற ஆதனங்கள் மீது வரி செலுத்த வேண்டும். ரூபா 500,000 க்கு மேல் ஆதனம் உள்ளவர்கள் விருத்தி முறையில் வரி செலுத்த வேண்டும். இதுவும் 92/93-ல் இல்லா தொழிக்கப்பட்டுள்ளது.

முத்திரைத்தீர்வை வரி.

1909-ல் இத்தீர்வை அறிமுகம் செய்யப்பட்டது. இது பின்வருவனவற்றில் விதிக்கப்படலாம்,

1. மாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் ஒவ்வொன்றின் மீதும்
2. நாணயக் கடிதங்கள் ஒவ்வொன்றின்மீதும்,
3. பங்குலாபங்களின் போதும் கைமாற்றல் செய்யும்போதும்,
4. ஆதனம் ஒன்றைக் கைமாற்றம் செய்யும் போதும்,
5. வைப்புச் சான்றிதழின் ஆண்டுக்காண்டு வைப்பாளர் முத்திரைத்தீர்வை செலுத்த வேண்டும்.

சொத்துக்கள் மீதான வரியில் எஞ்சிநிற்பது இம்முத்திரை வரிமட்டுமே,

நேரில் வரி

1. பொருட்கள் பணிகள் மீதான வரிகள்.

இலங்கையில் மொத்தவிற்பனை வரி கலால்வரி என்பன இதனுள் அடங்கும். பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு, விற்பனவு செய்யும் போது இது விதிக்கப்படும்.

2. சர்வதேச வர்த்தக வரிகள்.

சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் இறக்குமதி, ஏற்றுமதி போன்றவற்றில் ஈடுபடும் பொருட்கள் மீது தீர்வை அறவிடுதல் ஆகும். இதற்கென 1869-ல் இலங்கை சுங்கத் திணைக்களம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இத்திணைக்களமானது ஏற்றுமதிகளின் போதும் இறக்குமதிகளின் போதும் பொருட்களின் அளவு அதன் பொருளாதார முக்கியத்துவம் என்பவற்றுக்கிணங்க தீர்வை விதிக்கப்படும்.

3. மாகாண சபைகளால் விதிக்கப்படும் வரிகள்.

மாகாண சபைகள் தமது நிர்வாகத்துக்கு தேவையான நிதியைப் பெற்றுக்கொள்ள இவ்வரிகளை விதிக்கின்றன

1, மொத்த விற்பனைவரி
2. மதுபான விற்பனை உத்தரவுக் கட்டணம்
3. பந்தையம், லொத்தர் என்பன மீதான வரி
4. மோட்டார் உத்தரவுப் பத்திரக் கட்டணம்

போன்றவற்றை விதிக்கின்றது.

இலங்கையில் நேரில் வரிகளின் பங்கு அதிகமாக உள்ளதெனினும் உயர் வருமான நாடுகளில் நேர் வரியின் பங்கே அதிகமாகவுள்ளது என்பதைப் பின்வரும் அட்டவணை காட்டுகிதது.

| நாடுகள் | மொத்த அரசிறையில் வருமானவரி. 1990 |
|---|---|
| வருமானம் குறைந்த நாடுகள் | |
| இலங்கை | 10·8 |
| இந்தியா | 15·4 |
| பாகிஸ்தான் | 10·0 |
| நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் | |
| பிலிப்பைன்ஸ் | 28·3 |
| தாய்லாந்து | 24·2 |
| மலேசியா | 30·5 |
| உயர் நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் | |
| மெச்சிக்கோ | 36·5 |
| தென் ஆபிரிக்கா | 48·6 |
| தென் கொரியா | 34·0 |
| மிக உயர் வருமானம் பெறும் நாடுகள் | |
| ஐக்கிய இராச்சியம் | 40·0 |
| அவுஸ்ரேலியா | 65·1 |
| கனடா | 53·7 |
| ஐக்சிய அமெரிக்கா | 51·6 |
| யப்பான் | 71·2 |

**World Development Report — 1992**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் வருமானம் பெறுகின்ற சிலர்கூட வரி செலுத்துவதிலிருந்து தப்பித்து விடுகின்றனர். உற்பத்தி வருமானம் பற்றிய தகவல்களை வெளியிடாமை, வருமானத்தைக் குறைத்துக் காட்டுதல், அதிகளவு செலவினத்தைக் காட்டுதல் என்பன மூலம் வரி விதிப்பில் இருந்து தப்பி விடுகின்றனர். பொதுவாக வழக்கிலுள்ள வைத்தியர்கள், கணக்காய்வாளர் போன்ற உயர் தொழில் புரிவோரும், வியாபாரிகள், கைத்தொழிலாளர்கள் ஆகியோரும் இவ்வாறு வரி விதிப்பிலிருந்து தப்பி விடுகின்றனர்.

இவ்வாறு இலங்கை அரசானது வரி வருவாயைத் திரட்டுவதற்காக,

1. உள்நாட்டு அரசிறை வரித் திணைக்களம்
2. சுங்கத் திணைக்களம்

ஆகிய இரண்டையும் முக்கியமானதாகக் கொண்டு அரசிறையில் 80% (ஏறத்தாழ) இணைவரி வருவாய் மூலம் திரட்டுகின்றது.

உசாத்துணை நூல்கள் : மத்தியவங்கி அறிக்கை
அரச நிதி ஆசிரியர் மா, சின்னத்தம்பி.

---


கல்யாண முகூர்த்தப் புடவைகளின்

கைராசியான ஸ்தாபனம்

சீமாட்டி

ஜவுளி சமுத்திரம்

122, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.

வணிக மன்றம் சிறப்புற
வாழ்த்துகின்றோம்.

சிறந்த ரக
திருமணப்பட்டுப் புடவைகள்
மற்றும்
றெடிமேற் தினுசுகளுக்கு
தலைநகரில் சிறந்த
ஸ்தாபனம்

ராகமாலிகா

ஆடை அகம்

இல. 4, நவீன சந்தை
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

"இன்றைய அறிமுகம்
நாளைய நாகரீகம்"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேஜீனியா அஜந்தா வலன்ரைன்
ஆண்டு 13 வர்த்தகம்

# பேரினப் பொருளாதாரத்தின் நோக்கங்களும் அவற்றை அடைந்து கொள்வதற்கான கருவிகளும்

# OBJECTIVES OF MACROECONOMICS AND INSTRUMENTS TO ATTAIN THEM

பேரினப் பொருளாதாரமானது ஓர் பொருளாதாரத்தினுடைய நடத்தையை மொத்தரீதியாக நோக்குகின்றது. அது ஓர் நாட்டினது வெளியீடு, வருமானம், வேலை வாய்ப்பு, விலைகள், வெளிநாட்டு வர்த்தகம் என்பவற்றின் மொத்தரீதியான மட்டத்தை ஆய்வு செய்கின்றது. ஒரு நாடு அதனது பொருளாதார செயலாற்றத்தினைப் பாதிக்க முடியும் என்பதன் காரணமாக பேரினப்பொருளாதாரம் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. பேரினப் பொருளாதாரக் கொள்கைகளின் ஓர் விவேகமான தெரிவின் மூலம் – வரி, செலவு என்பவற்றின் அமைப்பும் மட்டமும் என்பன போன்றவற்றில் ஓர் நாடு தனது பொருளாதார வளர்ச்சியை விரைவாக்க முடியும் அல்லது தாமதமாக்க முடியும். விரைவாக பணவீக்கத்தை ஏற்படுத்த முடியும் அல்லது விலைகளைக் குறைக்க முடியும். வர்த்தக மிகையை அல்லது பற்றாக்குறையை உருவாக்க முடியும். மேலும் பேரினப் பொருளாதாரக் கொள்கைகளின் தெரிவின் தன்மை எதிர்கால வாழ்க்கைத்தரத்தின்மீது பாரிய விளைவுகளையும் கொண்டுள்ளதாகக் காணப்படுகின்றது.

| நோக்கங்கள் | கருவிகள் |
|---|---|
| • வெளியீடு<br>உயர் மட்டம்<br>துரித வளர்ச்சி வீதம் | • அரசிறைக் கொள்கை :<br>அர்சாங்கச் செலவு<br>வரிவிதிப்பு |
| • வேலைவாய்ப்பு<br>உயர்மட்ட வேலைவாய்ப்பு<br>குறைந்த மட்ட விருப்பற்ற வேலையின்மை | • நாணய நடைமுறைக்கொள்கை :<br>வட்டிவீதங்களைப் பாதித்தல்<br>பணநிரம்பலைக் கட்டுப்படுத்தல் |
| • சுதந்திரமான சந்தைகளுடன் கூடிய விலை – மட்ட உறுதிப்பாடு | • வெளிநாட்டுப் பொருளாதாரக் கொள்கைகள் :<br>வர்த்தகக் கொள்கைகள்<br>நாணயமாற்றுவீத தலையீடு |
| • வெளிநாட்டு நிலுவை :<br>ஏற்றுமதி இறக்குமதிச் சமநிலை<br>நாணயமாற்றுவீத உறுதிப்பாடு | • வருமானக் கொள்கைகள் :<br>தன்னிச்சையான – கூலி விலை வழிகாட்டல்களிலிருந்து கட்டாயமான கட்டுப்பாடுகளிற்கு. |

**நோக்கங்கள்** (Objectives)

பேரினப் பொருளாதார செயலாற்றத்தினை மதிப்பிடுவதற்கு நான்கு நோக்கங்கள் மைய நோக்கங்களாக அமைந்துள்ளன. அவை வெளியீடு, வேலைவாய்ப்பு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலைகள், வெளிநாட்டுத்துறை என்பவற்றுடன் தொடர்புடையவை. இத்தகைய குறிக்கோள்களை தேசிய சட்டங்களிலும், அரசியற் தலைவர்களின் அறிக்கைகளிலும் நாம் காண முடியும்.

## வெளியீடு (Output)

ஒரு நாட்டின் பொருளாதார வெற்றியை அளவிடுவதற்கான முக்கிய அளவுகோல் அந்நாட்டு மக்களுக்காக பொருளாதாரப் பொருட்களினதும், சேவைகளினதும் ஓர் உயர்வான மட்ட உற்பத்தியினை உருவாக்குவதற்கான அந்நாட்டின் ஆற்றல் ஆகும். வீட்டுவசதி, இருப்பிடம், உணவு, கல்வி, பொழுதுபோக்கு என்பவற்றை பெருமளவில் உற்பத்தி செய்வதனையும், நுகர்வதனையும் விட ஓர் நாட்டிற்கு மிகவும் முக்கியமானது என்ன? ஒரு பொருளாதாரத்திலுள்ள மொத்த உற்பத்தியினுடைய பரந்து பட்டதும் முழுமையாகப் புரிந்து கொள்ளக்கூடியதுமான அளவீடு மொத்த தேசிய உற்பத்தி (GNP) ஆகும். ஒரு வருட காலத்தின் போது ஒரு நாட்டின் உற்பத்தி செய்யப்பட்ட அப்பிளிலிருந்து (APPLE) ஜிப் (ZIP) வரையான எல்லாப் பொருட்களினதும் சேவைகளினதும் சந்தைப்பெறுமதியின் கணிப்பீடே அதாவது கூட்டு மொத்த தொகையே மொத்த தேசிய உற்பத்தி ஆகும்.

மொத்த தேசிய உற்பத்தியானது நடைமுறைச் சந்தைவிலையிலோ அன்றேல் உண்மையான சந்தைவிலையிலோ அளவிடப்படுமானால் அது பெயரளவு மொத்த தேசிய உற்பத்தி (Nominal GNP) என அழைக்கப்படும். மாறாக மொத்த தேசிய உற்பத்தியானது மாறாத அன்றேல் நிலையான விலைகளில் கணிப்பிடப்படுமானால் அது மெய் ரீதியான மொத்த தேசிய உற்பத்தி (Real Gnp) என அழைக்கப்படும். இத்தகைய மெய்ரீதியான மொத்த தேசிய உற்பத்தியில் ஏற்படுகின்ற மாற்றங்களே வெளியீட்டு மட்டத்தினதும் வளர்ச்சியினதும் சிறந்ததும் விரிவானதும் ஆக அமையக்கூடிய கணிப்பீடு ஆகும். இவ்வாறான மெய் ரீதியான மொத்த தேசிய உற்பத்தியில் ஏற்படும் உயர் மட்ட, துரித வளர்ச்சி வீதமே பேரினப் பொருளாதாரமொன்றின் முதல் நோக்கமாக அமைகின்றது. இதனை நாம் பொருளாதார வளர்ச்சி என்று குறிப்பிடலாம்.

## உயர்ந்த வேலைவாய்ப்பு, குறைந்த வேலையின்மை
High Employment, Low Unemployment

பேரினப் பொருளாதாரக் கொள்கையின் அடுத்த பிரதான நோக்கம் உயர்ந்த வேலைவாய்ப்பு என்பதாகும். மேலும் இது குறைந்தளவான வேலையின்மை என்பதனையும் வேண்டி நிற்கின்றது மக்கள் சிறந்த உயர் கொடுப்பனவுள்ள வேலைகளை விரும்புவதுடன் அவற்றை இலகுவாகக் கண்டு கொள்ளவும் விரும்புகின்றனர். பருவகால வேலையின்மை, உராய்வு வேலையின்மை' அமைப்பு ரீதியான வேலையின்மை, கீழுழைப்பு அல்லது தொழில் பற்றாமை போன்ற வகைகளில் எழக்கூடிய வேலையின்மைகளை முற்றாக நீக்குவது அல்லது மிகக் குறைந்த அளவில் வைத்திருப்பதும் இந் நோக்கமாக அமையும்.

## உறுதியான விலைகள் (Stable Prices)

மூன்றாவது பேரினப் பொருளாதார நோக்கம் சுதந்திரமான சந்தைகளுடன் கூடிய உறுதியான விலைகளை நிச்சயப்படுத்துவது ஆகும். இந்த நோக்கமானது இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

விலை உறுதிப்பாடு (Price Stability) குறித்து நிற்பது யாதெனில் பொது விலை மட்டம் துரிதமாக அதிகரிக்கவோ அன்றி வீழ்ச்சியடையவோ இல்லை என்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகும். பொருளாதாரப் பெறுமதிகள் (Economic Values) அளவிடப்படுவதற்கான ஓர் அளவுகோலாக விலைகள் இருப்பதனாலேயே சமூகங்கள் உறுதியான விலைகளை விரும்புகின்றன. விலைகள் வேகமாக மாற்றமடைகின்ற காலப்பகுதிகளின் போது பொருளாதார அளவுகோல் விரைவாக மாற்றமுறுவதனால் ஒப்பந்தங்களும் ஏனைய பொருளாதார உடன்படிக்கைகளும் ஸ்தம்பிதமடைவதுடன் பாதிப்படைகின்றன.

உறுதியான விலைகள் என்ற நோக்கத்தின் இரண்டாவது அரைப்பகுதி சுதந்திரமானதும் கட்டுப்பாடுகள் அற்றதுமான சந்தைகளைப் பேணுவதாகும். இது கருதுவது என்னவெனில் ஆகக் கூடுதல் சாத்தியமான அளவிற்கு விலைகளும் தொகைகளும் நிரம்பல் கேள்வி என்ற சந்தை சக்திகளால் தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதாகும். இதனால் தனிப்பட்டவர்களது விருப்பு வெறுப்புக்கமைய வளங்கள் திறமையான முறையில் ஒதுக்கீடு செய்யப்பட முடியும்.

பொது விலை மட்டத்தினை அளவிடுவதற்கான பொதுவான வழிமுறையாக நுகர்வோர் விலைச்சுட்டெண் (Consumer Price Index - CPI) காணப்படுகின்றது விலை மட்டத்திலான உயர்ச்சி வீதம் அல்லது வீழ்ச்சிவீதம், குறிப்பாக ஒரு வருடத்திலிருந்து இன்னோர் வருடத்திற்கு, பணவீக்கவீதம் (Rate of Inflation) எனப்படும். விலைகள் வீழ்ச்சியடையும் போது அல்லது பணவீக்கவீதம் எதிர்க்கணியமாகவுள்ள போது அது பணச் சுருக்கம் (Deflation) என அழைக்கப்படும்.

$$\text{பணவீக்கம் (நுகர்வோர் விலைகளில்)} = \frac{\text{CPI (இவ்வருடம்)} - \text{CPI (கடந்த வருடம்)}}{\text{CPI (கடந்த வருடம்)}} \times 100$$

சுருங்கக்கூறின் விலைகளும், கூலிகளும் சுதந்திரமான சந்தைகளால் தீர்மானிக்கப்படுவதுடன் கூடிய ஓர் நிலையான அல்லது மெதுவாக அதிகரிக்கின்ற விலைமட்டம் என்பது இந்த நோக்கமாக அமையும்.

## வெளிநாட்டு பொருளாதாரக் கொள்கை (Foreign Economic Policy)

பேரினப் பொருளாதாரக் கொள்கையின் கடைசிக் குறிக்கோள் ஓர் பொருத்தமான வெளிநாட்டு பொருளாதாரக் கொள்கையை கொண்டு வருவது ஆகும். சர்வதேச வர்த்தகத்தினாலும், நிதியினாலும் உலகநாடுகள் மிகவும் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுவிட்டதன் காரணமாக இவ் இலக்கு மிகவும் முக்கியத்துவம் பெற்றதாகி விட்டது.

எல்லாப் பொருளாதாரங்களும் திறந்தவையாக உள்ளன. அவை பொருட்களையும் சேவைகளையும் ஏற்றுமதி செய்கின்றன. இறக்குமதி செய்கின்றன அவை பணத்தினை கடன்படுகின்றன. கடன் கொடுக்கின்றன; வெளிநாட்டு தொழில் நுட்பங்களைப் பெறுகின்றன. அல்லது தமது புதிய கண்டுபிடிப்புகளை வெளிநாடுகளுக்கு விற்கின்றன; அவர்களுடைய மக்கள் உலகின் எல்லாப்பகுதிகளுக்கும் வியாபார நோக்கத்திற்காகவோ அன்றி மகிழ்ச்சிக்காகவோ சென்று வருகின்றார்கள். போக்குவரத்து தொடர்புகொள்ளல் செலவுகளில் ஏற்படுகின்ற வீழ்ச்சிகள் சர்வதேச தொடர்புகளை மிகவும் அதிகரித்து வருகின்றன.

இவ்வாறான ஓர் நிலையில் நாடுகள் தமது இறக்குமதிகளைவிட ஏற்றுமதிகளை அதிகமாக வைத்திருந்து நடைமுறைகளுக்கு மீதியை தமக்கு சாதகமாக வைத்திருந்து சென்மதி நிலுவைகளில் சாதகமான நிலையை அனுபவிக்கவும், நாணயமாற்று வீதங்களை உறுதியாக அல்லது அதிக தளம்பலின்றியும் வைத்துக்கொள்ளவும் விரும்புகின்றன. இதுவே பேரினப் பொருளாதாரமொன்றின் கடைசியான இலக்காக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருவிகள் (Instruments)

மேலே செல்லப்பட்டுள்ள நான்கு தொகுதி நோக்கங்களின் சில சேர்க்கைகளை அடைய அநேகநாடுகள் முயற்சிக்கின்றன. ஆனால் இக் குறிக்கோள்கள் எவ்வாறு சந்திக்கப்படமுடியும்? தனது பொருளாதார செயற்பாட்டினை மேம்படுத்த விரும்புகின்ற நாட்டின் வசமுள்ள கொள்கை அளவீடுகள் என்ன? இத்தகைய கேள்விகளுக்கான விடையினை பேரினப் பொருளாதாரக் கொள்கைக் கருவிகளில் நாம் காண முடியும்.

ஒரு கொள்கைக்கருவி (Policy Instrument) என்பது அரசாங்கத்தின் நேரடியான அல்லது மறைமுகமான கட்டுப்பாட்டிலுள்ள ஓர் பொருளாதார மாறி ஆகும். கொள்கைச் கருவிகளில் ஏற்படுகின்ற மாற்றங்கள் ஒன்றோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவையான பேரினப் பொருளாதார நோக்கங்களைப் பாதிக்கின்றன. அதாவது நாணயநடைமுறைக்கொள்கை, அரசிறைக் கொள்கை ஏனைய கொள்கைகள் என்பவற்றில் மாற்றங்களைக் கொண்டுவருவதன் மூலம் வெளியீடு, விலை உறுதிப்பாடு, வேலைவாய்ப்பு, வெளிநாட்டு இலக்குகள் என்பவற்றின் ஓர் சிறப்பான கலவையை நோக்கி பொருளாதாரத்தை வழிகாட்டிச் செல்ல முடியும்.

## அரசிறைக் கொள்கை (Fiscal policy)

பேரினப் பொருளாதார முகாமையின் முடிவாவது கருவியான அரசிறைக் கொள்கையானது அரசாங்கச் செலவுகளையும், வரிவிதிப்பினையும் கொண்டமைந்திருக்கின்றது. இவை பேரினப் பொருளாதாரச் செயலாற்றத்தினைப் பாதிக்கக்கூடியனவாகும். அரசாங்கச் செலவுகள் என்பது பொருட்கள் சேவைகள் மீது அரசாங்கம் மேற்கொள்கின்ற செலவுகளைக் கருதுகின்றது. இச்செலவுகளானவை பொருளாதாரத்தின் மொத்தச் செலவு மட்டத்தின் மீது செல்வாக்குச் செலுத்துவதுடன் அதன் மீது பாதிப்புக்களையும் ஏற்படுத்தவல்லது. இதனால் மொத்த தேசிய உற்பத்தி மட்டம் பாதிப்படைகின்றது.

அரசிறைக் கொள்கையின் அடுத்த கருவி வரிவிதிப்பு ஆகும். வரிவிதிப்பானது பேரினப் பொருளாதாரத்தில் இரண்டு விதமான பங்கினை வகிக்கின்றது. முதலாவது வரி மக்களின் வருமானத்தினைக் குறைத்து அதன் மூலம் தனியார் செலவுகளைக் குறைக்கின்றது. இரண்டாவது சந்தைகளில் தொழில்களாலும் தனிப்பட்டவர்களாலும் எதிர்நோக்கப்படுகின்ற விலைகளைத் தீர்மானிக்க வரிவிதிப்பு உதவுகின்றது. இதன் மூலம் தூண்டுதல்களையும், நடத்தையினையும் பாதிக்கின்றது. இதனால் முதலீட்டையும் உள்ளார்ந்த உற்பத்தியையும் (Potential Output) பாதிக்கின்றது. அரசிறைக் கொள்கையானது மொத்தச் செலவுகளைப் பாதிப்பதன் மூலம் அரசிறையின் உண்மையான மெய்தேசிய உற்பத்தி மீதும் (Actual Real Gnp) பணவீக்கத்தின் மீதும் குறுங்காலத்திலும் கூட செல்வாக்கு செலுத்துகின்றது.

## நாணய நடைமுறைக் கொள்கை (Monetary Policy)

பேரினப் பொருளாதாரக் கொள்கையின் இரண்டாவது பிரதான கருவியாகிய நாணய நடைமுறைக் கொள்கையானது ஓர் நாட்டின் பண கடன் முகாமைத்துவதத்தையும் அந்நாட்டு மத்திய வங்கியின் வங்கி அமைப்பினையும் (Banking System) உள்ளடக்குகின்றது. மத்திய வங்கியானது பணநிரம்பலைக் கட்டுப்படுத்துவதும்; பணம், வெளியீடு, பணவீக்கம் என்பவற்றுக்கிடையேயான தொடர்புகளைக் கட்டுப்படுத்துவதும் நாணய நடைமுறைக் கொள்கைச் செயற்பாடுகளாக அமைகின்றன. பண நிரம்பலினான மாற்றங்களானவை வட்டி வீதத்தினை உயர்த்துகின்றன. அல்லது குறைக்கின்றன. அத்துடன் இயந்திரம், கட்டிடம், என்பன போன்ற பொருட்கள் மீதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவுக்களைப் பாதிக்கின்றன. நாணய நடைமுறைக் கொள்கையானது உண்மையான மொத்த தேசிய உற்பத்தி (GNP) உள்ளார்ந்த மொத்த தேசிய உற்பத்தி (Potential Gnp) என்ற இரண்டின் மீதும் ஓர் முக்கியமான விளைவைக் கொண்டுள்ளது.

## வெளிநாட்டுத் தொடர்பு (Foreign Connection)

நாடுகள் மிகவும் திறந்த பொருளாதாரங்களாக ஆகிவிடும் போது அவற்றின் கொள்கை வகுப்பாளர்கள் தமது வெளிநாட்டுப் பொருளாதாரக் கொள்கைகளை முகாமை செய்வதற்கு அதிக கவனத்தைச் செலுத்தவேண்டியுள்ளது. பிரதான கருவிகள் இரண்டு வகைப்படுத்தப்படுகின்றன. முதலாவதாக வர்த்தகக் கொள்கைகள் மூலம் நாடுகள் தமது வர்த்தகத்தினைப் பாதிக்க முடியும். இது ஏற்றுமதிகளையும், இறக்குமதிகளை யும் கட்டுப்படுத்துவதற்கான ஊக்கப்படுத்துவதற்கான உபாயங்களை உள்ளடக்கும்.

இரண்டாவது தொகுதி கொள்கைகள் குறிப்பாக வெளிநாட்டுத் துறையை நோக்கி இலக்கு வைக்கப்பட்டவை. அது நாணயமாற்று சந்தை முகாமைத்துவம் (Exchange Market Management) ஆகும். ஓர் எண்ணிக்கையான வேறுபட்ட முறை கள் மூலம் நாடுகள் தமது வெளிநாட்டு நாணயமாற்று சந்தைகளை ஒழுங்குபடுத்த முடியும். சில முறைகள் நாணயமாற்றுவீதம் முற்றாக சந்தையில் தீர்மானிக்கப்பட அனுமதிக்கின்ற அதேவேளை சில முறைகள் இதற்கு மாறாக ஏனைய நாடுகளின் பணத்துக்கெதிரான ஓர் நிலையான நாணயமாற்று வீதம் தீர்மானிக்கப்பட வழி வகுக்கின்றன.

அரசாங்கங்கள் தமது பேரினப் பொருளாதார நோக்கங்களையும், கொள் கைகளையும் ஒன்றிணைப்பதாக அடிக்கடி சந்திக்கின்றமையை நாம் நடைமுறையில் காணக் கூடியதாக உள்ளது.

## வருமானக் கொள்கைகள் (Income Policies)

பேரினப் பொருளாதாரக் கொள்கைகளின் கடைசித் தொகுதியாக வருமானக் கைகள் மிகவும் சரியாகக் குறிப்பிடப்படுவதாயின் கூலி – விலைக் கொள்கைகள் (Wage Price Policies) என அழைக்கப்படலாம். வாய்மொழி மூலமான தூண்டுதல் களினாலோ அல்லது சட்டரீதியான கூலி விலைக் கட்டுப்பாடுகள் மூலமாகவோ நேரடி யான முறைகளில் பணவீக்கத்தினை சீராக்க முயற்சிப்பதற்கு என அரசாங்கத்தினால் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளை இது உள்ளடக்குகின்றது. பணவீக்கத்தினை குறைப் பதற்கான மரபு ரீதியான வழிமுறையாக பொருளாதார நடவடிக்கைகளை மென் போக்குடையதாக்குவதற்கும் வேலையின்மையை உயர்த்துவதற்குமென அரசிறை, நாணய நடைமுறைக் கொள்கைகள் இருந்து வருகின்ற போதும் கடந்தகால அனுபவங்களின் படி இம்மரபுரீதியான தந்திரோபாயங்கள் செலவு மிக்கதாக அமைவதன் காரணமாக அதற்கு ஓர் மாற்றுவழி முறையாகவே கூலி – விலை கொள்கை நடைமுறைக்கு வந்தது எனலாம்.

எது எப்படி இருப்பினும் நடைமுறையில் நோக்குமிடத்து இப்பேரினப் பொரு ளாதார நோக்கங்கள் யாவற்றினையும் ஒரே சமயத்தில் அடைந்து கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. இப்பேரினப் பொருளாதார நோக்கங்கள் தமக்கிடையே முரண்பாடுகளைக் கொண்டவையாக காணப்படுவதனாலேயே எல்லாவற்றினையும் ஒரே நேரத்தில் அடைந்து கொள்ள முடியாதிருப்பதுடன் ஒவ்வொரு நாடும் தமக்கு அதி முக்கியம் பெறும் சில நோக்கங்களுக்கு முதன்மை கொடுக்க வேண்டியிருப்பதுடன் அவற்றுக்கிடையே ஏற்கத்தக்க ஓர் சமநிலையினையும் காண வேண்டியுள்ளது.

உதவியது :- "ECONOMICS"
By: Paul A. Samuelson and Wiliam D. Nordhaus
(13 th Edition)



- 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி. நொறீன் நீரஜா
ஆண்டு 13 வர்த்தகம்

# இலங்கைப் பொருளாதாரத்தில் கடலகவளம்

இலங்கையில் 1950 களின் பின் படிப்படியாக வீழ்ச்சியடைந்து வரும் பெருந்தோட்ட வர்த்தக பொருளாதாரமானது பல மரபுரீதியற்ற ஏற்றுமதிகளைத் தூண்டியுள்ளமை கண்கூடு. இம் மரபுரீதியற்ற ஏற்றுமதிப் பொருட்களில் 1970இன் பின் கடலக உற்பத்தி பொருட்களும் குறிப்பிடத்தக்களவு இடம்பெற்றுள்ளன. எனினும் உண்மையில் இலங்கையின் கடலகவளம் பூரணமாகப் பயன்படுத்தப்படாமை இன்று பலரால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இலங்கையின் அமைவிடமும் அமைப்பும், அதன் பௌதிக வளங்களும் காரணமாகச் சிறப்புடன் அமைந்துள்ள கடல்வளமானது நவீன தொழில்நுட்ப உதவியுடன் பூரணமாக பயன்படுத்தப்படுமாயிருந்தால் இலங்கை பொருளாதாரத்தில் பெரும் பங்கினை வகிக்க முடியும். எனவே கடல்வளத்தின் பயன்பாடு பற்றியும் அதன் அபிவிருத்தி பற்றியும் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றியும் ஆராய்வது பொருத்தமானதாகும்.

## இயற்கையான பௌதிக வளங்கள்!

இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ள ஒரு சிறிய தீவாகும். எனவே இலங்கைத் தீவானது தனது அமைவிடமும் அமைப்பும் காரணமாக மீன்பிடித் தொழிலுக்குரிய வாய்ப்புக்களை இயற்கையாகவே பெற்றுள்ளது. இதற்கு இலங்கையைச் சூழவுள்ள ஆழமற்ற கண்டமேடைகள், பல்லுருவக் கடற்கரைகள், நீரோட்டங்கள், குடாக்கள் போன்றவை சாதகமாக அமைந்துள்ளன. ஏறக்குறைய 1561 கிலோ மீற்றர் நீளமான கடற்கரையோரத்தையும், கரையிலிருந்து 320 கிலோமீற்றர் வரையிலான பகுதியை உள்ளடக்கிய பிரத்தியேக பொருளாதார வலயத்தினையும் [200 MILE ECONOMIC INCLUSIVE ZONE] கொண்டுள்ளது. இவ்வலயத்தின் பரப்பளவு சுமார் 233000 சதுர கிலோமீற்றர் ஆகும். அது இலங்கையின் மொத்த நிலப்பரபில் மூன்றரை மடங்காகும். இலங்கையைச் சூழ அமைந்துள்ள ஆழம் குறைவான கண்டமேடை ஏறக்குறை 22 கிலோமீற்றர் தொடக்கம் 40 கிலோமீற்றர் வரை அகன்று காணப்படுகின்றது. மேலும் கண்டத்திட்டுக்கள், பல்லுருவக் கடற்கரைகள் போன்ற இயற்கை அமைப்புக்களும் கடல் வாழ் உயிர்களின் பரம்பலுக்கு சாதகமாக அமைந்துள்ளன. அத்துடன் நாட்டின் உட்பகுதியிலுள்ள ஏரிகள், குளங்கள், ஆறுகள் போன்றனவும், மீனினங்கள் பெருகுவவற்கு வாய்ப்பான சாதனங்களாகக் காணப்படுகின்றன. அண்மையில் நோர்வே நாட்டு கடல் வள ஆராய்ச்சிக் கப்பலொன்று நடாத்திய ஆய்வின்படி "இலங்கையிலுள்ள மொத்த உயிரியல் திணிவு 750000 மெற்றிக்தொன் என்றும், தொடர்ச்சியாக வருடமொன்றிற்கு 250000 மெற்றிக்தொன் கிடைக்கின்றது எனவும் மதிப்பீடு செய்துள்ளது. ஆனால் தற்போதைய உற்பத்தி இதைவிடக் குறைவானதாகும்.

## மனித வளமும் வேலைவாய்ப்பும்:

முழுமையாக மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 58000 அல்லது மொத்த ஊழியர் படையில் 2·5% என மதிப்பிடப்பட்டுள்ளது. 2,55·000 பேர் இவர்களுள் தங்கி வாழ்வோர் ஆவர். இன்னும் 7000 பேர் இதனுடன் இணைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் துறையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 17000 பேர் இவர்களில் தங்கி வாழ்கின்றனர். மேலும் 7400 பேர் படகுகட்டுதல், வலைபின்னுதல், பனிக்கட்டி தயாரித்தல் ஆகிய துறைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 18000 பேர் இவர்களில் தங்கி வாழ்கின்றனர். இந்த அடிப்படையில் இத்துறையில் மொத்தம் 72000 பேர் வேலைவாய்ப்புக்களைப் பெற்றிருப்பதுடன் 300,000 பேர் இவர்களில் தங்கி வாழ்கின்றனர். 1980 மார்ச்சில் மீன்பிடி அமைச்சுடன் மேற்கொண்ட ஒரு மதிப்பீட்டின்படி 79000 பேர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இன்று சுமார் 400,000 பேர் இத் தொழிலில் ஈடுபட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

## மீன்நுகர்வும்—புரதச்சத்தும் போஷாக்கும்

இலங்கையின் கடற்றொழில் துறையானது பொருளாதாரத்தில் முக்கியத்துவமடைந்து வருவதற்கான காரணங்களில், முக்கியமாக மக்களது உணவுத் தேவை பூர்த்தியும் ஊட்டச்சத்துக்கும் காரணமாகும். சமுத்திரவியல் வளங்களாக மீன், கடலட்டை, இறால், நண்டு, சங்கு, கணவாய் போன்ற கடல்வாழ் உயிரினங்கள் காணப்படுகின்றன. இவை இன்று அதிகரித்துவரும் சனத்தொகையின் உணவுத் தேவையை பூர்த்தி செய்வதில் ஓரளவு பங்கு வகிக்கின்றன. தற்போது நாட்டில் நுகரப்படும் மொத்த மீன்களின் தொகையில் 85 சதவீதத்தை கடற்தொழில்துறை பூர்த்தி செய்கின்றது. அத்துடன் தற்போது நாட்டுமக்கள் நுகரும் புரதத்தில் ஒரு கணிசமான பகுதியை இலங்கையின் கடற்றொழில் வழங்குகின்றது.

மேலும் உள்நாட்டில் நுகரப்படும் மிகை புரதத்தில் 70 சதவிகிதம் மீன்களிலிருந்து பெறப்படுவதாக அதிகாரபூர்வமான வட்டாரங்கள் கூறுகின்றன. இலங்கை வைத்திய ஆராய்ச்சிக்கழகம் சிபாரிசு செய்துள்ளபடி நபர் ஒருவர் நாளொன்றுக்கு 60 கிராம் அல்லது வருடம் ஒன்றிற்கு 20 கிலோ மீன் சாப்பிட வேண்டும். எனவே கடற்றொழில் துறைமூலம் பெறப்படும் மீன் தொகை இங்குள்ள மக்களின் தேவையைப் பூர்த்திசெய்ய முடியாதுள்ளமையால் மேலும் இது அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் கடந்த 10 ஆண்டுகளாக மீனின் விலை தொடர்ந்து அதிகரித்து வருவதன் காரணமாகவும் மீன்நுகர்வு குறைவடைந்துள்ளது. 1986/87இல் நடாத்தப்பட்ட சமூக பொருளாதார ஆய்வின்படி ஆளொருவரின் வருட சராசரி பாவனை 508 கிலோவாகக் குறைவடைந்துள்ளது.

## ஏற்றுமதி / இறக்குமதி

இலங்கை போதியளவு கடலக வளத்தினைக் கொண்டிருந்தபோதிலும் மீன் அறுவடை உள்நாட்டு கோரிக்கையைச் சமாளிக்க போதமல் இருப்பதால் இந்த தேவையின் அல்லது இடைவெளியை நிரப்ப மீனை, அல்லது மீன் உணவுப் பொருட்களை அல்லது இரண்டையும் இறக்குமதி செய்யவேண்டி உள்ளது. அத்துடன் சனத்தொகை வளர்ச்சி விலை ஏற்றம், மீன்பிடி உபகரணங்கள் தட்டுப்பாடு, நாட்டின் குழப்பநிலை என்பன காரணமாக தொடர்ச்சியாகக் குறைவடைந்து வரும் தலா மீன்நுகர்வும் இறக்குமதியைத் தூண்டியுள்ளது. கடலக உற்பத்திகளின் இறக்குமதிப் பொருட்களில் மாசிக்கருவாடு, மீன்கருவாடு, பேணப்பட்ட மீன், மீன் குளிசைகள், மீன்எண்ணெய் போன்றவை முக்கியமானவை ஆகும். ஆரம்பத்தில் இப்பொருட்களுக்கான இறக்குமதிகளின் சதவிகிதம் மிகக் குறைவாக இருந்தபோதிலும் 1980களின் பின்னர் அரசின் தாராள இறக்குமதிக் கொள்கை வடக்கு கிழக்கு மாகாண கரையோரங்களில் நிலவிய அரசியல் நெருக்கடிநிலை, கடல்வலய பாதுகாப்புச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டம், பொருளாதார தடை காரணமாக இறக்குமதி செலவினங்கள் தொடர்ந்து அதிகரித்துச் செல்லும் போக்கு காணப்படுகின்றது. இதனால் வெளிநாட்டு நாணயமாற்று பெருமளவில் வெளியேறிக்கொண்டு இருக்கிறது.

ஏற்றுமதிகளைப் பன்முகப்படுத்தல் என்ற புதிய அரசின் கொள்கைக்கிணங்க இலங்கையிலிருந்து ஏற்றுமதி ஆகும் மரபுரீதியற்ற பொருட்களின் வகைகளில் கடலக உற்பத்திகளும் இன்று முக்கியத்துவம் பெற்றுள்ளன. மீன் உற்பத்தியானது உள்நாட்டுத் தேவையைப் பூர்த்திசெய்யப் போதுமானதாக இல்லாதபோதும் சிலவகை கடலக உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதில் ஈடுபட்டுள்ளமை சிறப்பான அம்சங்களாகக் கொள்ளலாம். உள்நாட்டில் நுகரப்படாத கடலட்டை, சங்கு, சுறாச்செட்டை, கடற்பாசி போன்றனவும், இறால், சிங்க இறால், கணவாய், நண்டு, மீன்துண்டுகள், உயிருள்ள அலங்கார மீன்கள் போன்றனவும் ஏற்றுமதியில் முக்கிய இடம்பெறுகின்றன. இதன் மூலம் குறிப்பிடத்தக்களவு அந்நியச் செலாவணி பெறப்பட்டபோதும் வடக்கு — கிழக்கு யுத்த நிலமை காரணமாக அண்மைக்காலங்களில் ஏற்றுமதிவருமானமும் குறைவடைந்துள்ளது.

**1992ஆம் ஆண்டு மத்தியவங்கி அறிக்கைப்படி கடல்வள வருமானங்கள்**

*(மில். ரூபாவில்)*

**மீன் உற்பத்தி 1988 – 1992**

| துணைத் துறை | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 |
|---|---|---|---|---|---|
| கரையோர | 1,55099 | 157 411 | 134132 | 159151 | 163168 |
| ஆழ்கடலும் கரைக்கு அப்பாலும் | 4,425 | 8155 | 11666 | 15080 | 22000 |
| உள்நாட்டு | 38012 | 39720 | 31265 | 23832 | 21000 |
| மொத்தம் | 197536 | 205286 | 177063 | 198063 | 206168 |

## மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள்

இலங்கை மீன்பிடித் துறையைப் பொறுத்தவரை அதை அபிவிருத்தி செய்வதற்கு நிறைய வாய்ப்புக்கள் உள்ளன. எனினும் மீன்பிடித் துறையினை நவீனப்படுத்தலும் முன்னேற்றமும் இன்று முக்கிய உபாயங்களாகக் காணப்படுகின்றன. இத்துறையில் உள்ள அபிவிருத்தித் திட்டங்கள் மீன் வளங்களின் நிர்வாகத்தைவிட மீன்பிடிக் கப்பல்களை நவீனப்படுத்தல் மற்றும் மீன் உற்பத்தி அதிகரிப்பு ஆகியவற்றிலேயே அதிக கவனம் செலுத்தி வந்துள்ளது. இதன் விளைவாக கடந்த தசாப்தங்களின் மீன்பிடி படகுகளின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளது. அரசாங்க வங்கிகள் வேறு முகவர் தாபனங்களால் அறிமுகப்படுத்தப்பட்ட கடன் மானிய திட்டங்கள்மூலமே இவை ஊக்குவிக்கப்பட்டன. மேலும் இறங்குதுறை, மீன்பிடித் துறைமுகம், சந்தைப்படுத்தல், போக்குவரத்து வசதி போன்ற உள்ளக அபிவிருத்தியுடன் மீன்பிடி சமூகத்திற்கான வீடமைப்பு, சுகாதாரம் மற்றும் சனசமூக அபிவிருத்திக்காக பாரிய தொகை பணம் முதலீடு செய்யப்பட்டுள்ளது. மீன்பிடித்துறை அமைச்சு, கடற்றொழில் திணைக்களங்கள் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றன அபிவிருத்தி நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை

அண்மைக்காலங்களில் இலங்கை மீன்பிடித்துறை அபிவிருத்தி சம்பந்தமான பல செயற்பாடுகளை மேற்கொண்ட போதிலும் மீன்பிடித்துறையின் வளமுகாமைத்துவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஏனைய தென்கிழக்காசியநாடுகள் மீன்பிடித்துறையில் மேற்கொண்டுவரும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் விளைவுகளுக்கு முகம் கொடுக்கவேண்டுமானால் வள முகாமைத்துவம் நன்கு பேணப்படுவதுடன் தொழில்நுட்ப வளர்ச்சி, நவீனகருவி பயன்பாடு போன்றவற்றுடன் சமூகத்தில் மீன்பிடித் தொழிலானது ஏனைய உற்பத்தித் துறைகளுடன் சம அந்தஸ்தைப் பெறும் வகையில் வசதிகள் ஏற்படுத்திககொடுத்தல் வேண்டும். கவர்ச்சிகரமான கடல்வள கல்வி மூலமும் வருமான ஏற்பாடு மூலமும், உயர்கல்வி, விசேடபயிற்சி, புலமைப்பரிசில்கள் போன்ற ஏற்பாடுகள் மூலமாகவும் கடற்றொழில் சமூகத்தரம் உயர்த்தப்பட வேண்டும். அரசு கடற்கரைகளில் ஏற்படுத்தியுள்ள தடைச்சட்டங்களை அகற்றி போதிய முதலீடுகளைச் செய்து கடற்றொழில்துறையை ஊக்குவிப்பதன் மூலம் அந்நியசெலாவணியை போதியளவு பெற்றுக்கொள்வதுடன் இறக்குமதியைக் குறைத்து நாணயமாற்றுக்களை மீதப்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை சிறந்த முறையில் கட்டி எழுப்ப முடியும்.

---


வணிக மன்றம் சிறப்புடன் ஒளிர்க!

ஜவுளி உலகின் நவீன முன்னோடிகள்

*

ரஞ்சனாஸ்

17,18,18A நவீன சந்தை
யாழ்ப்பாணம்

வாழ்த்துகின்றோம்
தரம் நாடுவோர்
தவறாமல் நாடும்

V

லலிதா
நகை மாளிகை

தங்கப்பவுண் நகை வியாபாரம்
22 கரட் தங்கத்தில் செய்து கொடுக்கப்படும்.

213, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Miss. K. Thevaranchany**
Lecturer
Dept of Commerce & Management Studies
University of Jaffna

# கணக்கீட்டுச் சமன்பாடும் ஐந்தொகையும்
# ACCOUNTING EQUATION & BALANCESHEET

## அறிமுகம்
## INTRODUCTION

நிதித் தன்மை வாய்ந்த நடவடிக்கைகள் அல்லது நிகழ்வுகள் அதன் முக்கியத்துவத்திற்கேற்ற வகையில் பதிவு செய்தல், வகைப்படுத்தல், சுருக்கிக்கூறுதல் என்பவற்றுடன் இவற்றின் முடிவுக்கேற்ப விமர்சிக்கும் கலையே கணக்கியல் எனப்படுகிறது.

தகவல்களை பயன்படுத்துவோர் முடிவுகளை மேற்கொள்ளத்தக்க வகையில் பொருளியல் தகவல்களை அடையாளம் காணல், அளவீடு செய்தல், தொடர்பு கொள்ளல் ஆகியவற்றை உள்ளடக்கிய செய்முறையே கணக்கியல் எனப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட வரைவிலக்கணங்களின் அடிப்படையில் கணக்கியல் பின்வரும் நிலைகளைக் கொண்டுள்ளது எனலாம்.

1. நிதித்தன்மை வாய்ந்த வியாபார நடவடிக்கைகளை அடையாளம் கண்டு பதிவு செய்தல், பொருட்களின் விற்பனை, கொள்வனவு, காசினைப் பெறுதல், காசுக் கொடுப்பனவு, செலவுகளை மேற்கொள்ளல் என்பவற்றை உள்ளடக்கியவையாகும்.
2. நடவடிக்கைகளின் தன்மைகளுக்கேற்பவும், வேறுபாடுகளுக்கு ஏற்பவும் அவற்றை அடையாளம் காணக்கூடியவகையில் நடவடிக்கைகளை வேறுபடுத்தி பதிவு செய்தல்.

   உதாரணமாக பொருட்களின் கொள்வனவையும் விற்பனையையும் வேறுபடுத்தி பதிவு செய்தல்.
3. இவ்வாறான பதிவுகள் நிறுவனத்தின் உரிமையாளரும் அவ்வியாபாரத்தில் அக்கறையுள்ள ஏனையோரும் இந்நடவடிக்கைகளின் விளைவுகளை அறியத்தக்க வகையில் சுருக்கப்படுகின்றன. சுருக்கித் தரப்படும் நடவடிக்கை மூலம் தயாரிக்கப்படும் அறிக்கையானது வியாபாரத்தினால் குறிப்பிட்ட காலப்பகுதியில் உழைக்கப்பட்ட இலாபம் அல்லது நட்டத்தையும் வியாபாரத்தில் ஈடுபடுத்தப்பட்ட மொத்த மூலதனத்தையும் காட்டும்.
4. இலாபம் மூலதனம் என்பவற்றைக் காட்டும் கூற்றுகள் முகாமையாலும் ஏனையோராலும் வியாபாரத் தீர்மானங்கள் மேற்கொள்வதற்காக பயன்படுத்தப்படுகின்றன.

## கணக்கியல் சமன்பாடு (ACCOUNTING EQUATION)

நிதிக் கணக்கியலானது இலகுவாக விளங்கிக்கொள்ளக்கூடிய கணக்கியல் சமன்பாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஒரு வியாபாரம் ஆரம்பிக்கப்படும்போது அதற்கு வளங்கள் தேவைப்படும் நிறுவன உரிமையாளரே வளங்கள் எல்லாவற்றையும் வழங்குவதாகக் கொண்டால் சமன்பாடு பின்வருமாறு அமையும்.

வியாபாரத்திலுள்ள வளங்கள் = உரிமையாளரால் வழங்கப்பட்ட வளங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்கியலில் இவற்றினை விபரிக்கச் சில பதங்கள் பயன்படுத்தப்படுகின்றன. நிறுவனத்திலுள்ள உண்மையான வளங்கள், சொத்துக்கள் எனப்படுகின்றன. உரிமையாளரால் வழங்கப்பட்ட வளங்களின் தொகை மூலதனம் எனப்படுகின்றது. இதனால் மேற்காட்டப்பட்ட சமன்பாட்டை பின்வருமாறு குறிப்பிடலாம்.

சொத்துக்கள் = மூலதனம்

வழமையில் உரிமையாளர் தவிர்ந்த ஏனையோரும் நிறுவனத்திற்கு சில சொத்துக்களை வழங்குவது வழக்கம். இவற்றை நாம் பொறுப்புக்கள் என அழைப்போம். இதன் காரணமாக சமன்பாடானது பின்வருமாறு காணப்படும்.

சொத்துக்கள் = மூலதனம் + பொறுப்புகள்

சமன்பாட்டின் இருபக்கத்தின் கூட்டுத்தொகைகளும் ஒன்றாக இருப்பதற்குக் காரணம், நாம் ஒரே விடயத்தினை 2 கோணங்களில் நோக்குவதாகும். அதாவது

மொத்த வளங்கள் = மொத்த வளங்களை விநியோகித்தோர்
(சொத்துக்கள்) (மூலதனம் + பொறுப்புகள்)

மேற்கூறப்பட்ட சமன்பாட்டின் அடிப்படையில் ஒரு பக்கத்தின் மொத்தக் கூட்டுத்தொகையானது மற்றைய பக்கத்திலுள்ள கூட்டுத்தொகைக்குச் சமனாகும் அதாவது பல்வேறு மாற்று நடிவடிக்கைகள் ஏற்பட்டாலும் மொத்தச் சொத்துக்கள் எப்பொழுதும் மொத்த மூலதனம் + பொறுப்புகளுக்குச் சமனாகும்.

சொத்துக்கள் : கட்டடங்கள், இயந்திரங்கள், இருப்பு, மோட்டார், வான், கடன்பட்டோர், வங்கியில் உள்ள காசு.

பொறுப்புகள் : சொந்த பணத்தில் வழங்கப்பட்ட பொருட்களும் அதற்கான செலவும் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட கடன்களும் உள்ளடங்கும்.

மூலதனம் : சொந்த முதல் (OWNER'S EQUITY)

## ஐந்தொகையும் வியாபார நடவடிக்கையால் ஏற்படும் தாக்கமும்
## THE BALANCE SHEET AND THE ELLEETS OF BUSINESS TRANSACTION

கணக்கியல் சமன்பாட்டினால் வெளிப்படுத்தப்படுகின்ற நிதிநிலைக் கூற்றுகள் ஐந்தொகை என அழைக்கப்படுகின்றது. இது முதல் கணக்கியல் பதிவினை மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்படுவதில்லை. ஆனால் ஒரு வியாபார நடவடிக்கையினை ஆரம்பித்து கணக்கியலைப் புரிந்துகொள்வதற்கு இலகுவானதாகக் காணப்படுகின்றது.

**1. ஆரம்ப மூலதனம் (THE INTRODUCTION OF CAPITAL)**

*01-03-1994இல் பிரஷாத் என்பவர் 50,000/- வினை வங்கியில் வைப்புச்செய்து வியாபாரத்தினை ஆரம்பித்தார். அவருடைய ஐந்தொகை பின்வருமாறு காணப்படும். பிரஷாத் என்பவரினுடைய*

**01-03-1994இல் உள்ளவாறான ஐந்தொகை**

| சொத்துக்கள் | ரூபா | | ரூபா |
|---|---|---|---|
| காசும் வங்கியும் | 50000/- | மூலதனம் | 50000/- |
| | 50000/- | | 50000/- |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. காசோலை மூலம் சொத்துக்கள் கொள்வனவு

THE PURCHASE OF AN ASSETS BY CHEQUE

03-03-1994இல் பிரஷாத் 30,000/- பெறுமதியான கட்டடங்களைக் கொள்வனவு செய்தார். இவ் வியாபார நடவடிக்கை மூலம் வங்கியில் உள்ள பணமானது குறைவடைய புதிய சொத்து கட்டடம் உருவாகின்றது.

03-03-1994இல் உள்ளவாறான ஐந்தொகை

| சொத்துக்கள் | | | |
|---|---|---|---|
| கட்டடம் | 30000/- | மூலதனம் | 50000/- |
| வங்கியின் காசு | 20000/- | | |
| | 50000/- | | 50000/- |

3. சொத்து கொள்வனவும் பொறுப்பு அதிகரிப்பும்

THE PURCHASE OF AN ASSET SINCURRING OF A LIABILITY

06-03-1994இல் பிரஷாத் 5000/- பெறுமதியுடைய பொருட்களை கண்ணன் என்பவரிடம் கொள்வனவு செய்தார். அம்பொருட்களுக்கான பணத்தினை 2 கிழமைகளில் செலுத்துவதற்கு உடன்பட்டனர். இவ் வியாபார நடவடிக்கையால் புதிய சொத்தான சரக்கிருப்பு அதிகரிப்பதுடன் அச் சொத்துக்களை வாங்கியதற்கான பொறுப்பும் அதிகரிக்கின்றது. இது கடன் கொடுத்தோர் ஆக காணப்படுகின்றது.

பிரஷாத் என்பவரினுடைய 06-03-1994இல் உள்ள ஐந்தொகை

| சொத்துக்கள் | | மூலதனமும் பொறுப்புகளும் | |
|---|---|---|---|
| கட்டடம் | 30,009 | மூலதனம் | 50,000 |
| சரக்கிருப்பு | 5,000 | கடன் கொடுத்தோர் | 5,000 |
| வங்கியில் காசு | 20,000 | | |
| | 55,000 | | 55,000 |

4. சொத்துக்கள் கடனுக்கு விற்பனை SALE OF AN ASSET ON CREDIT

10-03-1994இல் 1000/- பெறுமதியான பொருட்கள் பின்னர் பணம் செலுத்தலாம் என்ற அடிப்படையில் முகுந்தனுக்கு விற்கப்பட்டது. இந் நடவடிக்கையால் சரக்கிருப்பு குறைவதுடன் புதிய சொத்தான கடன்பட்டோர் அதிகரித்தது. ஐந்தொகை பின்வருமாறு

பிரஷாத் என்பவரின் 10-03-94இல் உள்ளவாறான ஐந்தொகை

| சொத்துக்கள் | | மூலதனமும் பொறுப்பும் | |
|---|---|---|---|
| கட்டடம் | 30000 | மூலதனம் | 50000 |
| சரக்கிருப்பு | 4000 | கடன் கொடுத். | 5000 |
| கடன்பட்டோர் | 1000 | | |
| வங்கியில் உள்ள காசு | 20000 | | |
| | 55000 | | 55000 |

5. காசிற்கு சொத்து விற்பனை

SALE OF AN ASSET FOR IMMEDIATE pAYMENT

13-03-1994இல் 500/- பெறுமதியான பொருட்கள் மாறனுக்கு விற்கப்பட்டது. மாறன் உடனடியாக 500/- வினை காசோலையாக செலுத்தினார். இதனால் சரக்கிருப்பு குறைவடைய வங்கியில் உள்ள காசு அதிகரித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரஷாத்தினுடைய 13-03-1994இல் உள்ளவாறான ஐந்தொகை

| சொத்துக்கள் | | மூலதனமும் பொறுப்புகளும் | |
|---|---|---|---|
| கட்டடம் | 30000 | மூலதனம் | 50000 |
| சரக்கிருப்பு | 3500 | கடன் கொடு. | 5000 |
| கடன்பட்டோர் | 1000 | | |
| வங்கியில் உள்ள காசு | 20500 | | |
| | 55000 | | 55000 |

6. பொறுப்புகள் கொடுத்து தீர்மானிக்கப்பட்டன.

## THE PAYMENT OF A LIABILITY

*15-03-1994இல் பிரஷாத் 2000/– காசோலையினை கண்ணனுக்கு பகுதிக் காசாகக் கொடுத்தார். சொத்துப் பக்கத்தின் வங்கில் பணம் குறைவடைவதுடன் கடன் கொடுத்தோரும் குறைவடைகின்றது.*

பிரஷாத்தின் 15-3-94இல் உள்ளவாறான ஐந்தொகை

| சொத்துக்கள் | | மூலதனமும் பொறுப்பும் | |
|---|---|---|---|
| கட்டடம் | 30000 | மூலதனம் | 50000 |
| சரக்கிருப்பு | 3500 | கடன் கொடுத். | 3000 |
| கடன்பட்டோர் | 1000 | | |
| வங்கியில் உள்ள காசு | 18500 | | |
| | 53000 | | 53000 |

7. சேகரிக்கப்பட்ட சொத்துக்கள் COLLECTION OF ASSETS

*முகுந்தன் பிரஷாத் என்பவருக்கு கொடுக்கவேண்டிய 1000/– வில் பகுதிக் கொடுப்பனவாக 750/– வினை 31-3-94இல் காசோலை மூலம் கொடுத்துத் தீர்த்தார். இதனால் கடன்பட்டோர் குறைவடைய மற்ற சொத்தான வங்கியில் உள்ள காசு அதிகரித்தது.*

பிரஷாத் என்பவரின் 31-3-94இல் உள்ளவாறான ஐந்தொகை

| சொத்துக்கள் | | மூலதனமும் பொறுப்புகளும் | |
|---|---|---|---|
| கட்டடம் | 30000 | மூலதனம் | 50000 |
| சரக்கிருப்பு | 3500 | கடன் கொடுத். | 3000 |
| கடன்பட்டோர் | 250 | | |
| வங்கியில் காசு | 19250 | | |
| | 53000 | | 53000 |

## கணக்கியல் சமன்பாட்டின் சமநிலைத்தன்மை
## EQUALITY OF THE ACCOUNTING EQUATION

*ஒவ்வொரு நடவடிக்கைகளும் 2 நிகழ்வுகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. சிலவேளைகளில் 2 நடவடிக்கைகளும் சொத்துக்களை மாற்றமடையச் செய்கின்றன. அதில் ஒன்று குறைக்கப்பட மற்றது அதிகரிக்கப்படுகின்றது. வேறு நேரங்களில் வித்தியாசமாக வெளிப்படுத்தப்படலாம். எனவே தொகுப்பாக கூறின் அது பின்வருமாறு காணப்படும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நடவடிக்கைகள் TRANSACTIONS | தாக்கங்கள் EFFECTS | |
|---|---|---|
| 1. பொருட்கள் கடனுக்கு கொள்வனவு | சொத்து அதிகரிப்பு (சரக்கிருப்பு) | பொறுப்பு அதிகரிப்பு (கடன் கொடுனர்) |
| 2. காசோலை மூலம் பொருட்கள் கொள்வனவு | சொத்து அதிகரிப்பு (சரக்கிருப்பு) | சொத்து குறைப்பு (வங்கி) |
| 3. காசோலை மூலம் கடன்கொடுனர் கொடுப்பனவு | சொத்து குறைப்பு (வங்கி) | பொறுப்பு குறைதல் (கடன் கொடுனர்) |
| 4. உரிமையாளர் வங்கிமூலம் மேலதிக மூலதன கொடுப்பனவு | சொத்து அதிகரிப்பு (வங்கி) | மூலதனம் அதிகரித்தல் |
| 5. உரிமையாளரின் சொந்த தேவைக் கான வங்கிமூலம் காசுப்பற்று | சொத்து குறைதல் (வங்கி) | மூலதனம் குறைதல் |
| 6. உரிமையாளர் வெளிநிறுவனத்திட மிருந்து காசினைப் பெற்று கடன் கொடுனருக்கு கொடுத்தல். | பொறுப்பு குறைதல் (கடன் கொடுனர்) | மூலதனம் அதிகரித்தல் |

இச்செயற்பாட்டினை பின்வருமாறும் வெளிப்படுத்தலாம்.

| நடவடிக்கைகள் | சொத்துக்கள் | மூலதனமும் பொறுப்பும் | மொத்த ஐந்தொகையின் தாக்கம் |
|---|---|---|---|
| 1. | + | + | இரண்டு பக்கமும் சமனாக அதிகரிக்கிறது. |
| 2. | ± | | சொத்துப் பக்கத்தில் அதிகரிப்பும் குறைவும் ஏற்படுவதால் மாற்றம் இல்லை. |
| 3. | − | − | இரண்டு பக்கமும் சமனாக குறைவடைகிறது. |
| 4. | + | + | இரண்டு பக்கமும் சமனாக அதிகரிக்கிறது. |
| 5. | − | − | இரண்டு பக்கமும் சமனாக குறைதல். |
| 6. | | ∓ | பொறுப்புப் பக்கமே அதிகரிப்பும் குறைவும் ஏற்படுவதனால் மாற்றம்இல்லை. |

**REFERENCE**
BUSINESS ACCOUNTINC 1—FRANK WOOD BSC (ECON), FCA.

தாயை யாருடனும் ஒப்பிடலாகாது. அவள் ஒப்பற்றவள்.
(பெல்ஜியம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூடிலியா சர்மிலா விஜயராஜா
ஆண்டு 13 வர்த்தகம்

# கணக்கீட்டின் முக்கியத்துவம்

சமூகத்தின் தேவைகளைத் தற்போதுள்ள வளங்களுடன் ஒப்பிட்டு நோக்கும் போது வளங்கள் வரையறுக்கப்பட்டவையாக காணப்படுகின்றன. மூலப்பொருட்கள், பணம், பொறித்தொகுதி, ஊழியம், தொழில்நுட்பம் போன்ற மனித பௌதிக வளங்களின் அருமைத் தன்மையினால் அவைகளை உச்சப்பயன் அளிக்கக் கூடிய முறையில் பயன்படுத்த வேண்டியுள்ளது. வளங்களை உத்தம அளவில் பயன்படுத்துவதற்கு மாற்றங்கள் பற்றிய தகவல்கள் முக்கியமானவை. எனவே நிறுவனங்களின் சகல பொருளியல் தொழிற்பாடுகள் பற்றிய தகவல்களை அவ்வப்போது பதிவு செய்து கொள்வதும், அவற்றைப் பகுப்பாய்வு செய்து கொள்வதும் மிக முக்கியமான செயற்பாடாகும்.

சமூக வளர்ச்சியும் தேவைகளின் பல்லினத்தன்மையும் உற்பத்திக்கான கேள்வியை அதிகரிக்கச் செய்துள்ளது. இந்நிலமை பாரிய நிறுவனங்களின் தோற்றத்துக்கு வழிகோலியது. நிறுவன அமைப்புக்களுக்கிடையே ஏற்பட்ட போட்டியும் நிர்வாகப் பிரச்சனைகளும் அந்நிறுவனங்கள் மீது சட்டச் செல்வாக்கைப் பிரயோகிக்க வேண்டிய தேவைகள் எழுந்தன. இதன் விளைவாக நிறுவனங்களின் உத்தம பயன்பாட்டைப் பெற்றுக் கொள்வது மாத்திரமன்றி சட்டத் தேவைகளையும் நிறைவு செய்து கொள்ளும் முகமாகவும் கணக்கீட்டின் தேவைகள் முக்கியத்துவமடைந்தன.

## கணக்கீட்டின் நோக்கங்கள்

1. நிறுவனங்களின் தொழிற்பாட்டு விளைவுகளைக் கணித்தல்.

நிறுவனத்திலே நடைபெறும் கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகள், நிலைமாற்றங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு எத்தகைய விளைவுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது கணக்கீட்டின் பிரதான நோக்கமாக அமைகின்றது. குறித்த காலத்தில் நிகழ்ந்த வருமானங்களையும், செலவுகளையும் ஒப்பிடுவதன் மூலம் நிறுவனத்தின் தொழிற்பாட்டுப் பெறுபேறுகளை அறியலாம். அதாவது நிறுவனத்தின் இலாபத்தையோ அல்லது நட்டத்தையோ அறிந்து கொள்ளலாம்.

2. நிதி நிலைமைகளை அறிந்து கொள்ளல்.

குறித்த ஒரு நிறுவனத்தின் நிதி நிலைமையை மதிப்பிடுவதற்கு தேவையான சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமையாண்மை ஆகியவற்றை உள்ளடக்கிய ஐந்தொகை ஆகிய கூற்று அவசியமாகின்றது. நிதி நிறுவனத்தின் நிதி நிலமை பற்றிய தீர்மானம் மேற்கொள்ள ஐந்தொகை பயன்படுத்தப்படுகின்றது.

3. சட்டத் தேவைக்கேற்ற கணக்கீட்டுத் தகவலை வழங்கல்.

நிறுவனங்கள் எல்லாம் நாட்டின் பல்வேறு சட்ட அமைப்பு விதிகளுக்கமையவே செயற்படுகின்றன. கணக்கீட்டுச் செயல்பாடுகள் எல்லாம் சட்ட விதிகளுக்கேற்பவே மேற்கொள்ளப்படுகின்றன. உதாரணமாக 1982 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க கம்பனிகள் கட்டளைச்சட்டம் இலங்கையிலுள்ள கம்பனிகள் குறைந்த பட்சம் தயாரிக்க வேண்டிய நிதிக்கூற்றுக்களையும் வைத்திருக்க வேண்டிய கணக்கேடுகளையும் எடுத்துக் காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்கீட்டுத்தகவல்கள் முகாமைக்கு மாத்திரமன்றி வெளியாருக்கும் பயன் படுகின்றது. சமூகத்தைப் பொறுத்தளவில் அதன் அபிவிருத்திக்கு கணக்கீட்டுத் தகவல்கள் பயனுள்ளனவாக அமைகின்றன. மக்களும், நிறுவனங்களும் தங்கள் பணத்தையும், வளங்களையும் இலாப நோக்கம் கருதி முதலிடுகின்றன. முதலீடுகளுக்கு நிச்சயமற்ற தன்மைகளும் அபாயங்களும் ஏற்படக்கூடும். கணக்கிடு வழங்கும் தகவல்கள் மூலம் முதலீடுகளுக்கேற்படும் நிச்சயமற்ற தன்மைகளை வெகுவாகக் குறைக்க முடியும். எனவே நிறுவன அமைப்புக்களின் கணக்கீட்டுத் தகவல்கள் முதலீட்டுச் செயற்பாட்டின் போது முதலீட்டாளர்களுக்குப் பயன்படுவதால் அதன் மூலம் ஏற்படும் மக்கள் வளர்ச்சியானது சமூக வளர்ச்சிக்குக் காரணமாக அமைகின்றது. கணக்கீட்டு தகவல்கள் மூலம் சமூகத் தேவைகள் நிறைவு பெற வேண்டுமானால் அத்தகவல்கள் பின்வரும் பண்பு சார் நலன்கள் கொண்டனவாக இருத்தல் வேண்டும்.


1) எதிர்காலத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு உதவக் கூடியதாக இருக்கவேண்டும்.

அ) கடந்தகால அனுபவங்களுக்கேற்ப எதிர்கால நடவடிக்கைகளைச் செவ்வை பார்க்க உதவக்கூடியதாக இருக்க வேண்டும்.

ஆ) பொருத்தமான காலப் பகுதிக்கு வழங்கக் கூடிய தகவல்களாக இருக்க வேண்டும்.

2) உண்மைத் தகவல்களாகவும் நடுநிலைத்தன்மையுடைய தகவல்களாகவும் இருத்தல் வேண்டும்.

எனவே இத்தகைய பண்பு சார் நலன்கள் கொண்ட கணக்கீட்டுத் தகவல்களைப் பின்வரும் பாச்சல் கோட்டு வரைவு மூலம் விளக்கலாம்.




புள்ளி விபரங்களாக உள்ள தகவல்களும், எண் வடிவிலுள்ள தகவல்களும் அளவு சார் தகவல்களாக அமைகின்றன. நிறுவன அமைப்பு தொடர்பான எண்வடிவம் பெறாத தகவல்கள் அளவு சாராத்தகவல்களாகும். நிதித்தன்மை வாய்ந்த புள்ளிவிபரங்களாக வெளிபடுத்த கூடிய தகவல்கள் கணக்கீடு சார் தகவல்களாக அமைகின்றன. கணக்கீட்டு செயற்பாட்டிற்கு உட்படாத நிதியலகிவால் மதிப்பிட முடியாதவை கணக்கீடு சாரத் தகவல்களாகும். உதாரணம் மூலம் விளக்குவோமாகில் நிறுவனத்தில் 5000 தொழிலாளர் வேலை செய்கின்றார்கள். இது அளவுசார் தகவல், ஆனால் கணக்கீடு சாராத்தகவலாகும். நிறுவனத்திலுள்ள மோட்டார் வானின் பெறுமதி 50,000 ரூபாவாகும். இது அளவுசார் தகவல், ஆனால் கணக்கீடு சார்ந்த தகவலாகும். நிறுவனத்தின் எல்லாப் பொருளாதார வளங்களும் உச்ச வினைத்திறனுடன் குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்வதற்காக எவ்வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளதென்பதை கணக்கியல் தகவல்கள் வெளிப்படுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகவல்கள் உற்பத்தி, வியாபார இலாப நட்ட கணக்கு, ஐந்தொகை, நிதி பாய்ச்சல் கூற்று, கணக்கீட்டு விகிதங்கள் போன்றவை மூலமாகப் பிரதிபலிக்கின்றன. இத்தகவல்கள் உள்வாரிக் கட்சியினருக்கும், வெளிவாரிக் கட்சியினருக்கும் பயன்படுகிறது. வெளிவாரிக் கட்சியினருக்கு கணக்கீட்டுத் தகவல்கள் எவ்வாறு பயன்படுகிறது என்பதை நோக்குவோம்.

உரிமையாளர்கள் — தங்கள் முதலீட்டுக்குப் போதியளவு இலாபம் கிடைக்கிறதா என்பதையும், மேலும் முதலீடு செய்யலாமா என்பதையும் நிதிக் கணக்கீடு மூலம் தகவல்களைப் பெறுவர்.

கடன் கொடுநர் — நிறுவனத்திற்கு கடன் வழங்குவது பொருத்தமானதா? வழங்கப்பட்ட கடனை எதிர்காலத்தில் தீர்க்க கூடிய நிலையில் நிறுவனம் இருக்கிறதா? என்பன போன்ற விபரங்களை நிதிக் கணக்கீடு அளிக்கின்றது.

ஊழியர்களும், தொழிற்சங்கமும் — ஊழியர்களுக்கு வேதனம் கூடுதலாக கொடுக்கக் கூடிய நிலையில் நிறுவனம் இருக்கின்றதா? மிகை ஊதியம் வழங்கக்கூடிய நிலையில் நிறுவனம் இருக்கிறதா? மேலும் வேலை வாய்ப்பு வழங்க கூடியதாக நிதிவளம் உண்டா? என்பன போன்ற பல வினாக்களுக்கு நிதிக் கணக்கியல் மூலம் தீர்வு காணலாம்.

வாடிக்கையாளர் — நிறுவனங்கள் மூலம் தரமான பொருட்களை நியாயமான விலைக்கு வழங்கக்கூடிய சக்தி நிறுவனத்திற்கு இருக்கிறதா? நிறுவனம் தொடர்ந்து தமது வாடிக்கையாளரின் தேவையை நிறைவேற்ற கூடிய நிலையில் இருக்கின்றதா? என்பது போன்ற வினாக்களுக்கு நிதிக் கணக்கியல் மூலம் தீர்வு காணலாம்.

அரசநிறுவனங்கள் — நிறுவனங்கள் தங்கள் புரள்வுக்கேற்ப விற்பனவு வரியைச் செலுத்துகின்றனவா என்பது வருமான வரித் திணைக்களத்திற்கு ஏற்பட்டுள்ள பாரிய பிரச்சனையாகும். கம்பனிப் பதிவுத் திணைக்களம், கைத்தொழில் விஞ்ஞான அமைச்சு, சுங்கவரித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, தொகை மதிப்பீட்டுப்புள்ளி விபரத்திணைக்களம் போன்ற நிறுவனங்களுக்குத் தேவையான அறிக்கைகளையும், புள்ளி விபரங்களையும் நிறுவனங்கள் வழங்குவதற்கு நிதிக் கணக்கீடு மூலம் தீர்வுகளைப் பெற்றுக் கொள்கின்றன.

மக்கள் — நிறுவன அமைப்புக்களின் மூலம் ஏற்படும் சுற்றாடல் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்வதற்கும் நிறுவனங்கள் பொது மக்களுக்குத் தேவையான பொருட்களையும், சேவைகளையும் உற்பத்தி செய்து வழங்குவதற்கும் நிதிக்கணக்கீடு பயன்படுகின்றது.

எனவே நிறுவன அமைப்புகளின் மனித வளங்களையும், பௌதிக வளங்களையும் நெறிப்படுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும் கணக்கீட்டு அறிவின் முக்கியத்துவம் உணரப்படுகின்றது.

> நம்முடைய சட்டப்புத்தகங்களைவிடப் பெண்களின் பார்வையில் அதிக பலமிருக்கிறது. நம்முடைய சட்டவாதப் பிரதிவாதங்களை விட பெண்களின் கண்ணீருக்கு அதி சக்தியுண்டு.
>
> (பொவைல்)

நளினி. கிருஸ்ணப்பிள்ளை,
ஆண்டு 13 வர்த்தகம்

# பங்காளர் விலகல் தொடர்பான பங்குடமை நடைமுறைகள்

தனியார்துறைத் தொழில் நிறுவனங்களிலே இரண்டாவதாக அறிமுகப்படுத்தப்பட்டதே பங்குடமை என்ற அமைப்பாகும். இது தனி வியாபாரத்திலுள்ள குறைபாடுகளை நீக்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது. அதாவது குறைவான மூலதனம், நட்டப் பொறுப்பு வரையறுக்கப்படுதல் ஆகிய குறைபாடுகளை இல்லாமல் செய்து அதிகமூல தனத்தைத் திரட்டவும் நட்டப்பொறுப்புகளை பரவலாக்கவும் வசதியாகவே பங்குடமை 1890-ம் ஆண்டு பங்குடமை சட்டத்தின்படி உருவாக்கப்பட்டது.

1890-ம் ஆண்டில் பங்குடமை சட்டத்தின் 42-ம் பிரிவு பங்காளர் ஒருவர் இளைப்பாறுதல் தொடர்பான அம்சங்களை எடுத்துரைக்கின்றது. விலகிச்செல்லும் பங்காளர் அவர் ஈட்டிக்கொண்ட நன்மதிப்புப் பங்கை அவர் ஓய்வுபெற்றுச் செல்லும்போது வழங்குதல் வேண்டும். இதற்கான எந்தஒரு நன்மதிப்புப்பதிவின்போதும் நீங்கும் பங்காளரின் மூலதனம் அதிகரித்துக் காணப்படும். விலகும் பங்காளர் விலகிச் செல்லும்போது பின்வரும் விடயங்கள் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

(அ) 1. நீங்கிச்செல்லும்வரை அவ்வருடத்தின் இலாபம் உள்ளடங்கும் நடைமுறைக் கணக்குமீதி.
2. மீள் மதிப்பீட்டுக் கணக்கின் மிகை.
3. ஒதுக்கங்களிருப்பின் அவற்றில் விலகும் பங்காளரின் பகுதி.
4. விலகும் பங்காளருக்கான நன்மதிப்பின் பங்கு.
5. மூலதனக் கணக்கின் மீதி.

(ஆ) நீங்கிச் செல்லும் பங்காளருக்கு வேண்டிய மேற்குறிப்பிடப்பட்ட வகைகளின் மொத்தம் உடன் செலுத்தப் படவில்லையாயின் கடன் கணக்குக்கு மாற்றப் படுதல் வேண்டும், அக்கடனுக்கு செலுத்த வேண்டிய வட்டிவீதமும் பங்குடமைச்சட்டத்தின் 42-ம் பிரிவின்படி 5% மாக இருத்தல் வேண்டும்.

பங்காளர் விலகும்போது பின்வரும் நன்மதிப்பு சம்பந்தமான சீராக்கங்கள் கணக்குப் பதிவுக்கு எடுக்கப்படுகின்றன.

பங்குடமையிலிருந்து விலகும் பங்காளருக்குரிய நன்மதிப்புத் தொகையை அவருக்குச் செலுத்துவதற்கும் தொடரும் பங்காளர் விலகும் பங்காளர் விட்டுச்செல்லும் நன்மதிப்புத் தொகையை அனுபவிப்பதற்கும் நன்மதிப்புசம்பந்தமான சீராக்கங்கள் கணக்கு பதிவுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

நன்மதிப்பு சம்பந்தமான சீராக்கப் பதிவுகள் பின்வரும் முறைகளில் மேற்கொள்ளப்படுகின்றது.

1. நன்மதிப்புக் கணக்கை உருவாக்குதல்.
2. நன்மதிப்பு உருவாக்கிப் பதிவழித்தல்.
3. நன்மதிப்பு கணக்கு உருவாக்காது வேண்டிய சீராக்கங்கள் மூலதன கணக்கின் ஊடாக மேற்கொள்ளல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. விலகும் பங்காளருக்குரிய நன்மதிப்புத் தொகையை மட்டும் உருவாக்கல்.
5. விலகும் பங்காளர் தொகைக்கு நன்மதிப்பை உருவாக்கிப் பதிவழித்தல்.

நன்மதிப்புக் கணக்கை உருவாக்கல் (விலகுமுன்)

நன்மதிப்புக் கணக்கு வரவு

அனைத்து பங்காளர் மூலதனக்கணக்கு செலவு (பழைய இலாபநட்ட விகிதம்)

உ-ம்: இலாப நட்டங்களை 3 : 2 : 2 எனப்பகிரும் ஓர் பங்குடமையில் K, L, M என்பவர்கள் பங்காளர்கள் ஆவர்.

31. 12. 92-ல் இவர்களது பங்குடமையின் புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்ட ஐந்தொகை வருமாறு.

31 - 12 - 92-ல் ஐந்தொகை

| | | | |
|---|---|---|---|
| மூலதனம் | | இயந்திரம் | 100000 |
| K | 125000 | தளபாடம் | 75000 |
| L | 100000 | இருப்பு | 75000 |
| M | 90000 | கடன்பட்டோர் | 80000 |
| பொதுஒதுக்கம் | 35000 | காசு மீதி | 20000 |
| | 350000 | | 350000 |

K, 1. 1. 93-ல் ஓய்வு பெறுகிறார். எனவே L, M இப்பங்குடமையில் தொடர்ந்தும் பங்காளராக இருக்கின்றனர்.
இலாபநட்டவிகிதம் 3 ; 2 (புதியவிகிதம்) K, 50000/- கொள்விலை உடைய முதலீட்டையும் எஞ்சியவற்றில் 50%ஐ கடனாகவிட்டு மீதியைக் காசாக எடுத்தார். நன்மதிப்பானது 63000/-ஐ உருவாக்குவதன் மூலம் சிராக்கங்களை மேற்கொள்வதாயின் கணக்குப் பதிவுகள் பின்வருமாறு அமையும்.

| நாட்குறிப்பு | வரவு | செலவு |
|---|---|---|
| பொது ஒதுக்க கணக்கு | 35000 | |
| K மூலதன கணக்கு | | 15000 |
| L மூலதன கணக்கு | | 10000 |
| M மூலதன கணக்கு | | 10000 |
| (பொது ஒதுக்கத்தை மூலதனக் கணக்கிற்கு மாற்றுதல்) | | |
| நன்மதிப்பு கணக்கு | 63000 | |
| K மூலதனக் கணக்கு | | 27000 |
| L மூலதனக் கணக்கு | | 18000 |
| M மூலதனக்கணக்கு | | 18000 |
| ( நன்மதிப்பை மூலதனக் கணக்கிற்கு மாற்றுதல்) | | |
| K மூலதனக் கணக்கு | 167000 | |
| முதலீடு கணக்கு | | 50000 |
| கடன் கணக்கு | | 58500 |
| காசுக் கணக்கு | | 58500 |
| (K மூலதனக் கணக்குமீதி சிராக்குதல்) | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K, L, M. மூலதனக்கணக்கு

| விபரம் | K | L | M | விபரம் | K | L | M |
|---|---|---|---|---|---|---|---|
| முதலீடு | 50000 | — | — | மீ இ கொ/வ | 125000 | 100000 | 90000 |
| கடன் | 58500 | — | — | பொதுஒது | 15000 | 10000 | 10000 |
| காசு | 58500 | — | — | நன்மதிப்பு | 27000 | 18000 | 18000 |
| மீ/இ/கொ/செ | | 128000 | 118000 | | | | |
| | 167000 | 128000 | 118000 | | 167000 | 128000 | 118000 |

**2. நன்மதிப்புக் கணக்கை உருவாக்கிப் பதிவழித்தல்.**

1. நன்மதிப்புக் கணக்கு வரவு
   அனைத்துப் பங்காளர் மூலதனக் கணக்கு செலவு
   (விலகுமுன் பழைய இலாபநட்ட விகிதப்படி)

2. தொடரும் பங்காளர் மூலதனக் கணக்கு வரவு
   நன்மதிப்புக் கணக்கு செலவு
   (விலகிய பின்பு புதிய இலாபநட்ட விகிதப்படி)

மேற்குறிப்பிட்ட உதாரணக்கணக்கின்படி

நன்மதிப்புச் சமபந்தமான சிராக்கங்களுக்கு பின்வருமாறு பதிவுகள் இடப்படுகின்றன.

K. L. M. மூலதனக் கணக்கு

| விபரம் | K | L | M | விபரம் | K | L | M |
|---|---|---|---|---|---|---|---|
| முதலீடு | 50000 | — | — | மீதி | 125000 | 100000 | 90000 |
| கடன் | 58500 | — | — | பொதுஒதுக்கம் | 15000 | 10000 | 10000 |
| நன்மதிப்பு | — | 37800 | 25200 | நன்மதிப்பு | 27000 | 18000 | 18000 |
| காசு | 58500 | — | — | | | | |
| மீ/இ/கொ/செ | — | 90200 | 92800 | | | | |
| | 167000 | 128000 | 18000 | | 167000 | 128000 | 118000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நாட்குறிப்பு | | வரவு | செலவு |
|---|---|---|---|
| பொது ஒதுக்கம் | | 35000 | |
| K | மூலதனக் கணக்கு | | 15000 |
| L | மூலதனக் கணக்கு | | 10000 |
| M | மூலதனக் கணக்கு | | 10000 |
| பொது ஒதுக்கத்தை மூலதனக்கணக்கிற்கு மாற்றுதல்) | | | |
| நன்மதிப்புக் கணக்கு | | 63000 | |
| K | மூலதனக் கணக்கு | | 27000 |
| L | மூலதனக் கணக்கு | | 18000 |
| M | மூலதனக் கணக்கு | | 18000 |
| (நன்மதிப்பை மூலதனக்கணக்கிற்கு மாற்றல்) | | | |
| L | மூலதனக் கணக்கு | 37800 | |
| M | மூலதனக் கணக்கு | 25200 | |
| | நன்மதிப்புக்கணக்கு | | 63000 |
| (நன்மதிப்பைப் பதிவழித்தல்) | | | |

நன்மதிப்புக் கணக்கு உருவாக்காது வேண்டிய பதிவுகள் மூலதனக் கணக்கினூடகச் சீராக்கப்படின் பதிவுகள் பின்வருமாறு அமையும்.

தொடரும் பங்காளர் மூலதனக்கணக்கு வரவு
(புதிய லாபநட்ட விகிதம்)
அனைத்துப் பங்காளர் மூலதனக் கணக்கு செலவு
(பழைய இலாபநட்ட விகிதம்

மேற்குறிப்பிட்ட உதாரணங்களின்படி
நன்மதிப்புச் சீராக்கம் மூலதனக்கணக்கினூடாக மேற்கொள்ளப்படின் கணக்குப்பதிவுகள் பின்வருமாறு

K, L, M, மூலதனக் கணக்கு

| விபரம் | K | L | M | விபரம் | K | L | M |
|---|---|---|---|---|---|---|---|
| முதலீடு | 50000 | — | — | மீதி | 125000 | 100000 | 90000 |
| கடன் | 58500 | — | — | பொதுஒதுக்கம் | 15000 | 10000 | 10000 |
| நன்மதிப்பு | — | 37800 | 25200 | நன்மதிப்பு | 27000 | 18000 | 18000 |
| காசு | 58500 | — | — | | | | |
| மீதி | — | 90200 | 92800 | | | | |
| | 167000 | 128000 | 118000 | | 167000 | 128000 | 118000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்குறிப்பு

| | வரவு | செலவு |
|---|---|---|
| பொது ஒதுக்கம் | 35000 | |
| K மூலதனக் கணக்கு | | 15000 |
| L மூலதனக் கணக்கு | | 10000 |
| M மூலதனக் கணக்கு | | 10000 |
| (பொது ஒதுக்கத்தை மூலதனக் கணக்கிற்கு மாற்றல்) | | |
| K மூலதனக் கணக்கு | 167000 | |
| முதலீட்டுக் கணக்கு | | 50000 |
| கடன் கணக்கு | | 58500 |
| காசுக் கணக்கு | | 58500 |
| (K மூலதனக்கணக்கைத் தீர்த்தல்) | | |
| L மூலதனக் கணக்கு | 37800 | |
| M ,, ,, | 25200 | |
| K மூலதனக் கணக்கு | | 27000 |
| L மூலதனக் கணக்கு | | 18000 |
| M மூலதனக் கணக்கு | | 18000 |
| (பழைய இலாபநட்ட விகிதம்) | | |
| (நன்மதிப்பை மாற்றுதல்) | | |

3. விலகும் பங்காளரின் நன்மதிப்புத் தொகைக்கு மட்டும் நன்மதிப்புக்கணக்கு உருவாக்கல்

நன்மதிப்புக் கணக்கு வரவு
விலகும் பங்காளர் மூலதனக் கணக்கு செலவு

மேற்குறிப்பிட்ட உதாரணத்தின்படி
நன்மதிப்புச் சம்பந்தப்பட்ட சிராக்கம் விலகும் பங்காளர் தொகைக்கு நன்மதிப்பு கணக்கு உருவாக்கத்தினூடாக மேற்கொள்ளல்.

**மறுபடிவிலை மதித்தல் அல்லது மீள் மதிப்பிடுதல்.**

பங்குடைமையில் பங்காளர் விலகும்போது அப்பங்குடைமையில் காணப்படும் சொத்துக்கள் மீள்மதிப்புக்கு உட்படுத்தலே மறுபடிவிலைமதித்தல் எனப்படும்.

சொத்துக்கள் மறுபடி விலை மதிக்கப்படும்போது

1. சொத்தின் பெறுமதி அதிகரிக்கப்படுமாயின்
சொத்துக்கணக்கு வரவு
மறுபடி விலை மதிப்புக்கணக்கு செலவு

2. சொத்தின் பெறுமதி குறையுமாயின்
மறுபடி விலைமதித்தல் கணக்கு வரவு
சொத்துக் கணக்கு செலவு

மறுபடி விலைமதித்தல் இலாபம் ஏற்படும்போது
மறுபடி விலைமதித்தல் கணக்கு வரவு
பங்காளர் மூலதனக் கணக்கு செலவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபடி விலை மதித்ததால் நட்டம் ஏற்படும்போது
பங்காளர் மூலதனக் கணக்கு வரவு
மறுபடி விலை மதித்தல் கணக்கு செலவு

மேற்குறித்த உ+ம் படி
இயந்திரம் 120,000/- ஆகவும் தளபாடம் 70,000/- கையிருப்பு 4,000/- ஆல் குறைத்தும் கடன்பட்டோர் 10,000/- ஆல் அதிகரித்தும் விலைமதிக்கப் பட்டது. இதன்மூலம் பங்காளர் பெறும் இலாபத்தை கணிப்பிடுக.

மறுபடி விலைமதித்தல் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| தளபாடம் | 5000 | இயந்திரம் | 20000 |
| இருப்பு | 4000 | கடன்பட்டோர் | 10000 |
| இலாபம் K | 9000 | | |
| L | 6000 | | |
| M | 6000 | | |
| | 30000 | | 30000 |

மறுபடி விலைமதித்தல் இலாபம் மூலதனக் கணக்குக்கு மாற்றப்படும்.

K, L, M மூலதனக் கணக்கு

| விபரம் | K | L | M | விபரம் | K | L | M |
|---|---|---|---|---|---|---|---|
| முதலீடு | 50000 | — | — | மீதி | 125000 | 100000 | 90000 |
| கடன் | 58500 | — | — | பொது ஒதுக்கம் | 15000 | 10000 | 10000 |
| காசு | 58500 | — | — | நன்மதிப்பு | 27000 | — | — |
| மீ/ கீ/ கொ/ செ | | 110000 | 100000 | | | | |
| | 167000 | 110000 | 100000 | | 167000 | 110000 | 100000 |

நாட்குறிப்பு

| | வரவு | செலவு |
|---|---|---|
| பொது ஒதுக்க கணக்கு | 35000 | |
| K மூலதனக் கணக்கு | | 15000 |
| L மூலதனக் கணக்கு | | 10000 |
| M மூலதனக் கணக்கு | | 10000 |
| (பொது ஒதுக்கத்தை மூலதனக் கணக்கிற்கு மாற்றல்) | | |
| நன்மதிப்புக் கணக்கு | 27000 | |
| K மூலதனக் கணக்கு | | 27000 |
| (நன்மதிப்பை K மூலதனக்க/கிற்கு மாற்றல்) | | |
| K மூலதனக் கணக்கு | 167000 | |
| கடன் கணக்கு | | 58500 |
| முதலீட்டுக் கணக்கு | | 50000 |
| காசுக் கணக்கு | | 58500 |
| (K மூலதனக் க/கைத் தீர்த்தல்) | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலகும் பங்காளர் தொகைக்குமட்டும் நன்மதிப்புக் கணக்கு உருவாக்கிப் பதிவழித்தல்.

1. நன்மதிப்புக் கணக்கு உருவாக்கல் (விலகுமுன் பழைய இ/நட்டவீதம்)
நன்மதிப்புக் கணக்கு வரவு
விலகும் பங்காளர் மூலதனக் கணக்கு செலவு

2. பதிவழிக்கும்போது
தொடர்ந்திருக்கும் பங்காளர் மூலதனக் கணக்கு வரவு
நன்மதிப்புக் கணக்கு செலவு

மேற்குறிப்பிட்ட உதாரணத்தின்படி
விலகும் பங்காளர் தொகைக்கு மட்டும் நன்மதிப்புக் கணக்கு உருவாக்கி பதிவழித்தல்.

31.12.92-ல் முடிவுற்ற ஆண்டிற்கான மூலதனக் கணக்கு

| விபரம் | K | L | M | விபரம் | K | L | M |
|---|---|---|---|---|---|---|---|
| முதலீடு | 50000 | | | மீதி | 125000 | 100000 | 90000 |
| நன்மதிப்பு | — | 19800 | 7200 | பொது ஒதுக்கம் | 15000 | 10000 | 10000 |
| கடன் | 58500 | — | — | நன்மதிப்பு | 27000 | — | — |
| காசு | 58500 | — | — | | | | |
| மீ/செ. | | 90200 | 92800 | | | | |
| | 167000 | 110000 | 100000 | | 167000 | 110000 | 100000 |

நாட்குறிப்பு

| | வரவு | செலவு |
|---|---|---|
| பொது ஒதுக்கக் கணக்கு | 35000 | |
| K மூலதனக் கணக்கு | | 15000 |
| L மூலதனக் கணக்கு | | 10000 |
| M மூலதனக் கணக்கு | | 10000 |
| (பொது ஒதுக்கத்தை மூலதனக் க/கிற்கு மாற்றல்) | | |
| நன்மதிப்புக் கணக்கு | 27000 | |
| K மூலதனக் கணக்கு | | 27000 |
| (நன்மதிப்புக் க/கை K மூலதனக் க/கிற்கு மாற்றல் | | |
| L மூததனக் கணக்கு | 19800 | |
| M மூலதனக் கணக்கு | 7200 | |
| நன்மதிப்புக் கணக்கு | | 27000 |
| (நன்மதிப்பைப் பதிவழித்தல்) | | |

| செய்கைவழி : | K | L | M |
|---|---|---|---|
| புதிய லாபநட்ட விகிதம் | | 37800 | 25200 |
| பழைய இலாபநட்ட விகிதம் | 27000 | 18000 | 18000 |
| | 27000 | 19800 | 7200 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியா றொஷானி எமெடியூஸ்,
ஆண்டு 13 வர்த்தகம்

# வழுக்களும் சீராக்கமும்

வர்த்தக நிறுவனங்களில் அன்றாடம் நிகழும் ஏராளமான கொடுக்கல் வாங்கல்கள் இரட்டைப்பதிவு முறைமூலம் துணை ஏடுகளிலும் பேரேடுகளிலும் பதிவு செய்யப்படுகின்றன. இவ்வாறு அதிகளவான பதிவுகள் மேற்கொள்ளப்படும் போது கணக்குப்பதிவுகளை மேற்கொள்ளும் ஊழியர்களின் கவனயீனம், போதிய பயிற்சியின்மை போன்ற காரணங்களினால் தவறுகள் ஏற்படுகின்றது.

எனவே வர்த்தக நடவடிக்கைகளை உரிய ஏடுகளில் பதிவு செய்த பின்னர் அந்நடவடிக்கைகள் சரியானவையாக இருக்கின்றதா எனப் பார்ப்பதற்காகவே பரீட்சை மீதி தயாரிக்கப்படுகின்றது. இப்பரீட்சை மீதியானது இரு பக்கமும் சமமாக இருக்குமாயின் எம்மால் மேற்கொள்ளப்பட்ட கணக்குப்பதிவு நடவடிக்கைகள் அனைத்தும் சரியானவை எனப் பொதுவாகக் கூறலாமே தவிர திட்டவட்டமாக கூறமுடியாது. எனெனில் பரீட்சை மீதி சமப்பட்டு இருக்கும்போதே அவை பிழைகளை வெளிக்காட்டாது நிற்கலாம். இவ்வாறு பரீட்சை மீதியில் வெளிக்காட்டப்படாத தவறுகளை வழுக்கள் என அழைக்கின்றோம். மாறாக பரீட்சைமீதி சமப்படாது பிழையினை வெளிக்காட்டுமாயின் பரீட்சை மீதியை தற்காலிகமாக சமப்படுத்துவதற்காக தொங்கல் கணக்கினை உருவாக்க வேண்டும். அதாவது இத்தகைய தவறுகள் தொங்கல் என்று கூறப்படுகின்றது. இவ்வாறு ஏற்படும் தவறுகளைப் பொதுத் தினசேரியில் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் திருத்திக் கொள்ளலாம்

**வழுக்கள் ஏற்படுவதற்கான காரணங்களாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்**
**(பரீட்சைமீதி வெளிப்படுத்தாத வழுக்கள்)**

1. விடுபட்ட பதிவுகள்
2. கணக்கு மாறிப்பதிதல்
3. கொள்கைத் தவறுகள்
4. ஈடாக்கும் தவறுகள்
5. மூலப்பதிவில் ஏற்படும் தவறுகள்
6. முற்றாக மாறிப் பதிதல்

## 1. விடுபட்ட பதிவுகள்

குறித்த ஒரு நடவடிக்கையுடன் தொடர்புபட்ட குறித்த பதிவு அந்நடவடிக்கையுடன் தொடர்புபட்ட இரு கணக்கிலும் முற்றாக பதிவு செய்யாது விடப்படுதலை இது குறிக்கும்.

உ – ம் : கொடுத்த வாடகை 200/- பற்றி ஏடுகளில் எப்பதிவும் இடம் பெறவில்லை. இதனைத் திருத்துவதற்குப் பின்வருமாறு பதிவினை மேற்கொள்ள வேண்டும்.
வாடகைக் க/கு வரவு 200/-
காசுக் க/கு செலவு 200/-
(கொடுத்த வாடகை 200/- ஏடுகளில் பதியாததைப் பதிந்த போது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. கணக்கு மாறிப்பதிதல்

குறித்த ஒரு வாடிக்கையாளருடன் தொடர்புபட்ட பதிவினை வேறு ஒரு வாடிக்கையாளரின் கணக்கில் பதிவு செய்தலை இது குறிக்கும்.

உ - ம் : ரஜனியிடம் கொள்வனவு 300/- வை ரமணியிடம் கொள்வனவு எனக்கருதி பதிவு செய்யப்பட்டது

இதனைத் திருத்திப்பதிவு செய்யும் போது பின்வருமாறு பதியப்படும்.

ரமணி க/கு வரவு 300/-

ரஜனி க/கு செலவு 300/-

(ரஜனியிடம் கொள்வனவு 300/- வை ரமணியிடம் கொள்வனவு எனக்கொண்டு பதிந்ததைத் திருத்திப் பதிந்தபோது)

## 3. கொள்கைத் தவறுகள்

கணக்கியலில் கொள்வனவு, விற்பனவு என்ற இரு பதங்களும் முக்கிய கருத்தினைக் கொண்டு காணப்படுகின்றது. "கொள்வனவு" என்பது மீள்விற்பனை கருதி பொருட்களை வாங்குவதையும் "விற்பனை" என்பது மீள்விற்பனைக்காக வாங்கிய பொருட்கள் விற்கப்படுவதையும் குறிக்கின்றது. இவ்விரு கணக்குகளிற்கும் விளக்கம் தெரியாத சில கணக்குப்பதிவாளர்கள் சொத்துக் கொள்வனவையும் விற்பனையையும் "கொள்வனவு" என்றும் "விற்பனை" என்றும் கொண்டு பதிவுகளை மேற்கொள்கின்றனர் இவ்வாறே மூலதனச் செலவு, வருமானச் செலவு இரண்டிற்கும் விளக்கம் தெரியாத கணக்குப்பதிவாளர்கள் மூலதனச் செலவை வருமானச்செலவாகவும், வருமானச் செலவை மூலதனச் செலவாகவும் கொண்டு பதிவுகளை மேற்கொள்கின்றனர். இவ்வாறான வழுக்களே கொள்கைத் தவறு எனக் கூறப்படுகின்றது.

உ - ம் :

1. உபகரணம் கொள்வனவு 5000/- கொள்வனவுக் கணக்கில் உள்ளடக்கப்பட்டு உள்ளது.
   இதனைத் திருத்திப் பதிவு செய்யும் போது பின்வருமாறு பதியப்படும்.
   உபகரணக் கொள்வனவு க/கு வரவு 5000/-
   கொள்வனவுக் க/கு செலவு 5000/-
   (உபகரணக் கொள்வனவு 5000/- கொள்வனவுக் கணக்கில் உள்ளடக்கப்பட்டு விட்டதனைத் திருத்தும் போது)

2. தளபாடத்திருத்தச் செலவு 500/- தளபாடத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
   இதனைத் திருத்திப் பதியும் போது பின்வருமாறு பதியப்படும்.
   தளபாடத் திருத்தச் செலவுக் க/கு வரவு 500/-
   தளபாடக் க/கு செலவு 500/
   (தளபாடத்திருத்தச் செலவு 500/- வை தளபாடத்தினுள் பதித்ததைத் திருத்திய போது)

## 4. ஈடாக்கற் தவறுகள்

இரு வேறுபட்ட மீதிகளைக் கொண்ட கணக்குகளில் ஒரே தொகையை கூட்டியோ அல்லது குறைத்தோ பதிதலைக் குறிக்கும்.

உ - ம் :

1. கொள்வனவும் விற்பனவும் 500/- வினால் குறைத்துப் பதியப்பட்டு விட்டது.
   இதனைத் திருத்திப்பதியும் போது பின்வருமாறு பதியப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வனவுக் க/கு வரவு 500/-

விற்பனைக் க/கு செலவு 500/-

(கொள்வனவு விற்பனை என்பன இரண்டும் 500/- வினால் குறைத்துப் பதியப் பட்டதைத் திருத்தியபோது)

2. கொடுத்த கழிவும் பெற்ற கழிவும் 300/- வினால் கூட்டிப் பதியப்பட்டு விட்டது. இதனைத் திருத்திப் பதியும் போது பின்வருமாறு பதியப்படும்.

பெற்ற கழிவுக் க/கு வரவு 300/-

கொடுத்த கழிவுக் க/கு செலவு 300/-

(கொடுத்த கழிவும் பெற்ற கழிவும் 300/- வால் கூட்டிப் பதிந்ததை திருத்திய போது)

## 5. மூலப்பதிவில் ஏற்படும் தவறுகள்

ஆரம்ப வியாபார நடவடிக்கையினை முதலேடுகளில் பதிவு செய்யும் போது பிழையாகப்பதிவு செய்தலே மூலப்பதிவில் ஏற்படும் தவறாகும்.

உ – ம் :

1. கொடுத்த சம்பளம் 5000/- இரு ஏடுகளிலும் 500/- எனப்பதியப்பட்டது. இதனைத் திருத்திப் பதியும் போது பின்வருமாறு பதியப்படும்.

சம்பளக் க/கு வரவு 4500/-

காசுக் க/கு செலவு 4500/-

(கொடுத்த சம்பளம் 4500/- வால் குறைத்துப் பதிவு செய்ததைத் திருத்திப் பதியும் போது)

2. சிவத்திடம் கொள்வனவு 1000/- கொள்வனவுத் தினசேரியில் பதியாது விடப்பட்டது. இதனைத் திருத்திப் பதியும் போது பின்வருமாறு பதியப்படும்.

கொள்வனவுக் க/கு வரவு 1000/-

சிவம் க/கு செலவு 1000/-

(சிவத்திடம் கொள்வனவு 1000/- கொள்வனவுத்தினசேரியில் பதியப்படாதது திருத்திப் பதியும் போது)

## 6. முற்றாக மாறிப்பதிதல்

ஒரு நடவடிக்கையின் பொருளினை எதிர்மறையாகக் கருதி பதிவு செய்தலே இதுவாகும். இவ்வாறாக பிழையினைத் திருத்தும் போது இரண்டு வகையான நாட் குறிப்புகள் எழுத வேண்டும்.

1. விடுபட்ட பிழையினைத் திருத்த
2. சரியான பதிவினை மேற்கொள்ள

உ – ம் :

X இற்கு விற்பனை 1000/- வை X இடம் கொள்வனவு எனக்கருதி ஏடுகளில் பதியப் பட்டது.

இதனைத் திருத்தும் போது பின்வரும் பதிவுகள் இடம் பெறும்.

X க/கு வரவு 1000/-

கொள்வனவுக் க/கு செலவு 1000/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியான பதிவு பின்வருமாறு காணப்படும்.

X க/கு வரவு 1000/-

விற்பனைக் க/கு செலவு 1000/-

இந்நான்கு பதிவுகளையும் சுருக்கி பின்வருமாறு பதியலாம்.

X க/கு வரவு 2000/-

கொள்வனவுக் க/கு செலவு 1000/-

விற்பனைக் க/கு செலவு 1000/-

(X க்கு விற்பனை 1000/- வை X இடம் கொள்வனவு எனக் கொண்டு ஏடுகளில் பதிவு செய்ததை திருத்திப் பதிந்த போது)

**பரீட்சை மீதியில் தொங்கல் ஏற்படுவதற்கான காரணங்களை பின்வருமாறு கூறலாம்.**

**(பரீட்சை மீது வெளிப்படுத்தும் வழுக்கள்)**

1. ஒரு பக்கப் பதிவு
2. கூட்டல் பிழை
3. ஒரு கணக்கில் சரியான தொகையையும் மறு கணக்கில் பிழையான தொகையையும் பதிதல்
4. பரீட்சை மீதியில் இருந்து விடுபடல்
5. ஒரே பக்கத்தில் பதிதல்

## 1. ஒரு பக்கப் பதிவு

குறிப்பிட்ட ஒரு நடவடிக்கையுடன் சம்பந்தப்பட்ட குறித்த பதிவினை அந் நடவடிக்கையுடன் சம்பந்தப்பட்ட ஓர் கணக்கில் மட்டும் பதிவு செய்து விட்டு மற்றைய கணக்கில் பதிவு செய்யாது விடுதலே ஒரு பக்கப்பதிவாகும்.

உ – ம் :

கொடுத்த கூலி 750/- காசுக்கணக்கில் மட்டுமே பதியப்பட்டது. இதனைத் திருத்திப் பதியும் போது பின்வருமாறு பதிவு மேற்கொள்ளப்படும்.

கொடுத்த கூலிக் க/கு வரவு 750/-

தொங்கல் க/கு செலவு 750/-

(கொடுத்த கூலி 750/- வை கூலிக்கணக்கில் பதியாததைத் திருத்திப் பதிந்த போது)

## 2. கூட்டல் பிழை

பேரேட்டுக் கணக்குகளையோ அல்லது நாளேடுகளையோ கூட்டும் போது கூட்டியோ குறைத்தோ மதிப்பிட்டுக் கொள்வதே கூட்டல் பிழை எனப்படும்.

உ – ம் :

1. கொள்வனவு நாளேடு 500/- வினால் குறைத்துப் பதியப்பட்டது.

இதனைத் திருத்திப்பதியும் போது பின்வருமாறு பதியப்படும்

கொள்வனவுக் க/கு வரவு 500/-

தொங்கல் க/கு செலவு 500/-

(கொள்வனவுக் நாளேடானது 500/- வினால் குறைத்துப் பதித்ததைத் திருத்திய போது)

## 3. ஒரு கணக்கில் சரியான தொகையையும் மறுகணக்கில் பிழையான தொகையையும் பதிதல்

உ – ம் :

நிர்மலாவிற்கு திருப்பிய சரக்கு 400/- திரும்பல் கணக்கில் சரியாகவும் நிர்மலா கணக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல் 750/- எனவும் பதியப்பட்டது. இவ்வாறான பதிவுகளை திருத்தும் போது பின் வருமாறு பதிவு காணப்படும்.

தொங்கல் க/கு வரவு 350/-

நிர்மலா க/கு செலவு 350/-

(நிர்மலாவிற்கு திருப்பிய சரக்கு 350/- வால் கூட்டி நிர்மலா கணக்கில் பதிந்ததைத் திருத்திய போது)

## 4. பரீட்சைமீதியில் இருந்து விடுபடல்

பேரேட்டுக் கணக்குகளின் மீதிகளைப் பரீட்சை மீதிகளிற்கு எடுத்துச் செல்லும் போது ஒரு சில பேரேட்டு கணக்கு மீதிகளைப் பரீட்சை மீதியில் பதியத் தவறுவதே இத்தவறுக்குக் காரணமாகும்.

உ – ம் :

1. கொடுத்த கழிவுக் கணக்கின் மீதி 800/- பரீட்சை மீதிக்கு எடுத்துச் செல்லப்படவில்லை. இவ்வாறான பதிவுகளிற்கு ஒரு பதிவு மட்டுமே பதியப்படும். ஏனெனில் பேரேட்டில் சரியான பதிவு காணப்படுதலே ஆகும்.

   தொங்கல் க/கு செலவு 800/-

   (கொடுத்த கழிவு 800/- பரீட்சை மீதிக்கு எடுத்துச் செல்லாததைத் திருத்திய போது)

2. வெளித்திரும்பல் கணக்கின் கூட்டுத்தொகை 150/- பரீட்சை மீதிக்கு எடுத்துச் செல்லப்படவில்லை.

   இதற்கான திருத்தம் பின்வருமாறு.

   தொங்கல் க/கு செலவு 150/-

   (வெளித்திரும்பல் 150/- பரீட்சை மீதிக்கு கொண்டு செல்லப்படவில்லை இதனைத் திருத்திய போது)

## 5. ஒரே பக்கம் பதிதல்

குறித்த நடவடிக்கைக்கான பதிவுகளை அந்நடவடிக்கையின் இரு கணக்கிலும் ஒரே பக்கத்தில் பதிவு செய்தலே இத்தவறாகும். இவ்வாறான தவறுகள் இரண்டு மடங்கு தொங்கலை உருவாக்கும்.

உ – ம் :

வாடகை கொடுத்தது 500/- இரு கணக்கிலும் செலவு வைக்கப்பட்டது.

வாடகை க/கு வரவு 1000/-

தொங்கல் க/கு செலவு 1000/-

(வாடகை 500/- வை இரு கணக்கிலும் செலவில் பதிந்ததைத் திருத்திய போது)

மேற்கூறப்பட்ட வகையில் தொங்கல் வழுக்கள் ஏற்படும். அவற்றை மேற்கூறப்பட்ட வகையில் திருத்தி உண்மையான பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

உ – ம் :

1983. 7. 31 ல் உள்ளவாறான A கம்பனியின் பரீட்சைமீதி ஒரு வித்தியாசத்தைக் காட்டியது. இவ்வித்தியாசம் தொங்கல் கணக்கில் பதியப்பட்டது. 83 ஆகஸ்டில் பின்வரும் பிழைகள் கண்டுபிடிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. 1983. 7. 31 ல் சிவாவிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 1000/- க்கு எப்பதிவும் செய்யப்படவில்லை.
2. 2000/- பெறுமதியான தளபாடம் கொள்வனவு நாளேட்டின் மூலம் பதியப்பட்டது.
3. காசேட்டின் அனுமதித்த கழிவு நிரல் 150/- வால் மிகைப்பட கூட்டிக் காட்டப் பட்டது.
4. 4500/- வுக்கான விற்பனை, கொள்வனவு நாளேட்டின் மூலம் பதிவு செய்யப் பட்டு இருந்ததாயினும் வாடிக்கையாளரின் கணக்கிற்கு திருத்தமாகப் பதியப்பட்டது.
5. 83. 7. 21 ல் அன்ரனிக்கு 2500/- பட்டியற்படுத்தி அனுமதிக்கப்பட்ட பொருட்கள் ஜுலை 24 ல் அவரால் திருப்பப்பட்டு ஜுலை 31 ல் கையிருப்பில் எடுக்கப் பட்டது. திருப்பி அனுப்பியதற்கு ஏடுகளில் பதிவு மேற்கொள்ளப்படவில்லை.

## நாட்குறிப்பு

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| 1. காசுக் க / கு | 1000 | |
| சிவா க / கு | | 1000 |
| (சிவாவிடம் பெற்ற 1000/-க்கு எப்பதிவும் பதியப் படாததைத் திருத்திப் பதியும் போது) | | |
| 2. தளபாடக் க / கு | 2000 | |
| கொள்வனவுக் க / கு | | 2000 |
| (2000/- பெறுமதியான தளபாடம் கொள்வனவு நாளேட்டின் மூலம் பதிந்ததைத் திருத்திப்பதியும்போது) | | |
| 3. தொங்கல் க / கு | 150 | |
| அனுமதித்த கழிவு க / கு | | 150 |
| (அனுமதித்த கழிவு 150/- வால் கூட்டிப்பதியப் பட்டதை திருத்திப்பதியும் போது) | | |
| 4. தொங்கல் க / கு | 9000 | |
| கொள்வனவுச் க / கு | | 4500 |
| விற்பனைக் கணக்கு | | 4500 |
| (4500/-வுக்கான விற்பனை கொள்வனவு நாளேட்டில் பதியப்படாததைத் திருத்தும் போது) | | |
| 5. உட்திரும்பல் க / கு | 2500 | |
| அன்ரனி க / கு | | 2500 |
| (உட்திருப்பிய 2500/- பொருட்கள் பதியப் படாததைத் திருத்திப்பதியும்போது) | | |

## தொங்கல் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| அனுமதித்த கழிவு | 150 | பரீட்சை மீதி வித்தியாசம் | 9150 |
| கொள்வனவு | 4500 | | |
| விற்பனை | 4500 | | |
| | 9150 | | 9150 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமயந்தி நடராசா,
ஆண்டு 12 வர்த்தகம்,

# துணை ஏடுகளும் அவற்றின் தொழிற்பாடும்

## வரைவிலக்கணம்:-

எந்த ஒரு நிறுவனமும் தமது நாளாந்த நடவடிக்கைகளை முறையாக வகைப்படுத்தி உடனுக்குடன் ஒரு குறிப்பாக பதிவு செய்யும் ஏடுகளே துணை ஏடுகளாகும்.

## துணை ஏடுகள்:-

★ முழுக் கணக்கியற் செயற்பாடுகளுக்கும் (கணிப்பீடுகள், மதிப்பீடுகள்) ஆதாரமாக அமைகின்றன.

★ நாளாந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவோரைச் சாட்சிகளாகக் கொண்டு அவர்கள் முன்னிலையிலேயே பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டியனவாகும்.

★ வாடிக்கையாளரின் விருப்பு வெறுப்புக்களை அனுசரிக்கும் அதே வேகத்தில் பதிவுகளும் மேற்கொள்ளவேண்டியிருக்கின்றன,

★ கொடுக்கல் வாங்கல்களில் சிறப்புத் தேர்ச்சியுள்ளவர்களைக் கொண்டு அல்லது கணக்குப்பதிவில் சிறப்புத்தேர்ச்சி இல்லாதவர்களைக் கொண்டு பதிவுகளைச் செய்யவேண்டியுள்ளது.

இத்தகைய நிலையில் பார்க்கின்றபோது துணை ஏடுகள் கணக்கியலில் முகாமையில் எத்துணை முக்கியமான பங்கினை வகிக்கின்றன என்பதை அறியலாம். அதாவது துணை ஏடுகள் கணக்கியலில் மிக மிக ஆதாரமாக அமைந்த போதிலும், துணை ஏடுகள் போதிய சிறப்பறிவு இல்லாதவர்களால் வாடிக்கையாளரின் வேகத்திற்கு ஈடுகொடுத்து பேணப்பட வேண்டிய சிக்கலான நிலைமையும் உண்டு. அதாவது பொருட்களை விற்பதும் காசினை வாங்குவதும் அதற்கான குறிப்பை எழுதுவதும் ஒரே நேரத்தில் வாடிக்கையாளரின் வேகத்திற்கும், போட்டிக்கும் ஈடுகொடுத்து மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதே வேளையில் இவற்றில் எதில் சோர்வு ஏற்பட்டாலும் முறையான கணக்கியல் முகாமை முடிவுகள் மாறுபட்டுப் போய்விடும்.

நெருக்கடியான விற்பனை நிகழ்ந்து கொண்டிருக்கும்போது, வாடிக்கையாளர் அனைவரினதும் தேவையை அறிந்து அவர்களுக்கு முதன்மை காட்டாதவிடத்து வாடிக்கையாளரை இழந்துவிட நேரிடலாம். மறுகரையில் விற்கப்பட்ட பொருட்களுக்குரிய காசினை உரியவரிடம் சரியாக வாங்குவதும், சரியான மீதி கொடுப்பதும் நிகழாவிட்டால் மூலதன நட்டம் ஏற்படுவதுடன் சில சமயங்களில் வீண் வாக்குவாதங்களையும் எதிர்கொள்ள வேண்டி வரலாம். இதே வேளையில் விற்கப்பட்ட பொருட்கள் எவை எனவும், பெறவேண்டிய காசு எவ்வளவு என்பதும் குறிக்கப்பட வேண்டும். இல்லையாயின் கணக்கியல் முகாமை இல்லாது போய்விடும். எனவே துணை ஏடுகள் பேணப்படும் சூழ்நிலையைப் பொறுத்தும் முக்கியத்துவம் உடையன. வேறு கருத்தில் கூறுவதாயின் கணக்கியல் முகாமையின் வெற்றி துணை ஏடுகள் வகைப்படுத்திப் பேணுவதிலேயே தங்கியுள்ளது எனலாம்.

## துணை ஏடுகளின் நோக்கம்:-

துணை ஏடுகளின் சிக்கலான தன்மையைக் கருத்திற்கொண்ட கணக்குப்பதிவியலாளர்கள் துணை ஏடுகளை வெற்றிகரமாகப் பயன்படுத்தத்தக்க வகையில் துணை ஏடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் நோக்கங்களை வரையறை செய்துள்ளனர். பொதுமைப்படுத்தப்பட்ட இந்த நோக்கங்களை துணை ஏடுகள் பேணவேண்டும். இந்த நோக்கங்கள் நிறைவு செய்யாது துணை ஏடுகள் பேணப்படுவதில் முழுமையான பயனைப்பெற முடியாது.

1. **நாளாந்த நடவடிக்கைகளை உடனுக்குடன் பதிதல்.**

அதாவது நடவடிக்கைகளும் பதிவுகளும் நெருங்கிய தொடர்புடையதாக்கப்பட்டுள்ளது. நடவடிக்கை ஒன்று நிகழும்போது அதில் சம்பந்தப்பட்டவர்கள் உடனுக்குடன் தவறினை அவதானிக்கக்கூடிய வகையில் துணை ஏட்டுப்பதிவு உடனுக்குடன் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. **திரும்பத் திரும்ப நிகழக்கூடிய நடவடிக்கைகளைத் தொகுத்தல்.**

குறித்த நாளில் ஒரே வகையான நடவடிக்கைகள் திரும்பத் திரும்ப நிகழும்போது அவை தொகுக்கப்பட வேண்டும். இல்லையேல் வீண் விரயங்கள் ஏற்படலாம்.

3. **ஒவ்வொரு துணை ஏடும் ஒரு குறித்த தனித்துவமான இலக்கை மட்டும் கொண்டிருத்தல் வேண்டும்.**

4. **இரட்டைப் பதிவு என்ற கருதுகோளுக்கு அப்பால் சாதாரண ஒரு குறிப்பு என்ற வகையிலேயே துணை ஏடு பேணப்படுதல் வேண்டும்.**

இந்த நோக்கங்களை நிறைவு செய்கின்ற வகையில் துணை ஏடுகள் பயன்படுத்தப்பட வேண்டும். ஆயினும் நடைமுறையில் இவ்வேலை மேலதிகமான ஒரு வேலையாக அமையாது பார்த்துக்கொள்ளல் அவசியமாகும். உதாரணமாக விற்பனை நிகழ்ந்ததும் விற்கப்பட்ட பொருளின் விபரம் குறிப்பதே விற்றகாசின் பெறுமதியைக் காட்டுவதாகும். அக் காசுப் பற்றுச்சீட்டே காசாளர் பெறவேண்டிய காசின் அளவை நிர்ணயிப்பதாகவும் அமைகின்றது. எனவே துணையேடு பேணுதல் மேலதிக வேலையாக மாற்றப்படக்கூடாது.

துணை ஏடுகளின் பயன்பாடுகளின் முதன்மையாகக் கருதக்கூடியது, அவற்றின் ஊடாகக் கையாளப்படும் உள்வாரிக் கட்டுப்பாட்டு அம்சமே. அதாவது காசுத் தினசேரி விற்கப்பட்ட பொருட்களுக்குக் காசு அறவிடுவதை உத்தரவாதப்படுத்திக்கொண்டு இருக்கும் அதே வேளையில் அக் காசாளரிடம் இருக்கக்கூடிய காசின் அளவையும் சரக்குக் காப்பாளரிடம் இருக்கக்கூடிய சரக்கின் அளவையும் காட்டி நிற்கின்றது. இது துணை ஏடுகள் கொண்டுள்ள சிறப்பான அம்சமாகும்.

## துணை ஏடுகளின் பிரதான வகைகள்.

ஒரு நிறுவனத்தின் நடவடிக்கைகளுக்கு ஏற்பவே துணை ஏடுகளின் பயன்பாடு நிர்ணயிக்கப்படும். மிகப் பெரிய அளவினதாக ஒரு நிறுவனத்தில் காசுத்தினசேரி என்ற துணை ஏடே பல வகையான பிரிவுகளைக் கொண்டிருக்கும். உதாரணமாக பலசரக்கு விற்பனை, புடவை விற்பனை, உபகரண விற்பனை, எரிபொருள் விற்பனை, என நான்கு விற்பனை மையங்களைக் கொண்ட ஒரு நிறுவனம் நான்கு காசுத்தினசேரிகளைக் கொண்டிருக்கலாம். ஆனால் மிகச் சிறிய அளவினதான நிறுவனம் கடன் நடவடிக்கையை மேற்கொள்ளாத நிறுவனம் தனித்து ஒரு காசுத் தினசேரியை மட்டுமே துணை ஏடாகப் பயன்படுத்தலாம். ஆயினும் கணக்கியலின் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு பொதுவாகப் பின்வருவன பொதுவான துணை ஏடுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

★ காசேடு
★ சில்லறைக் காசேடு
★ விற்பனைத் தினசேரி
★ கொள்வனவுத் தினசேரி
★ உட்திரும்பல் தினசேரி
★ வெளித்திரும்பல் தினசேரி
★ வருமதி உண்டியல் தினசேரி
★ சென்மதி உண்டியல் தினசேரி
★ பிரதான தினசேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காசேடு

நாளாந்த காசு நடவடிக்கைகளைக் குறித்த காசாளரின் காசுப் பெட்டியின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதே காசேடு ஆகும். பெரிய நிறுவன அமைப்பில் ஒவ்வொரு செயற்பாடும் ஒரு காசாளரால் பேணப்படும். ஒவ்வொரு வகைக் கொடுப்பனவு, பெறுவனவுகளுக்கு எனக் காசாளர் பேணப்படலாம். இந்நிலையில் காசுப் பற்றுச்சீட்டு செலவுக் குறிப்புகளுக்கு அமைய காசினை வரவு வைப்பதும், செலவு வைப்பதுமே அவரது செயற்பாடாகும். அதாவது காசு வரவு செலவுக் குறிப்புகளுக்கு அமைவாக காசுப் பெட்டி பேணப்படும். எனவே காசேடு வரவு செலவு என பக்கங்களால் வேறுபடுத்தப் பட்டிருக்க மாட்டாது.

காசுத் தினசேரியை நடைமுறைப்படுத்துவதில் பலமுறைகள் கையாளப்படுகின்றன. காசுப்பற்றுச்சீட்டு அடிப்படையில் காசுப் பெறுவனவுகள் பேணப்படும். சாப்பாட்டுக் கடைகள் போன்ற நிறுவனங்களில் காசுக்குத்துத் துண்டு முறையில் காசுத் தினசேரி பேணப்படும். எந்த முறை பின்பற்றப்பட்டாலும் காசுத் தினசேரி உரிய காசாளரின் காசுப்பெட்டியை வழிநடத்துவதாகவே அமையும்.

### காசேட்டின் மாதிரி அமைப்பு.

காசேடு

| திகதி | விபரம் | பற்றுச் சீட்டு இல. | இருமடி | கழிவு | காசு | வங்கி | திகதி | விபரம் | கைச் சாத்து இல. | இருமடி | கழிவு | காசு | வங்கி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | |

## சில்லறைக் காசேடு.

மிகப்பெரிய நிறுவன அமைப்புக்களில் சில்லறைக் காசாளரால் இத்தினசேரி பேணப்படும். குறித்த நாளில் மிகச் சொற்பமாக, திரும்பத் திரும்ப நிகழக்கூடியதான தந்தி, தபாற்செலவு, போக்குவரத்துச் செலவு, விருந்தோம்பல் செலவு, காகிதாதிகள் செலவு, முற்பணக் கொடுப்பனவுச் செலவு போன்றன உரிய ஒழுங்கில் தொகுக்கப்பட்டு குறிக்கப்படும். இத்தினசேரி ஒரு காசாளரின் மேலதிகப் பணியாகவும் விடப்படலாம். சில்லறைக் காசுத்தினசரி முற்பண மீட்பு முறையில் பேணப்படுகின்றது. குறித்த ஒரு தொகை குறித்த நாளின் ஆரம்பத்தில் மீதியாக இருக்கக்கூடிய வகையில் அந்த காலப்பகுதியில் செய்யப்பட்ட செலவு மீட்கப்படுவதாக இப்முறை அமைகின்றது. உரிய செலவு எந்தத் தொகுதியில் சேர்க்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானித்து இந்த நிரல் முறையிலான சில்லறைக் காசுத் தினசேரி பேணப்படுகின்றது. கொடுப்பனவுகள் அனைத்தும் உரிய பணக் கொடுப்பனவுக்கான கைச்சாத்து ஆதாரத்துடன் மேற்கொள்ளப்படுவனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சில்லறைக் காசேட்டின் மாதிரி அமைப்பு.**

சில்லறைக் காசேடு

| வரவுகள் பணம் | காசேட்டின் இருமடி | திகதி | விபரம் | கைச் சாத்து இல. | தொகை | பகுத்தாய்வு | | | | | | பேரேடுப் பக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | |

## விற்பனைத் தினசேரி.

விற்பனைச் சரக்கு கடனுக்கு விற்கப்பட்ட வகையில் குறித்த நாளில் யார் யாருக்கு கடனுக்கு விற்கப்பட்டுள்ளது என்பதை வெளிப்படுத்தி கடன் விற்பனை செய்யப்பட்ட நபர்களின் பெயர் விபரங்களுடன் அவரிடமிருந்து வரவேண்டிய வருமதித் தொகையையும் இத்தினசேரி தொகுத்து வெளிப்படுத்தும் இத்தினசேரி பதிவதற்குரிய மூல ஆவணம் விற்பனைப்பட்டியல்.

**விற்பனைத் தினசேரியின் மாதிரி அமைப்பு.**

விற்பனைத் தினசேரி

| திகதி | பட்டியல் இலக்கம் | கொள்வனவுக்காரர் | பண்டங்களின் விபரம் | | | பெறுமானம் | மொத்தப் பெறுமானம் | பேரேட்டு இல. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | விவரணம் | அளவு | கூறின் விலை | | | |
| | | | | | | | | |

## கொள்வனவுத் தினசேரி.

சரக்கு கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட வகையில் குறித்த நாளில் கடனுக்கு சரக்கு கொள்வன செய்யப்பட்ட நிறுவனங்களின் பெயரும், விபரமும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய சென்மதித் தொகையையும் இத்தினசேரி தொகுத்து வெளிப்படுத்தும். இத்தினசேரி பதிவதற்குரிய மூல ஆவணம் கொள்வனவுப் பட்டியல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொள்வனவுத் தினசேரியின் மாதிரி அமைப்பு.

கொள்வனவுத் தினசேரி

| திகதி | பட்டியல் இலக்கம் | விநியோகத்தர் | பண்டங்கள் பற்றிய விவரணம் | | | பெறுமானம் | மொத்தப் பெறுமானம் | பேரேடுட்டு இருமடி |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | விவரணம் | அளவு | கூறின் விலை | | | |
| | | | | | | | | |

## உட்திரும்பல் தினசேரி.

சரக்கு கடனுக்கு விற்பனை செய்த வகையில் நாளாந்தம் யார் யார் எவ்வளவு சரக்கு எமக்கு உட்திரும்பலாகத் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள் என்பது சார்பாக யார் யாருக்கு எவ்வளவு காசு வருமதியில் கழிக்கப்படுகிறது என்பதையும் தொகுத்து வெளிப் படுத்தும். இதே வேளையில் சரக்கிருப்புக் காப்பாளர் பேணும் சரக்கிருப்பிலும் மேற் கொள்ள வேண்டிய மாற்றங்களைக் காட்டி நிற்கும்.

### உட்திரும்பல் தினசேரியின் மாதிரி அமைப்பு.

உட்திரும்பல் தினசேரி

| திகதி | செலவு நோட்டின் இலக்கம் | கடன்படுநர் | பொருட்களின் விபரங்கள் | | | பெறுமானம் | மொத்தப் பெறுமானம் | பேரேடு இருமடி |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | விவரணம் | அளவு | கூறின் விலை | | | |
| | | | | | | | | |

## வெளித்திரும்பல் தினசேரி.

சரக்கு கடனுக்குக் கொள்வனவு செய்த வகையில் நாளாந்தம் யார் யாருக்கு எவ் வளவு திருப்பி அனுப்பப்படுகின்றது, அது சார்பாக எவ்வளவு காசு சென்மதியில் இழக் கப்படுகின்றது என்பதைத் தொகுத்துக் காட்டி நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெளித்திரும்பல் தினசேரியின் மாதிரி அமைப்பு.

வெளித்திரும்பல் தினசேரி

| திகதி | வரவு நோட்டு இலக்கம் | விநியோகத்தர் | பண்டங்களின் விபரங்கள் | | | பெறுமானம் | மொத்தப் பெறுமானம் | பேரேடு இருமடி |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | விவரணம் | அளவு | கூறின் விலை | | | |

## வருமதி உண்டியல் தினசேரி.

கடனுக்கு சரக்கு விற்கப்பட்ட வருமதியாளரிடம் இருந்து பெற்ற வருமதியுண்டியல்கள் தொடர்பாக யார் யாரிடமிருந்து வருமதி உண்டியல்கள் பெறப்பட்டன என்பதையும் எவ்வளவு தொகை கடன்பட்டோரிடமிருந்து கழிக்கப்பட்டுள்ளது என்பதையும் இத்தினசேரி தொகுத்து வெளிப்படுத்துகின்றது.

### வருமதி உண்டியல் தினசேரியின் மாதிரி அமைப்பு.

வருமதி உண்டியல் ஏடு

| திகதி | யாரிடமிருந்து பெறப்பட்டது | தவணை | பணம் பெறவண்டிய திகதி | பேரேடுப் பக்கம் | தொகை |
|---|---|---|---|---|---|
| | | | | | |

## சென்மதி உண்டியல் தினசேரி.

சரக்கு கடன் கொள்வனவு சார்பாக சென்மதியாளருக்கு ஒப்புக்கொண்ட சென்மதி உண்டியல்கள் தொடர்பாக நாளாந்தம் யார் யாருக்கு எவ்வளவு தொகை சென்மதி உண்டியலாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்பது இத்தினசேரியால் தொகுத்து வெளிப்படுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்மதி உண்டியல் தினசேரியின் மாதிரி அமைப்பு.

சென்மதி உண்டியல் ஏடு

| திகதி | யாருக்குகொடுத்தது | தவணை | பணம்செலுத்த வேண்டிய திகதி | பேரேடு ப் பக்கம் | தொகை |
|---|---|---|---|---|---|
| | | | | | |

## பிரதான தினசேரி.

பொதுவான வியாபார நடத்தைகளுக்கு மாறாக சிறப்பாக அல்லது தவறுகள் வழுக்கள் எழும்போது அதை எவ்வாறு கணக்குகளில் கையாள வேண்டும் என்பதைக் காட்டும் வகையில் எந்தக்கணக்கில் வரவுப் பதிவும் எந்தக் கணக்கில் செலவுப் பதிவும் மேற்கொள்ள வேண்டும் எனக் காட்டும் தினசேரி பிரதான தினசேரியாகும்.

பொதுத்தினசேரியின் மாதிரி அமைப்பு. (பொது தின சேரி)

பொதுத் தினசேரி

| திகதி | விவரணம் | இருமடி | வரவு | செலவு |
|---|---|---|---|---|
| | | | | |

எனவே நாளாந்த நடவடிக்கைகளை வகைப்படுத்தி தொகுக்கும் நிகழ்வானது இவ்வாறாக துணை ஏடுகளால் நிறைவேறுகின்றது. உண்மையில் இந்தச்செயற்பாடானது சாதாரணமாக விசேட கணக்கியற் தொழில்நுட்பத் தேர்ச்சிவேண்டப்படாத நபர்களால் கையாளப்படுவதால் கணக்கியலாளர் கணக்கியல் நுட்பங்கள் வெளிப்படாத வகையில் வடிவமைத்துள்ளமையால் துணை ஏடுகளின பதிவு இலகுவாக்கப்பட்டுள்ளது. ஆயினும் முறையான கணக்கியல் முடிவுகளுக்கும் முகாமைக்கும் இத்துணை ஏடுகளே ஆதாரமானவை. வேறு கருத்தில் கூறுவதாயின் துணை ஏடுகளில் விடப்படும் தவறுகள் கணக்கியல் முடிவுகளையே மாற்றியமைத்துவிடும் என்பதை அறியும்போது துணை ஏடுகளின் முதன்மையும் முக்கியத்துவமும் பயனும் எவ்வளவு முதன்மையானது என்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

★ ★ ★

- 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு. ஏ. கிறிஸ்ரி**
பிரதேச முகாமையாளர்,
இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்,
யாழ்ப்பாணம்.

# காப்புறுதி நடைமுறைகளும் அண்மைக் கால மாற்றங்களும்

*19. 01. 1994 இல் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பிரதேச முகாமையாளர் திரு. ஏ. கிறிஸ்ரி அவர்கள் எமது பாடசாலையில் வர்த்தக மன்றத்தின் அழைப்பை ஏற்று, மன்ற உறுப்பினருக்கு காப்புறுதியில் ஏற்பட்ட அண்மைக்கால மாற்றங்களும், நடைமுறைகளும் என்ற தலைப்பில் ஆற்றிய சிறப்புரையை செல்வி அனஸ்ற் நிலோஜினி துசைப்பிள்ளை தொகுத்து வழங்குகிறார்.*

இம் மண்ணில் அடிபதித்த மனித ஆன்மாக்களின் கனவுகள் கால வெள்ளத்தில் அழிந்து விடாது, ஊமை கண்ட கனவு போல ஆகிவிடாது காப்பாற்றி, தன் நிழல் தேடி வந்த செல்வங்களை அறியாமை என்ற இருள் போக்கி கடந்த 125 ஆண்டுகளுக்கு மேலாக யாழ்நகரின் பெருமை மிக்க மகளிர் கல்லூரிகளில் ஒன்றாகத் திகழ்வது திருக்குடும்ப கன்னியர்மடம். இத்தகைய பெருமை மிக்க கல்லூரியின் வர்த்தக மாணவ மன்றத்தின் அழைப்பை ஏற்று காப்புறுதி பற்றிய உரையை வழங்க எனக்களிக்கப்பட்ட சந்தர்ப்பத்தை ஒரு அரிய வாய்ப்பாகக் கருதுகிறேன்,

காப்புறுதியில் ஏற்பட்ட அண்மைக்கால மாற்றங்களும் நடைமுறைகளும் பற்றி எடுத்தியம்ப வேண்டியது எனது கட்டாய கடமையாகும். அண்மைக்கால மாற்றங்களைப்பற்றி குறிப்பிடுவதற்கு முன்பு, காப்புறுதி பற்றிய கடந்த காலம் பற்றி, அதிலும் குறிப்பாக எமது நாட்டின் காப்புறுதி வரலாறு பற்றிக் குறிப்பிடாது இருக்க முடியாது. இதனால் எமது நாட்டின் காப்புறுதித் தொழிலின் வரலாறு, வளர்ச்சி, பல்வேறு அம்சங்களின் பலாபலன்கள் பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

இந்நாட்டில் 1961 ஆம் ஆண்டுவரை காப்புறுதி என்பது ஒரு சில தனவந்தர்களினதும், பணம் படைத்தோரினதும், சில தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு கருவியாகவே இருந்து வந்தது. அக்காலப்பகுதியில் உள்நாட்டு, வெளிநாட்டு கம்பனிகளாலேயே காப்புறுதித் தொழில் செய்யப்பட்டது. இதனால் குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தினர் மட்டுமே நன்மை அடைந்தனர் என்பது வரலாறு. ஆனால் 1968 ஆம் ஆண்டு தைமாதம் 1ஆம் திகதி இந் நாட்டின் காப்புறுதி வரலாற்றிலேயே ஒரு புதிய சகாப்தத்தை தோற்றுவித்தது. நாட்டின் அரசியல் மாற்றங்களுக்கேற்ப காப்புறுதி என்ற வர்த்தகத்துறையும் நீர்மேல் ஓடம் போல பல அசைவுகளையும் நகர்வுகளையும் சந்திக்க வேண்டி ஏற்பட்டது. ஆனாலும் அப்படி ஏற்பட்ட திருப்பங்களும் மாற்றங்களும் மக்களுக்கு நன்மை பயப்பனவாக இருந்தமை மகிழ்ச்சிக்குரியதே. அன்றைய சோசலிச சிந்தாந்தமுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கம் பல்வேறு துறைகளைத் தேசிய மயமாக்கியது. அவற்றுள் காப்புறுதித் தொழிலும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 2 ம் இலக்க 1961 ஆம் ஆண்டுச் சட்டமூலம் தேசிய மயமாக்கப்பட்டு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் உருவாக்கப் பட்டு ஆயுள்காப்புறுதித் தொழிலின் ஏகபோக உரிமை இக்கூட்டுத்தாபனத்திற்கு வழங் கப்பட்டது. பின்னரும் இச்சட்டத்தில் செய்து கொள்ளப்பட்ட திருத்தத்தின் மூலம் பொதுக் காப்புறுதி செய்யும் ஏகபோக உரிமையும் 1963 ஆம் ஆண்டு முதல் இக்கூட்டுத் தாபனத்திற்கு வழங்கப்பட்டது.

இக் கூட்டுத்தாபனம் தனது விவேகமான செயல்பாட்டின் மூலம் பாரிய வளர்ச்சியை அடையமுடிந்தது. பல்வேறு நகரங்களில் அலுவலகங்களை நிறுவி தொகுதி வாரியாக அமைப்பாளர்களையும், அவர்களின் தலைமையின் கீழ் முகவர்களையும் நிய மனம் செய்து தனது பிரசார அபிவிருத்தி நடவடிக்கை மூலமும், நன்கு திட்டமிட்ட செயற்பாட்டின் மூலமும், இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தது போன்று தனது திறமை யான சேவையின் மூலம், காப்புறுதிச் சேமிப்பின் நன்மை பற்றிய செய்தி கிராமமட்டத் திற்கும் எடுத்துச் செல்லப்பட்டது. இதன் மூலம் தனவந்தர்களின் சொத்தாக கருதப் பட்டு வந்த காப்புறுதிச் சேமிப்பு சாதாரணமானவர்களையும் சென்றடையச் செய்தது. இதனால் காப்புறுதி செய்வோர் தொகை வருடா வருடம் அதிகரிக்கக் கூட்டுத்தாப னத்தின் வருவாய் அதிகரித்தது. வருவாய் அதிகரிக்க முதலீடுகள் அதிகரித்தது. முதலீடுகள் அதிகரிக்க இலாபம் அதிகரித்தது. இத்தாபனம் பாரிய ஆல விருட்சமாக வளர்ச்சியடைந்தது. இப்படிப் பெற்ற இலாபத்தின் 75% காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சட்டத்தின் பிரகாரம் காப்புறுதித்தாரர்களுக்கே பகிர்ந் தளிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக 1962 ஆம் ஆண்டு காப்புறுதி செய்த ஒவ்வொரு 1000 ரூபாவிற்கும் ஒரு ஆண்டிற்கு ரூபா 10 என்ற விகிதத்தில் வழங்கப்பட்ட இலாபப் பங்கீடு இன்று ரூபா 77 ஆக உயர்ந்தமை இத்தாபனத்தின் வளர்ச்சிக்கு எடுத்துக் காட்டாகும்.

பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களினால் 1980 ஆம் ஆண்டு ஆட்சி செய்த அரசு இக்கூட்டுத்தாபனத்தினுடைய காப்புறுதித் தொழிலின் ஏகபோக உரி மையைக் கிரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டும் என்ற பொதுமொழிக்கமைய தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்னும் ஒரு தாபனத்தை நிறுவி காப்புறுதி கூட்டுத் தாபனத்துடனான போட்டி வியாபாரத்தை முடுக்கி விட்டது. இப்புதிய கூட்டுத்தாப னம் பல பிரபல்ய கம்பனிகளைத் தனது முகவர்களாக நியமித்து செயற்பட்ட போதும் இலங்கைக் காப்புறுதி கூட்டுத்தாபனமே காப்புறுதியின் முன்னோடியாக சகல விதத்தி லும் திகழுவதைப் புள்ளி விபரங்கள் பறை சாற்றுகின்றன. அத்தோடு காலப் போக் கில் ஒரு சில கம்பனிகளும் கூட்டுக் கம்பனிகளாகச் செயற்பட்டு காப்புறுதி செய்ய அரசு வழிவகுத்தும் கொடுத்துள்ளது. இதன் மூலம் யூனியன் அசூரன்ஸ், சீ. ரீ. சீ. ஈகிள் போன்ற கூட்டுக் கம்பனிகளும் இன்று இந்த நாட்டில் காப்புறுதித் தொழிலை மேற் கொள்கின்றன.

மீண்டும் ஒரு அரசியல் நகர்விற்கு காப்புறுதி வர்த்தகத்துறை பங்குனி மாதம் 1993 ஆம் ஆண்டு உள்ளடக்கப்பட்டது. இன்றைய அரசின் தாராள பொருளாதாரக் கொள்கையினால் காப்புறுதித் தொழிலில் ஈடுபட்டு வந்த இந்த இரண்டு கூட்டுத்தாபனங் களும் மக்கள் மயப்படுத்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மக்கள் மயப்படுத்தலின் நோக்கம், அதன் நன்மைகள், பலாபலன்கள் பற்றி இங்கு ஆராய்வது மிகவும் பயனுள்ளதாகும்.

தற்போதைய அரசாங்கத்தினால் கடைப்பிடிக்கப்பட்டு வரும் தனியார் மயக் கொள்கைக்குப் பதிலாக நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டதே மக்கள் மயக் கொள்கையாகும், அரசிற்குப் பெருஞ்சுமையாக அமைகின்ற தாபனங்களையும் அரசினால் சுவீகரிக்கப்பட்ட கம்பனிகளையும் இவ்வரசு மக்கள் மயமாக்கியது. இவ்வாறு மக்கள் மயப்படுத்தப்படும் பொழுது வெளிநாட்டு உள்நாட்டு கம்பனிகள் 60%, பொதுமக்கள் 30%, அந்த தாபனத்தில் வேலை செய்யும் ஊழியர்கள் 10% என்ற வகையில் முதலிடப் படுகின்றது. ஊழியரின் பங்காகிய 10% இலவசமாக வழங்கப்படுவதனால் ஊழியர்களும் உறுப்பினர் ஆகும் வல்லமை பெறுகின்றனர்.

இவ்வாறு மக்கள் மயப்படுத்தலின் மூலம் நிதி பெறும் வளங்கள் அதிகரிக்கப் பட்டு நிதிப்பிரச்சனை நீக்கப்படுகிறது. தொழில் நுட்ப உதவி மூலம் உற்பத்தி அதிகரிக்கப்பட்டு வெளிநாட்டு முதலீடு அதிகரிக்கின்றது. இலாப நோக்கம் அதிகரித்து, அரசியல் தலையீடு தவிர்க்கப்படுகிறது, தேவைக்கதிகமான வேலைவாய்ப்பும் அரச மானியமும் குறைக்கப்படுகின்றது. திறமையான நிர்வாகம், விரைவான தீர்மானம், ஊழியர்களது அந்தஸ்து வருமானம் என்பன உயர்வு பெறுகின்றன. இவ்வாறான அனுகூலங்கள் மக்கள் மயப்படுத்தல் மூலம் ஏற்படுகின்ற போதும் தனியாரது தனியுரிமை, கணணிப் பயன்பாட்டால் ஊழியர் எண்ணிக்கைக் குறைப்பு, மானிய நீக்கத்தால் ஆக்கச் செலவு அதிகரிப்பு, தொழிலாளரது சுரண்டல், இருப்போர்க்கும் இல்லாதோர்க்குமான இடைவெளி அதிகரிப்பு, சேவை நோக்கத்திற்குப் பதில் உல்லாச நோக்கம் என்பன போன்ற தீமைகள் இருக்கின்ற போதிலும் தீமைகளிலும் பார்க்க அனுகூலங்களே அதிகமாக இருப்பதனால் மக்கள் மயமாக்கல் எங்கள் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை எந்த விதத்திலும் பாதிக்காது தொடர்ந்தும் நாம் காப்புறுதித் தொழிலின் முன்னோடியாக திகழ்ந்து மக்களின் நம்பிக்கைக்கும் நன்மைக்கும் செயலாற்றுவோம் என்பது உறுதி.

## மன்ற உறுப்பினர்களால் பிரதேச முகாமையாளரிடம் எழுப்பப்பட்ட வினாக்களும் அதற்கான விடைகளும்

1. ஆயுள் காப்புறுதி மேற்கொள்ளப்படுகின்ற எல்லோருக்கும் வைத்திய பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றதா?

   இல்லை.

   35 வயதிற்குட்பட்டோர் 7½ லட்சம் ரூபா வரைக்கான ஆயுட்காப்புறுதித் தொகைக்கும் 35 வயது தொடக்கம் 45 வயது வரைக்குமானோர் 5 லட்சம் ரூபா வரைக்கான ஆயுட் காப்புறுதித் தொகைக்கும் வைத்தியப்பரிசோதனை இன்றியே ஆயுட் காப்புறுதி பெற்றுக் கொள்ளலாம். 45 வயதிற்கு மேற்பட்டோர் எத்தொகைக்கும் ஆயுட் காப்புறுதி செய்ய விரும்பினாலும் வைத்தியப் பரிசோதனை ஒரு கட்டாய தேவையாகும்.

2. மக்கள் மயமாக்கப்பட்டபின் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாக முறையில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை 9 இலிருந்து 5 ஆகக் குறைக்கப்பட்டதுடன் ஊழியர் பிரதிநிதி ஒருவரும் பணிப்பாளர் சபையில் அங்கத்துவம் பெறுகின்றார். மாகாண ரீதியாக மாகாண முகாமையாளர் நியமனம் செய்து தீர்மானங்களை அந்த மாகாண முகாமையாளராலேயே மேற்கொள்ளவும் உரிமைக் கோரிக்கைகளை தலைமை அலுவலகத்திற்கு அங்கீகாரத்துக்காக அனுப்பாது அவரே அங்கீகரிக்கும் அதிகாரமும் வழங்கப்பட்டது.

3. மக்கள் மயமாக்கப்பட்ட காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மூலதனப் பங்களிப்பின் விகிதமென்ன?

| | |
|---|---|
| வெளிநாட்டுக்கம்பனிகள் | 60% |
| அரசாங்கம் | 30% |
| ஊழியர் | 10% |

4. இலங்கையில் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் எத்துறைகளில் முதலீடு செய்துள்ளது
பங்குச்சந்தை பங்குகளில் முதலீடு செய்தல்
திறைசேரி உண்டியல் கொள்வனவு செய்தல்
ஹோட்டல்களுக்கு கடன் வழங்குதல்
அரசிற்கு கடன் வழங்கல்

5. தங்கள் கூட்டுத்தாபனம் மறு காப்புறுதித் தொழிலில் ஈடுபடுகின்றதா?

இல்லை. ஆனால் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு வரும் கணிசமான காப்புறுதிகளை வெளிநாட்டுக் கம்பனிகளில் மறு காப்புறுதி செய்து கொள்கின்றது.

6. போர்க்கால நிலையில் யாழ்நகரில் ஏற்பட்ட அழிவு சேதங்களுக்கும் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதா?

ஆம். போர்க்கால அபாயம், வேலைநிறுத்தம், இனக்கலவரம், பயங்கரவாதம் போன்ற நிகழ்வுகட்கு மேலதிகமாக கட்டணம் செலுத்திப் பெற்ற காப்புறுதியின் உரிமைக் கோரிக்கைகள் வழங்கப்பட்டன. இந்த மேலதிக அனுகூலங்களைப் பெறாத காப்புறுதி இழப்பு நிகழ்வது இது போன்ற சம்பவங்களால் ஏற்பட்டிருப்பின் நிராகரிக்கப்பட்டுள்ளன.

7. விபத்துடன் கூடிய ஆயுள் காப்புறுதி எடுத்த ஒருவர் பெறக்கூடிய காப்புறுதித் தொகை எவ்வாறு கணிக்கப்படுகிறது?

விபத்துடன் கூடிய காப்புறுதியை ஒரு சிறிய மேலதிகக் கட்டணத்தை செலுத்திப் பெற்றவர் விபத்தினால் மரணம் ஏற்படும் இடத்து காப்புறுதித் தொகையின் இரு மடங்கு செலுத்தப்படும். விபத்தினால் நிரந்தர அங்கவீனமடையும் இடத்து கட்டணம் செலுத்துவதில் இருந்து விலக்களிக்கப் படுவதுடன் 10 ஆண்டுகட்கு மாதாந்த கொடுப்பனவு அடுத்த உரித்தாளருக்கு வழங்கப்படும்.

8. தற்கொலை புரிபவருக்கு காப்புறுதித் தொகை வழங்கப்படுகிறதா?

ஆம். காப்புறுதி செய்து ஒருவருடத்தின் பின்பு தற்கொலை நிகழுமிடத்து காப்புறுதித் தொகை வழங்கப்படும்.

9. காப்புறுதி செய்த ஒருவர் காணாமல் போனால் காப்புறுதி செய்த தொகை அவரின் பின் உரித்தாளருக்கு வழங்கப்படுமா?

ஆம். காப்புறுதித்தாரர் காணமல் போன ஒரு வருட காலத்தின் பின்பு உரிய நீதிமன்ற உத்தரவு பெற்று மரணமாகப் பதிவு செய்து மரண அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும் இடத்து காப்புறுதித் தொகை வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. அண்மையில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் நடைமுறைப்படுத்தப் பட்ட காப்புறுதி வகைகளைக் கூறுவீர்களா?

i) பொதுஜன காப்புறுதி : இது நிரந்தர வருமானமற்றவர்கட்கு மிகவும் பயனுள்ளதாகும்.

ii) மக்கள் நலநோக்கு காப்புறுதி : இது எதிர்காலத்தில் ஏற்படும் பணப் பெறுமதிக் குறைவைத் தவிர்க்கிறது.

iii) ஓய்வூதியம் பெறுவோர் காப்புறுதி : இது ஓய்வு பெற்றோருக்கு உதவுகிறது.

iv) மாணவர் காப்புறுதி : பாடசாலை மாணவர்களுக்கு உதவியளிக்கின்றது.

v) ஜனதுறு காப்புறுதி : இது ஒரு குழந்தைகட்கான காப்புறுதி. பெற்றோர் பிள்ளைகட்சாகச் செய்து கொள்ளும் சேமிப்பு.

vi) லமாறக்ஷன : இதுவும் ஒரு குழந்தைகட்கான காப்புறுதியே. கொடுப்பனவு தவணை முறையில் வழங்கப்படுகின்றது.

11. ஆயுட் காப்புறுதி செய்த ஒருவர் தொடர்ந்து கட்டணம் கட்ட முடியாது போனால் யாது செய்யலாம்?

காப்புறுதியைக் குறைத்து குறைந்த கட்டணம் செலுத்தி காப்புறுதியைத் தொடரலாம். அல்லது காப்புறுதியைத் திருப்ப ஒப்படைத்து ஒப்படைத்தார் பெறுமதியைப் பெற்றுக்கொள்ளலாம். மூன்று ஆண்டுகட்கு குறையாது கட்டுப்பணம் செலுத்தப்பட்டிருப்பின் முதிர்வடையும் பொழுது பணம் செலுத்திய காலத்திற்கான இலாபங்களையும் செலுத்திய பணத்தின் ஒரு பகுதியையும் பெற்றுக்கொள்ளலாம்.

12. குறிப்பிட்ட நிகழ்வு நடைபெறாவிட்டால் கட்டுப்பணத் தொகையைத் திருப்ப பெற முடியாது எனவே அதனை வங்கிச் சேமிப்பில் இட்டால் அத்தொகை திரும்பப் பெறலாம் எனச் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர், உங்கள் அபிப்பிராயம் என்ன?

காப்புறுதிச் சேமிப்பை வங்கிச்சேமிப்புடன் ஒப்பிடமுடியாது. வங்கியில் பெரும் தொகையை முதலிட்டு சிறுதொகையை வட்டியாகப் பெற முடியும். ஆனால் காப்புறுதி அதற்கு மாறா சிறு சிறு தொகையாக சேமித்து பெரும் தொகையைப் பெறுவதும் இடையில் ஏற்படும் ஏதாவது ஒரு நிகழ்வின் இழப்பிற்கு ஈடுசெய்து ஆறுதலளிக்கின்றது விவாதத்திற்காக இது பொதுக் காப்புறுதிக்கு ஏற்புடையதாக இருப்பினும் ஆயுட் காப்புறுதிக்கு முற்றிலும் பிழையான விவாதமாகவே அமையும்.

13. காப்புறுதி ஒப்பந்தம் ஒவ்வொரு வருடமும் புதுப்பிக்கப்பட வேண்டுமா?

பொதுக் காப்புறுதிகள் அனைத்துமே வருடாவருடம் வழங்கப்படுவதை காப்புறுதிதாரரது விருப்பத்திற்கும் நன்மைக்கும் ஏற்ப வருடாவருடம் புதுப்பித்தல் அனுகூலமானது. ஆனால் ஆயுட் காப்புறுதியைப் பொறுத்த வரை தெரிவு செய்த காலம் முடிவடையும் வரை காப்புறுதிதாரர் ஒருவருடைய தெரிவிற்கேற்ப மாதாமாதமோ, காலாண்டு, அரையாண்டு, ஒரு ஆண்டு என்ற முறையிலோ கட்டணம் செலுத்தப்படலாம்.

★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றோஸ் மேரி மைக்கல்,
வணிகவியல் துறை,
யாழ். பல்கலைக் கழகம்.
(பழைய மாணவி)

# கடன் அட்டை / கொடுகடன் அட்டை
# CREDIT CARD

குறிப்பிட்ட வர்த்தக ஸ்தாபனங்களில் இருந்து பொருட்கள் சேவைகளையோ அல்லது சிலவேளைகளிற் பணத்தையோ கடனாகப் பெற்றுக் கொள்வதற்கு உதவும் வகையில் குறிப்பிட்ட சில வங்கி அல்லது நிதிக் கம்பனிகளால் வழங்கப்படும் அட்டைகளே கடன் அட்டை எனப்படுகிறது. இவ்வட்டைகளின் மூலம் பாதுகாப்பாகவும் இலகுவாகவும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள முடியும்.

உ - ம் : இலங்கை வங்கியில் - Cey. Bank Card

கடன் அட்டைகள் 2 வகைப்படும்.

1. உள்நாட்டுக் கடன் அட்டைகள்.
2. சர்வதேசக் கடன் அட்டைகள்.

வங்கி அல்லது நிதி நிறுவனங்களினால் வழங்கப்படும் கடன் அட்டையின் மூலம் உள்நாட்டில் மட்டுமே பயனைப் பெறக்கூடியதாக இருப்பின் அவை உள்நாட்டுக் கடன் அட்டை எனப்படும்.

## உள்நாட்டுக்கடன் அட்டையின் வகைகள்

கடன் அட்டைகளை இலங்கை வங்கி, மக்கள் வங்கி, சம்பத் வங்கி என்பன வழங்குகின்றன. இவ்வங்கிகளால் வழங்கப்படும் கடன் அட்டைகள் பின்வருமாறு

### 1. சீ பாங் அட்டை (Cey. Bank Card)

இலங்கை வங்கியும் விசா சர்வதேச நிறுவனமும் ஒன்று சேர்ந்து அறிமுகப் படுத்திய கடன் அட்டையே இதுவாகும். சீபாங் அட்டை முக்கியமாக இரண்டு வகையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அவையாவன.

1. உள்நாட்டு சீபாங் அட்டை.
2. சர்வதேச சீபாங் அட்டை.

இவற்றில் உள்நாட்டு சீபாங் காட் பின்வருமாறு 3 வகையாக காணப்படுகின்றது.

1. வியாபார அட்டை - Business Card
2. சிறப்பு அட்டை - Classic Card
3. தங்க அட்டை - Gold Card

இலங்கை வங்கியின் கிளையில் 250/- வைப்புச் செய்து இவ்வட்டைகளைப் பெறலாம். பின்னர் பொருட் கொடுக்கல் வாங்கல்களிற்கு இவ்வட்டையைப் பயன் படுத்தலாம். இவற்றிற்கான கொடுப்பனவை வங்கி மேற்கொள்ளும்.

### 2. மக்கள் அட்டை (People's Card)

இக்கடன் அட்டையை மக்கள் வங்கியும் விசா சர்வதேச நிறுவனமும் இணைந்து வழங்குகின்றது. இவ்வட்டையினை காசோலை உத்தரவாத அட்டையாகவும், தன்னியக்க ரெலர் பொறியிலிருந்து பணத்தைப் பெறவும் பயன்படுத்தலாம். இவ்வட்டையில் பின்வரும் வகைகள் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சிறப்பு அட்டை.
2. வியாபார அட்டை.
3. தங்க அட்டை.
4. சர்வதேச அட்டை.

### 3. விவசாயிகள் கடன் அட்டைகள்

விவசாயிகளின் நலனை நோக்கமாகக் கொண்டு மக்கள் வங்கியால் அறிமுகப் படுத்தப்பட்ட கடன் அட்டையே இதுவாகும். இவ்வட்டையைப் பெற்ற விவசாயிகள் உத்தரவாதி இல்லாமல் கடன் வசதியைப் பெற்றுக் கொள்ள முடியும். இவ் வட்டை யானது விவசாயிகளிற்கு வங்கிகளுடன் உள்ள தொடர்பின் அடிப்படையிலும் இவர் கள் முன்பு வாங்கிய கடனை திருப்பிச் செலுத்தியதன் அடிப்படையிலும் வழங்கப் படும்.

### 4. மாஸ்ரர் காட் (Master Card)

Master International எனும் சர்வதேச நிறுவனத்தால் உலகின் பல்வேறு நாடு களில் அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கும் இக்கடன் அட்டை இலங்கையில் சம்பத் வங்கியினால் 1989 ஆல் அறிமுகப்படுத்தப்பட்டது. சம்பத் வங்கியின் கிளை ஒன்றில் 600/- வை வைப்புச் செய்து இக்கடன் அட்டையைப் பெறலாம். இவ்வட்டையின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட கடைகளில் பொருட்களை வாங்கிக் கொள்ளலாம். ஆனால் இவற்றிற்கான கொடுப்பனவை 1 மாதத்திற்குள் செலுத்த வேண்டும். உலகில் 170 நாடுகளில் இவ்வட்டையின் செயற்பாடுகள் காணப்படுகின்றன.

### சர்வதேச கடன் அட்டைகள் (International Cerdit Card)

சர்வதேசரீதியில் கொள்வனவுச் சக்தி கொண்ட கடன் அட்டையை இது குறிக் கும். இவ்வாறான கடன் அட்டையை இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பன வழங்கு கின்றன.

இக்கடன் அட்டை Visa International நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்றதாக இருக்க வேண்டும்.

சர்வதேச கடன் அட்டையைப் பெற்றவர்களுக்கு நாணய மாற்று கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் அண்மையில் கீழ்வரும் சலுகைகள் வழங்கப்படுகின்றன.

1. குறிப்பிட்ட எல்லைவரை வெளிநாட்டு செலாவணிக் கட்டுப்பாட்டாளனின் அனு மதியின்றி அனுமதிக்கப்பட்ட வியாபாரிகளிடம் கொள்வனவை மேற்கொள்ளலாம்.
2. சில வேளைகளில் / சந்தர்ப்பங்களில் குறித்த எல்லைக்கு மேல் கொடுக்கல் வாங் கல்களைச் செய்யலாம்.

மேற்கூறப்பட்ட கடன் அட்டைகளை வங்கிகள் வழங்குவதால் பாவனையாளர், வாடிக்கையாளர்கள், வர்த்தக ஸ்தாபனங்கள் என்பன பல நன்மைகளை அடைகின்றன.

### கடன் அட்டையின் வழங்கலினால் வாடிக்கையாளர் / பாவனையாளர் பெறும் நன்மைகள்

1. பொருட்கள் சேவைகளை பணம் இல்லாத போது கடன் அடிப்படையில் கொள் வனவு செய்யலாம்.
2. கடன் அட்டையின் பாவனையால் பணத்தைக் கொண்டு செல்வதில் உள்ள பாது காப்பின்மையை தவிர்க்க முடியும்.
3. வங்கியினால் வழங்கப்படும் சில சேவைகளைப் பெறமுடியும்.
4. இவ்வகைக் கடன் அட்டைகளை வெளிநாட்டிலும், உபயோகிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பொருட்களின் விலை வங்கியினால் குறித்து வழங்கப்படுவதால் அதிகரித்த விலையில் பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டியதில்லை.

### கடன் அட்டை வழங்கலினால் வர்த்தக நிறுவனம் பெறும் நன்மைகள்

1. அதிக வாடிக்கையாளரைப் பெற்றுக் கொள்ளலாம்.
2. ஸ்தாபனத்தில் விற்பனையைக் கூட்டலாம்.
3. அறவிடமுடியாக்கடன் நட்டங்களை தவிர்க்கலாம்.
4. வெளிநாடுகளிலும் கடன் அட்டைகளைப் பயன்படுத்த முடியும்.
5. விற்கும் பொருட்கள் பற்றிய பதிவுகள் வியாபாரிக்கு வங்கியினால் ஏற்படுத்தப்படுவதால் மோசடிகளைத் தவிர்த்து நிர்வாக நிதிக் கட்டுப்பாடுகளை நிறுவனத்தில் ஏற்படுத்தலாம்.

### கடன் அட்டை வழங்கலினால் பொருளாதாரம் / நாடு பெறும் நன்மைகள்

1. உள்நாட்டு வியாபாரம் வளர்ச்சி அடையும்.
2. நுகர்வோரும் வர்த்தகர்களும் வங்கியில் கணக்குகளை ஏற்படுத்துவதால், வங்கித்துறை வளர்ச்சி அடையும்.
3. பணமின்றி கடன் அடிப்படையில் விற்பனை கொள்வனவு நடைபெறுவதால் பணப் புழக்கம் தவிர்க்கப்படும்.
4. சர்வதேச நிறுவனத்தின் இணைப்பும் காணப்படுவதால் சர்வதேச கொடுப்பனவுகளை சுலபமாக பெற்றுக்கொள்ள முடியும்.
5. சர்வதேச கொடுப்பனவுகள் பெறப்படுவதால் சர்வதேச வர்த்தகமும் வளர்ச்சி அடையும்

### வங்கிகள் பெற்றுக் கொள்ளும் நன்மைகள்

1. வைப்புக்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
2. வாடிக்கையாளர் கொடுப்பனவை மேற்கொள்ள தவறின் அதற்காக வட்டியை உழைக்க முடியும்.
3. வங்கியின் வாடிக்கையாளர் தொகை அதிகரிக்கும்.
4. வங்கிகளின் மீது நன்மதிப்பு உருவாகும்.
5. சர்வதேச விசா நிறுவனத்துடன் கூட்டாக இலங்கை வங்கியும் செயற்படுவதால் இந்நிறுவனத்தின் நன்மதிப்பை இலங்கை வங்கியும் பெற்றுக் கொள்ளலாம்.

### வங்கி / நிதி நிறுவனங்கள் கடன் அட்டைகளை வழங்கும் போது கவனிக்க வேண்டிய அம்சங்கள்

1. வாடிக்கையாளர்களின் நம்பிக்கைத் தன்மை.
2. கடன் அட்டைகளைப் பெறும் வாடிக்கையாளரின் நிதி நிலமை.
3. வங்கிகளின் விருப்பம்.

### கடன் அட்டை வழங்கலினால் ஏற்படும் பாதிப்புகள்

1. கொடுப்பனவை செலுத்த காலதாமதம் ஏற்படின் கொள்வனவாளர் வட்டி செலுத்த வேண்டிய நிலை ஏற்படும்.
2. நுகர்வோர் கடன் அட்டைகளை பயன்படுத்தி பொருட்கள் வாங்குவதால் அதிக பொருட்களையும் தமக்கு அவசியமற்ற பொருட்களையும் கொள்வனவு செய்ய முனைவர்.
3. இதனால் நுகர்வோரின் சேமிப்பு ஆற்றல் அல்லது பழக்கம் குறைவடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிவனுதா அன்புராஜா
ஆண்டு 13 வர்த்தகம்

# சர்வதேச வர்த்தகமும் பொருளாதார அபிவிருத்தியும் இலங்கை பற்றிய கண்ணோட்டமும்.

பழம் பொருளியலாளர்களது சர்வதேச வர்த்தகக் கோட்பாடு, காரணிகளின் உற்பத்தித் திறனில் ஏற்படுகின்ற வேறுபாடே நாடுகளிடையே வர்த்தகம் நிலவுவதற்கு பிரதான அம்சமாக அமைகிறது எனக்கூறி உலக நாடுகள் எவ்வாறு சர்வதேச வர்த்தகத்தின் ஊடாக நன்மையடைய முடியும் என்பதனை விரிவாகக் கூறியுள்ளது. பழம் பொருளியலாளர் வர்த்தக கோட்பாட்டினை விருத்தி செய்வதாக நவபழம் பொருளியலாளர்களின் காரணி அளிப்புக் கோட்பாடு விளங்குகிறது. இக்கோட்பாட்டின் சாராம்சம் என்னவெனில் எல்லா நாடுகளும் கட்டுப்பாடற்ற வர்த்தக அமைப்புமுறை ஒன்றின் மூலம் நன்மை பெறுவதால் உலக உற்பத்தி அதிகரிக்கும் என்பதாகும். சர்வதேச வர்த்தகம் பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி என்பவை ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாகும். சர்வதேச வர்த்தகம் என்பது தனியே பொருட்கள் சேவைகளின் ஏற்றுமதி, இறக்குமதி என்பவற்றோடு மட்டுப்படுத்தப்படாமல் தொழில்நுட்ப அறிவு, வினைத்திறன் போன்ற அம்சங்களுடன் முதலீடுகளையும் முயற்சியாளர்களையும் பரிமாற்றம் செய்கின்ற ஊடகமாகவும் சர்வதேச வர்த்தகம் விளங்கியுள்ளது.

சர்வதேச வர்த்தகமானது சாதகமானதாகக் கொள்ளப்பட்ட போதும் அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கும் இடையில் தற்போதைய விரிசல் நிலைக்குக் காரணமாக அமைகிறதென பிரபிஷ் சிங் நேர்க்ஸ் போன்ற கட்டமைப்பாளர்களது விளக்கமும் அமைகின்றது. நவமாக்சிசவாதிகளாகிய சாமீர், அமீன், போல்பரன், குண்டா, பிராங் என்போரால் முன் வைக்கப்படுகின்ற மைய சுற்றயல் கோட்பாட்டு விளக்கமும் சர்வதேச வர்த்தகம் மைய நாடுகளுக்குச் சாதகமாக அமைந்துள்ளதையே விளக்குகிறது. எவ்வாறெனினும் ஒப்பீட்டு நயக் கோட்பாட்டின் எதிர்கூறில் உள்ளது போல சர்வதேச வர்த்தகம் அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி வருமானப் பங்கீடு போன்றவற்றிற்குச் சாதகமாக அமையாது அபிவிருத்தியடைந்த நாடுகளின் செல்வந்தர்களுக்கும் பல்தேசியக் கம்பெனிகளுக்கும் வாய்ப்பாகச் செயற்பட்டுள்ளதே உண்மை நிலையாக உள்ளது.

சர்வதேச ரீதியான வர்த்தக உபாயங்கள் ஒவ்வொரு நாடுகளுக்குமான பொருளாதார அமைப்பு அந்நாட்டின் அபிவிருத்தி உபாயங்கள் என்பவற்றோடு தொடர்புபட்டதாக இனம் காண முடிகிறது. பொதுவாக ஒரு நாட்டின் அபிவிருத்தி அணுகுமுறைக்கு அடிப்படையாக அமைவது அந்நாட்டின் வர்த்தக உபாயம் எனலாம், வெளிப்படுத்திய சர்வதேச வர்த்தகக் கொள்கையினை வர்த்தகச் செயலாற்றம் அதற்கான ஊக்குவிப்பு அமைப்புகளின் பண்புகள் வர்த்தகக் கொள்கைக்கான முக்கிய கருவிகளின் தன்மை என்பவற்றினை ஆதாரமாகக் கொண்டு ஒரு நாட்டின் சர்வதேச வர்த்தக உத்தியினை நெறிப்படுத்தலை வகைப்படுத்திக் கொள்ளலாம். சர்வதேச வர்த்தகத்தின் வெளிப்படுத்திய கொள்கையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்றுமதியின் பங்கு, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இறக்குமதியின் பங்கு, வர்த்தகத்தில் தங்கியிருத்தல் வீதம் என்பவற்றையே விளக்குகின்றது.

இன்று நடைமுறையில் வர்த்தக உபாயங்களை ஏற்றுமதி மேம்பாடு இறக்குமதிப் பதிலீடு என இரண்டாகப் பிரிக்கலாம். சில நாடுகளில் இவ்விரண்டு உபாயங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்த வர்த்தக உபாயங்களும் கடைப்பிடிக்கப் படுகின்றன. (உதாரணமாக இஸ்ரேல்) ஏற்றுமதி மேம்பாடு என்ற உபாயமானது கைத்தொழில் - வர்த்தகக் கொள்கைகளைப் பொறுத்து உள்நாட்டுச் சந்தைக்கான உற்பத்தி, ஏற்றுமதிக்கான உற்பத்தி எனவோ அல்லது உள்நாட்டுக் கொள்வனவுக்கும், வெளிநாட்டுக் கொள்வனவுக்குமெனவோ பேதப்படுத்துவதில்லை. மாறாக வர்த்தக உபாயம் கைத்தொழில் ஊக்குவிப்புக்களை வெளிநாட்டுச் சந்தையைவிட உள்நாட்டுச் சந்தைக்கே சார்பானதொன்றாக மாற்றுகின்றது. இவ்வனுகுமுறை இறக்குமதிப் பதிலீட்டு உபாயம் எனவும் அழைக்கப்படுவதுண்டு.

இலங்கையின் பொருளாதாரத்தை அவதானிக்கும்போது இலங்கைப் பொருளாதாரமானது வர்த்தகத்தில் தங்கியிருக்கும் அளவு படிப்படியாக அதிகரித்து வருவதைக் காணமுடிகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஏற்றுமதி இறக்குமதித் துறைகளின் பங்களிப்பு படிப்படியாக அதிகரித்து வருகின்றது. 1970/74 ஆண்டுகளில் வர்த்தகத்தில் தங்கியிருத்தல் விகிதமானது 34 ஆக இருந்து 1978 - 85ல் 62 விகிதமாக அதிகரித்துள்ளது. ஏற்றுமதி இறக்குமதி ஆகிய இரு செயற்பாடுகளும் பொருளாதார ரீதியாக வளர்ச்சி பெற்று வருவதுடன் கடந்த தசாப்த காலத்தில் பெருமளவான கட்டமைப்பு மாற்றங்களையும் பெற்றுள்ளன. ஏற்றுமதித்துறையானது பெருந்தோட்ட உற்பத்தியில் பெற்ற முக்கியத்துவம் குறைவடைந்து படிப்படியாக கைத்தொழில்துறை ஏற்றுமதிகள் அதிலும் குறிப்பாக ஆடைகள் உடுதுணிகள் ஏற்றுமதி முக்கியம் பெறுவதையும் இறக்குமதியில் நுகர்வுப் பொருட்களின் முன்னுரிமை குறைக்கப்பட்டு இடைத்தர முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி அதிகரித்த பங்கினைப் பெற்று வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

இலங்கைப் பொருளாதாரம் சர்வதேச வர்த்தகத்தில் தங்கியிருக்கும் நிலையை இலங்கை குறித்து தயாரிக்கப்படும் பின்வரும் குறிகாட்டிகளும் அவற்றில் ஏற்படும் மாற்றங்களும் எடுத்துக் காட்டுவனவாக அமைகின்றது.

A — மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இறக்குமதியின் வீதம்.

B — மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்றுமதியின் வீதம்.

C — வர்த்தகத்தில் தங்கியிருத்தல் வீதம் (A+B) அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்றுமதி இறக்குமதிகளின் கூட்டுத்தொகை விகிதம்.

D — மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நடைமுறைக் கணக்கு வீதம்.

E — வர்த்தக மாற்றுவீதம், ஏற்றுமதி விலைச்சுட்டெண்களை இறக்குமதி விலைச் சுட்டெண்ணால் பிரித்து 100 ஆல் பெருக்கி வருவது. 1978 வரையிலான வர்த்தக மாற்றுவீதச் சுட்டெண் 1967 ஆண்டினையும் 1978க்குப் பின்புள்ள சுட்டெண் 1981-ம் ஆண்டினை அடிப்படையாகவும் கொண்டுள்ளதால் இவற்றினை ஒப்பிட முடியாது.

F — ஏற்றுமதி இறக்குமதி வீதாசாரத்தினைக் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 1

## இலங்கையின் சர்வதேச வர்த்தகப் போக்கும் மாற்றமும்.
## (1977 — 1990 வரை)

| ஆண்டு | A | B | C | D | E | F |
|---|---|---|---|---|---|---|
| 1977 | 16.6 | 18.0 | 34.6 | 3.5 | 81 | 105.6 |
| 1978 | 35.4 | 30.9 | 66.3 | 2.4 | 80 | 84.7 |
| 1979 | 43.1 | 29.2 | 72.3 | 6.8 | 121.4 | 67.7 |
| 1980 | 51.0 | 26.4 | 77.4 | 16.4 | 106.7 | 52 0 |
| 1981 | 43.0 | 24.7 | 67.7 | 10.0 | 100.0 | 56.8 |
| 1982 | 42.3 | 21.6 | 63.9 | 11.9 | 93.8 | 50.8 |
| 1983 | 37.5 | 20.6 | 58.1 | 9.1 | 115.3 | 55.4 |
| 1984 | 31.2 | 24.5 | 55.7 | 0.9 | 140.2 | 75.8 |
| 1985 | 33.3 | 22.3 | 55.6 | 7.0 | 114.8 | 64 5 |
| 1986 | 30.4 | 19.0 | 49.4 | 6.6 | 110.7 | 61.3 |
| 1987 | 34.4 | 23.1 | 57.5 | 5.6 | 113.8 | 67.2 |
| 1988 | 35.0 | 23.1 | 58.1 | 6.8 | 105.6 | 65.9 |
| 1989 | 35.2 | 24.6 | 59.8 | 4.9 | 98.9 | 70.0 |
| 1990 | 37.0 | 27.4 | 64.4 | 3.3 | 89.5 | 73.9 |

சர்வதேச வர்த்தகத்தில் இலங்கையின் நிலையினை ஆராயும்போது சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்திலிருந்து ஏறக்குறைய ஒரு தசாப்த காலத்திற்குத் தொடர்ந்தும் இலங்கை திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடித்தது. 1950-ம் ஆண்டளவில் பிரதான பெருந்தோட்ட உற்பத்திகளான தேயிலை, இறப்பர், தெங்கு ஆகிய மூன்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கூட்டப்பட்ட பெறுமதியில் 53 வீதமான பங்களிப்பைச் செய்தன. ஒரு காலனித்துவ பொருளாதார அமைப்பே இக் காலப்பகுதியில் காணப்பட்டது. பெருந்தோட்ட உற்பத்திகள் ஏற்றுமதி வர்த்தகத்தில் பெருமளவான பங்கினைப் பெற்றிருந்ததோடு இலங்கைப் பொருளாதாரம் ஏற்றுமதியில் தங்கியிருக்கின்ற பொருளாதாரமாகவும் காணப்பட்டது. உலகளாவிய சாதகமான நிலைமைகள் இப் பொருட்களின் உறுதியான விலை நிலைமையும் அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தந்தமையால் அரசின் சமூக நலச் செலவுகளையும் உணவு கைத்தொழில் பொருட்களின் இறக்குமதியையும் ஈடுசெய்யக்கூடிய வருமானமாக அமைந்தது.

இவ்வாறான திறந்த பொருளாதாரம் இலங்கையின் பொருளாதாரக் கட்டுமானத்தில் குறிப்பிடக் கூடியளவு மாற்றம் எதனையும் ஏற்படுத்தவில்லை. இக்கொள்கைக்கு ஏற்றவிதமாக ஒரு நிலையான அந்நியச் செலாவணி மாற்று வீதம் கடைப்பிடிக்கப்பட்டது. அரசிறைக் கொள்கையானது தனியே அரச வருமானத்தைப் பெறும் ஒரு வழியாகவே பயன்படுத்தப்பட்டது. 1950களில் அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகள் இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழிலை மேற்கொண்டபோதும் இலங்கையில் கைத்தொழில் முயற்சிகளுக்கான ஊக்குவிப்புகள் குறைவாவே காணப்பட்டது.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார அபிவிருத்தி உபாயங்கள் அவ்வக் காலங்களில் பதவிக்கு வந்த அரசாங்கங்களின் கருத்து நிலையினைப் பிரதிபலிப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகவே இருந்து வருகின்றது. இவ் அபிவிருத்தி உபாயத்தில் பிரதானமாக வர்த்தக உபாயம் விளங்குவதினால் அரசாங்கத்தின் கருத்து நிலையினைப் பிரதிபலிப்பது தவிர்க்கமுடியாததாகும். 1948 - 1956 காலப்பகுதியில் பதவியிலிருந்த ஐ. தே. க. அரசாங்கம் பொருளாதார உற்பத்தி முயற்சி நடவடிக்கைகளில் மிகக் குறைந்தளவிலான தலையீட்டைக் கொண்டிருந்ததோடு நடுநிலை வாய்ந்த வர்த்தகக் கொள்கைக்கே அழுத்தம் கொடுத்தது. இக்காலப்பகுதியில் அரசாங்கம் உற்பத்தி வழியிலான பொருளாதார நடவடிக்கைகளைக் குறைத்துக்கொண்ட அதேவேளை சமூக நலச் செலவீடுகளான கல்வி, சுகாதாரம் போன்ற நடவடிக்கையில் பாரிய முதலீடுகளை மேற்கொண்டு இக்குறிகாட்டிகளில் முன்னேற்றமான ஒரு நிலையை ஏற்படுத்தியது.

1956க்குப் பின்பு சர்வதேச சூழ்நிலையில் பாதகத் தன்மை என்பவற்றால் பெருந்தோட்ட உற்பத்திப் பொருட்களின் கேள்வியில் ஏற்பட்ட தளம்பலும் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சியும் இறக்குமதிப் பொருட்களின் விலை அதிகரிப்பும் சமூக நலச் செலவுகளின் அதிகரிப்பும் சென்மதி நிலுவையில் தொடர்ச்சியான பற்றாக்குறையினை ஏற்படுத்தின. சுருக்கமாகக் கூறின் 1948 - 1960 காலப்பகுதியில் உள்நாட்டு உற்பத்தியானது வருடமொன்றிற்கு சராசரியாக 5% காணப்பட்டது. 1960-ம் ஆண்டில் இலங்கையின் தலா வருமானம் 152 U.S. $ ஆகவும், தென்கொரியாவின் தலா வருமானம் 154 U.S. $ என்றளவாகவும் காணப்பட்டது. 1953ல் இலங்கையின் வேலையின்மை 0 6% மாக இருந்து 1959 - 60 ல் 11.6% மாக உயர்வடைந்திருந்தது. பொதுவாக குறிப்பிடுவதானால் இக்காலப் பகுதியில் இலங்கையில் காணப்பட்ட உட்கட்டுமானங்களும் அந்நிய நாட்டு ஊழியம் ஆகிய காரணிகள் அபிவிருத்தியில் பங்களித்துள்ளன.

1956ல் புதிதாகப் பதவிக்கு வந்த அரசாங்கம் பொருளாதார அபிவிருத்தியில் லத்தீன் அமெரிக்க கட்டமைப்பாளர்களது அணுகுமுறை ஒத்த பொருளாதார உற்பத்தியினைப் பின்பற்றத் தொடங்கியது. இதன் முதற்கட்டமாக 1962ல் இறுக்கமான இறக்குமதிக் கொள்கை அமுல்படுத்தப்பட்டது.

உணவுவகைகள், பெற்றோலியம், பசளை, எரிபொருள், மருந்துவகைகள் தவிர்ந்த எல்லா இறக்குமதிகளும் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன. இறக்குமதிக்கான தீர்வை மீது பிரதான மாற்றம் கொண்டுவரப்பட்டதோடு இறுப்பு வீதமானது 10லிருந்து 500 வரை வேறுபடுத்தப்பட்ட அளவில் பொருட்களின் தன்மையைப் பொறுத்து அமைந்திருந்தது. இறுப்பு கொள்கையானது உள்நாட்டு உற்பத்திகளைப் பாதுகாக்கும் நோக்குடனும் அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதிகளைக் குறைப்பதாகவும் அமைந்தது. அந்நியச் செலாவணிப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கும் அந்நியச் செலாவணி ஒதுக்கீட்டிலும் பல கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

இலங்கை 1957 - 1976 வரையுள்ள 20 வருடங்களில் தொடர்ச்சியான வர்த்தக நிலுவையில் குறைநிலையினை அனுபவித்து வந்தது. 1965 - 1969 காலப்பகுதியில் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் ஒரு பகுதியான தாராள மயமாக்கல் நடவடிக்கையை அப்போது பதவியிலிருந்த அரசாங்கம் அறிமுகப்படுத்தியது. தாராள மயமாக்கலின் ஊக்குவிப்பு நடவடிக்கைகளாகவே 1967ல் இலங்கை ரூபாவின் நாணய மதிப்பிறக்கம், 1968ல் கொண்டுவரப்பட்ட அந்நியச் செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டம் ( FEECS ), திறந்தபொது அனுமதி முறையை ( OGL ) மீள் அளித்தல் போன்றன, அமைந்தன. எனினும் ஏற்றுமதித்துறையின் வளர்ச்சி வேகம் குறைவானதாகவும் நாட்டின் பொது விலை மட்டங்களின் அதிகரிப்பு அதிகமாகவும் காணப்பட்டதால் சென்மதி நிலுவைப் பிரச்சனை தொடர்ந்தும் நிலவியது. இவ்விரு செயற்பாடுகளின் விளைவாக இறக்குமதி பதிலீட்டுக் கொள்கையும் இறுதியாகத் தோல்விபடையவேண்டிய நிலைக்குள்ளாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970 - 77 காலப்பகுதி மிகக் கடுமையான வர்த்தகக் கட்டுப்பாடுகள் அமுல் படுத்தப்பட்ட காலப்பகுதியாகும். தேசிய மயப்படுத்தல் நடவடிக்கைகளாலும் கைத் தொழில் முயற்சிகளாலும் பொருளாதார உற்பத்தி நடவடிக்கைகளில் அரசாங்கத்தின் பங்கு அதிகரிக்கத் தொடங்கியது. சர்வதேச வர்த்தகம் முதலீடுகள் உழைப்புச்சந்தை, பணச்சந்தை ஆகியவற்றில் நடைமுறைப்படுத்திய கட்டுப்பாடுகளினால் பொருளாதாரம் திரிவுபடுத்தப்பட்டதாகக் காணப்பட்டது. இவ் இறக்குமதி பதிலீட்டு உபாயமானது விவசாயம், கைத்தொழில் புகுத்தப்பட்டபோதும் உள்நாட்டுச் சந்தையை அடிப்படை யாகக் கொண்டதாலும் வெளிநாட்டு மூலப்பொருட்களைப் பயன்படுத்தியமையாலும் மூலதனச் செறிவு வாய்ந்தவையாகக் காணப்பட்டமையாலும் இக்கொள்கை சென்மதி நிலுவைப் பிரச்னையை நீக்கவோ வேலையின்மையைக் குறைக்கவோ பெருமளவு பயன் படவில்லை எனலாம். கைத்தொழில்களில் மெய்ரீதியான வளர்ச்சியானது 1960 - 65 காலப் பகுதியில் 5.2% மாகவும் 1965 - 1970 காலப்பகுதியில் 7.2% மாகவும் காணப்பட் டது. இது 1965 - 1970 களில் மேற்கொள்ளப்பட்ட தாராள மயமாக்கல் நடவடிக்கை யின் விளைவாகவே கொள்ளலாம். ஆனால் மாறாக 1970 - 1977 காலப்பகுதியில் கைத்தொழில்துறையின் வளர்ச்சியானது கூட்டப்படும் பெறுமதியில் 3.0% மாகக் காணப்பட்டது.

1977ல் பதவிக்குவந்த அரசாங்கம் இலங்கைப் பொருளாதாரத்தில் இருந்த நெருக்கடி நிலமைகளுக்குத் தீர்வுகாணும் முகமாக திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகம் செய்தது. இக்கொள்கை வெளிநோக்கியதும் உலக பொருளாதாரத்துடன் இலங்கைப் பொருளாதாரத்தை இணைக்கின்ற நடவடிக்கையாகவுமே காணப்படுகின்றது இவ்வணுகு முறையானது அரசாங்கத்தின் உற்பத்தி முயற்சிகளைக் குறைப்பதன் மூல மாக தனியார் உற்பத்தி முயற்சிகளை ஊக்குவித்து சந்தைச் சக்திகளின் வழியாகவே காரணி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளல் என்ற பொருளாதாரத் தத்துவத்தை அடிப்படை யாகக் கொண்டதாகும். திறந்த பொருளாதார அபிவிருத்தி அணுகுமுறை திறமையாக இயங்கக்கூடிய வகையிலே பல சீர்திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன. இவற்றுள் வர்த்த கத்துடன் தொடர்புடைய வகையில் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் நீக்கம், இரட்டை நிலையான நாணய மாற்று வீத நீக்கம் மிதக்க விடப்பட்ட நாணயமாற்று வீதம் அறி முகம், இறக்குமதிக்கட்டுப்பாடுகளின் சீராக்கம், விலைக்கட்டுப்பாட்டு நீக்கம், வெளி நாட்டுச் சொத்து அதிகரிப்பு என்பவற்றைக் குறிப்பிடலாம்.

தாராள மயமாக்கல் கொள்கை மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் (1977-90 வருடாந்தம் சராசரியாக மொத்த மெய் ரீதியான உள்நாட்டு உற்பத்தி 4.8% மாகக் காணப்பட்டது. இவ்வளர்ச்சியானது முன்னைய 1970 - 1977 காலப்பகுதியோடு ஒப் பிடுகின்றபோது திருப்தியானதாக உள்ளது. ஆனால் இவ்வளர்ச்சியானது புதிய கைத் தொழில் நாடுகளின் வளர்ச்சியை விட குறைவானதேயாகும். 1978 - 1990 காலப்பகுதி யில் ஏற்பட்ட துறைரீதியான வளர்ச்சியானது பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றது

| துறைகள் | 1978 — 1990 சராசரி வளர்ச்சி வீதம் |
|---|---|
| விவசாயமும் காட்டுத்தொழிலும் | 3.6% |
| மீன்பிடி விவசாயம் | 3.8% |
| பெருந்தோட்ட விவசாயம் | 1.3% |
| பெருந்தோட்டமல்லா விவசாயம் | 5.2% |
| தயாரிப்புத் தொழில் | 5.3% |
| சேவைத் துறைகள் | 5.4% |
| பண்ட உற்பத்திகள் | 4.3% |

ஆதாரம் மத்தியவங்கி அறிக்கை (வெவ்வேறு ஆண்டுகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தோட்ட துறையின் வீழ்ச்சியைப் பெருந்தோட்டமல்லாத்துறை ஈடுசெய்வ தாக அமைகின்றது. இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும்பிரதான காரணிகளாகக் காணப்படுவது உள்நாட்டு மூலதன ஆக்கமும் தொழிலாளரின் எல்லை உற்பத்தி அதிகரிப்புமாகும்.

1977 - 1990 காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மொத்த உள் நாட்டு மூலதன ஆக்கமானது 25 5% காணப்பட்டது. இது 1970 - 1977 காலப்பகுதியி லிருந்த 16% த்தை விட அதிகமானதாகும். உள்நாட்டு மூலதன அதிகரிப்புக்கு வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் ஏற்பட்ட நேரடி முதலீடுகளே பிரதான காரணமாகும். தாராள மயமாக்கலின் விளைவாக 1977 - 1990 காலப்பகுதியில் நாட்டின் விலை அதிகரிப்புச் சராசரியாக 14% பதிவு செய்யப்பட்டது. இவ் விலைவீக்கம் உயர்வாகக் காணப்படுவ தற்குப் பல்வேறு காரணிகள் துணை புரிந்துள்ளன. இலங்கைப் பொருளாதாரம் உலகப் பொருளாதாரத்தோடு இணைக்கப்பட்டமையால் உலக சந்தையிலுள்ள வீக்க நிலமைகள் இலங்கையிலும் தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கலாம். இத்துடன் குறைநிலைவரவு செல வுத் திட்டத்தினை நிதிப்படுத்தல் மூலமாகவும் இலங்கையின் வீக்கம் காணப்படுகிறது.

இக்காலப் பகுதியில் வேலையின்மை பற்றிய தரவுகள் போதுமானதாக அமை யாதவிடத்தும் 1981 - 1982 நுகர்வோர் நிதி மதிப்பீடுகளின்படி 11.9% வேலையற்றுக் காணப்படுகின்றனர். அதிகரித்து வருகின்ற தொழிலாளர் படைக்கு வேலைவாய்ப்பினை வழங்கக்கூடிய முதலீட்டுத் திட்டங்களின்மையும் கைத்தொழில் துறையானது எதிர்பார்த்த அளவு உழைப்பாளர்களை உள்வாங்கிக் கொள்ளாமையினாலும் வேலையில்லாப் பிரச் சனையைக் குறைக்கமுடியாதுள்ளது. ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில்களினால் உள் நாட்டில் இருந்த சிற்றளவு குடிசைக்கைத்தொழில் பாதிக்கப்பட்டதுடன் பலர் வேலை யிழந்தவர்களாகவும் காணப்பட்டமையும் ஒரு பாதகமான நிலையேயாகும்.

1970களில் நடுப்பகுதியில் 5% மாகக் காணப்பட்ட உணவு மானியச் செலவு 1984ல் 1% மாகக் காணப்பட்டது. இக்குறைப்பினால் வறிய நிலையிலுள்ளவர்கள் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். 1980 - 1988 காலப்பகுதியில் அதி உயர்மட்டவருமான வகுப்பிலுள்ள 20% மாணவர் களினது, வருமானமானது மிகக் கீழ்மட்டத்திலுள்ள 20% மானவர்களின் வருமானத்தைவிட 11.7 சதவீதம் அதிகமாகக் காணப்பட்டது. இதனை நிருபிக்கும் விதமாக கினிக் குணகத்தின் பெறுமானமும் 1986ல் 0.58 ஆக உயர்ந்துள் ளது. இக் குணகமானது 1953, 1963, 1973, 1978/1979 இலும் முறையே 0.50, 0.49, 0.41, 0.49 ஆகக் காணப்பட்டது. மேலும் இலங்கையில் ஏறக்குறைய 25%மான மக்கள் தமது போதுமான கலோரியை உட்கொள்ளுவதற்கான வருமான மட்டத்தின் கீழ் வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கை அரசியல் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் ஏறக்குறைய ஒரு தசாப்த காலத்திற்கு காலனித்துவ பொருளாதார அமைப்பு முறையையே தொடர்ந்து பின் பற்றியமையும், அக்காலப்பகுதி தனியே வெளிநாட்டு வர்த்தகத்தை நம்பியிருந்தமையும் கைத்தொழில் அபிவிருத்தி முயற்சிகளைக் காலம் தாழ்த்தித் தொடங்கியமையும் அபி விருத்தி அணுகுமுறையின் குறைபாட்டையே வெளிப்படுத்துகின்றது.

இறுக்கமான பொருளாதாரக் கொள்கையினால் தன்னிறைவு என்பதற்குப் பதி லாக பொருளாதாரப் பிரச்சனை எதிர்நோக்கியது, நுகர்வுப் பொருட்களுக்காக இறக்கு மதியில் தங்கியிருக்கும் நிலைமாறி இடைத்தர முதலீட்டுப் பொருட்களுக்காகவும் மூலப் பொருட்களுக்காகவும் தங்கியிருக்கும் நிலை உருவாக்கப்பட்டது.

காரணி ஒதுக்கீடு, காரணிப் பயன்பாடு என்பன செயற்திறன் வாய்ந்ததாகக் காணப்படவில்லை. ஏற்றுமதி பல்லினப்படுத்தியமையும் வெற்றியளிக்கவில்லை. இக் காலப்பகுதியே கைத்தொழில் அடித்தளக் காலமாகும்.

இலங்கை சுதந்திரத்திற்குப் பின்புள்ள ஒரு தசாப்த காலப்பகுதியில் சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளூடாக குறிப்பாக முதல் விளைவுப் பொருட்கள் ஏற்றுமதியால் நன்மையடைந்துள்ள போதும் 1960க்குப் பின்பு இறுக்கமான வர்த்தக கட்டுப்பாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைப்பிடிக்கப்பட்டதினால் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி பெருமளவாகத் தடைப்பட்டிருந்ததையும் அவதானிக்க முடிகிறது. 1977க்குப் பின்பு திறந்த பொருளாதாரக் கொள்கையின் மூலம் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த முடிந்தபோதும் பெருமளவான அபிவிருத்தியைச் சர்வதேச வர்த்தகத்தின் மூலம் ஏற்படுத்த முடியவில்லை. சமீப காலங்களில் அபிவிருத்தியடைந்த நாடுகளில் மேற்கொள்ளப்படுகின்ற தீர்வைகளல்லாத தடைகள் மூலமாக இலங்கை போன்ற அபிவிருத்தியடைகின்ற நாடுகளின் ஏற்றுமதிப் பொருட்களைச் சுமுகமாக அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் தடைகள் காணப்படுவதால் பூரணமாகக் கட்டுப்பாடற்ற வர்த்தகத்தை காண முடிவதில்லை. நாடுகள் சில சேர்ந்து தங்களை ஒரு சமூக நாடுகளாக அமைத்துத் தமக்குள்ளே கட்டுப்பாடற்ற வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் பரஸ்பரம் நன்மையைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதில் ஐயமில்லை.

உசா துணை நூல்கள்


1. World Bank, World Development Report (1987)
2. Wimal Wickramasinghe (1985) The Theory of Multiples Exchange Rules and Exchange Rate management ri Lanka Chapters Central Bank of Ceylon p. 222
3. Satchi Ponnambalam Dependent Capitalism in crisis the Sri Lankan Economy 1948/1980
Red Press London chapters 4
4. Saman Kelogama (1989) the Spead and Stages of a Trade strategy issues and Evidence the world Bank Research Observer Vol - 3 No



வணிகத் தளிர் மன்றம்

சிறக்க வாழ்த்துகின்றோம்.

செல்லையா சிவபாதலிங்கம்

வைரக்கல் நகை வியாபாரம்

ஆடர் நகைகள் 22 கரட் தங்கத்தில்
சிறந்த முறையில்
செய்து கொடுக்கப்படும்.

191 H கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றின்சி சாள்ஸ்
ஆண்டு 13 வர்த்தகம்,

# இருப்புக் கட்டுப்பாட்டின் விலையிடல் முறைகள்

உற்பத்திக்கு வழங்கப்படும் மூலப்பொருட்களுக்கு விலையிடுவதற்கு பல்வேறு முறைகள் பின்பற்றப்படுகின்றன. அவற்றுள் முக்கியமானவை பின்வருமாறு :

## 1: உண்மை விலை, அல்லது செலவு அடிப்படை ACTUAL COST pRICE

1. குறிப்பிட்ட விலை முறை — SPECIFIC PRICE MTD
2. முதல் வந்து முதல் வெளியே முறை — F. I. F. O.
3. கடைசி வந்து முதல் வெளியே முறை — L. F. F. O.
4. அடிப்படை இருப்பு முறை — BASE STOCK MTD.
5. ஆக கூடியது முதல் வெளியே முறை — H.I.F.O.

## 2. சராசரி விலை முறைமை AVERAGE PRICE MTD

1. சாதாரண சராசரி முறை — SIMPLE AVERAGE MTD.
2. நிறையளிக்கப்பட்ட சராசரி முறை — WEIGHTED AVERAGE MTD.
3. பருவகால சாதாரண சராசரி — PERIODIC SIMPLE AVERAGE MTD.
4. பருவகால நிறையளித்த சராசரி முறை — PERIODIC WEIGHTED AVERAGE MTD.

## 3. ஏனைய முறைகள்

1. நியம விலை — STANDARD PRICE
2. பதில் கிரய முறை — REPIACEMENT PRICE
3. சந்தை விலை — MARKET PRICE
4. அடுத்து வருவது முதல் வெளியே முறை — N. I. F. O.

## குறிப்பிட்ட விலை அடிப்படை SPECIFIC PRICE MTD.

குறிப்பிட்ட ஒரு வேலைக்காக விசேடமாகக் கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருளானது உண்மையான கொள்வனவு விலையிலேயே விலையிடப்படுகின்றது. இத்தகைய மூலப்பொருட்கள் வேறாக களஞ்சியப்படுத்தப்படுவதுடன் குறிப்பிட்ட வேலைக்கு மட்டுமே வழங்கப்படுகின்றது.

## குறிப்பிட்ட விலை அடிப்படையின் நன்மை

1. கொள்விலையிலேயே மீளப் பெறலாம்.
2. விற்பனை செய்யும்போது இலாப நட்டங்கள் ஏற்படமாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்பிட்ட விலை அடிப்படையின் தீமை

குறிக்கப்பட்ட வேலைக்கு விசேட மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது மட்டுமே பொருத்தமானதாகக் காணப்படுகின்றது.

குறிப்பிட்ட விலை அடிப்படையில் பின்வருமாறு சரக்கிருப்பினை அறிந்து கொள்ளலாம்.

**களஞ்சியப் பேரேட்டுக் கணக்கு**

| திகதி | கொள்வனவு | | | விநியோகம் | | | மீதி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அலகு | விலை | பெறுமதி | அலகு | விலை | பெறுமதி | அலகு | பெறுமதி |
| 01.1.92 | 1000 | 1 ரூ | 1000 | — | — | — | 1000 | 1000 |
| 10.1.92 | 260 | 1.05 | 273 | — | — | — | 1260 | 1273 |
| 20.1.92 | — | — | — | 700 | 1 ரூ | 700 | 560 | 573 |
| 04.2.92 | 400 | 1.15 | 460 | — | — | — | 960 | 1033 |
| 21.2.92 | 300 | 1.25 | 375 | — | — | — | 1260 | 1408 |
| 03.4.92 | — | — | — | 300 | 1 ரூ | 300) | | |
| | | | | 260 | 1.05 | 273) | | |
| | | | | 60 | 1.15 | 69) | 640 | 766 |
| 12.4 92 | — | — | — | 240 | 1.15 | 273 | 400 | 490 |
| 10.5.92 | 500 | 1.10 | 550 | — | — | — | 900 | 1040 |
| 25.5.92 | | | | 100 | 1.15 | 115 | | |
| 28.5.92 | | | | 280 | 1.25 | 350 | 520 | 575 |

## முதல் வந்து முதல் வெளியே FIRST IN FIRST OUT

இம்முறையில் உற்பத்திக்காகப் பொருட்கள் வழங்கப்படும்போது களஞ்சியத்திற்கு முதல் வந்த பொருட்கள் அதாவது முதலில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் முதலில் பயன்படுத்தப்படுகின்றது,

## முதல் வந்து முதல் வெளியேறுவதன் நன்மைகள்

1. விலைமட்டங்கள் அதிகளவில் தளம்பாத நிலையில் இம்முறையில் இலகுவாக நடைமுறைப்படுத்தலாம்.
2. மூலப்பொருட்கள் உண்மையான செலவினடிப்படையில் கணிக்கப்படுவதனால் களஞ்சியப் பேரேட்டுக் கணக்கு பேணுவது சுலபமாக இருக்கும்.
3. உண்மையான விலையில் பொருட்கள் வழங்கப்படுவதனால் இலாப நட்டங்கள் ஏற்படாது.
4. இறுதி இருப்பு கணிப்பிடப்படும்போது கடைசியாக வழங்கப்பட்ட பொருட்களே கையிருப்பில் இருப்பதால் இறுதி இருப்பின் பெறுமதி ஏறக்குறைய உண்மையான சந்தை விலையை ஒத்ததாக இருக்கும்,

## முதல் வந்து முதல் வெளியேறுவதன் தீமைகள்

1. விலைகள் அடிக்கடி தளம்பினால் இம்முறையின்படி விலையிடுவது அதிக பிரச்சனையாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விலை உண்மையான சந்தை விலையை ஒத்ததாக இருக்கமாட்டாது. ஏனெனில் பழைய விலையிலேயே உற்பத்திக்கு பொருட்கள் வழங்கப்படுவதனாலாகும்.

3. ஒவ்வொரு வேலைக்கும் ஒவ்வொரு விலையில் மூலப்பொருட்கள் வழங்கப்படுவதனால் பல்வேறு வேலைகளுக்கிடையிலான செலவை ஒப்பீட்டுப் பார்ப்பதற்கு இது பொருத்தமானதல்ல.

பின்வரும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு களஞ்சியப் பேரேட்டினை தயாரிப்பதன் மூலம் இறுதிச் சரக்கிருப்பின் பெறுமதியைக் கணிப்பிடுக.

| | | | | |
|---|---|---|---|---|
| 01-1-92 இல் | கொள்வனவு செய்தது | 1000 | அலகு | 1 ரூ· |
| 10-1-92 இல் | ,, | 260 | அலகு | 1-05 சதம் |
| 20-1-92 இல் | விநியோகம் செய்தது | 700 | அலகு | |
| 04-2-92 இல் | கொள்வனவு செய்தது | 400 | அலகு | 1-15 சதம் |
| 21-2-92 இல் | கொள்வனவு செய்தது | 300 | அலகு | 1-25 சதம் |
| 14-3-92 இல் | விநியோகம் செய்தது | 620 | அலகு | |
| 12-4-92 இல் | ,, | 240 | அலகு | |
| 10-5-92 இல் | கொள்வனவு செய்தது | 500 | அலகு | 1-10 சதம் |
| 25-5-92 இல் | விநியோகம் செய்தது | 380 | அலகு | |

**களஞ்சியப் பேரேட்டுக் கணக்கு — F.I.F.C. முறையில்**

| திகதி | | கொள்வனவு | | | விநியோகம் | | | மீதி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அலகு | விலை | பெறுமதி | அலகு | விலை | பெறுமதி | அலகு | பெறுமதி |
| 1992 தை | 01 | 1000 | 1 ரூ | 1000 | — | — | — | 1000 | 1000 |
| | 10 | 260 | 1.05 | 273 | — | — | — | 1260 | 1273 |
| | 20 | — | — | — | 700 | 1 ரூ | 700 | 560 | 573 |
| மாசி | 04 | 400 | 1.15 | 460 | — | — | — | 960 | 1033 |
| | 21 | 300 | 1.25 | 375 | — | — | — | 1260 | 1408 |
| பங்குனி | 14 | — | — | — | 300 | 1 ரூ | 300) | | |
| | | — | — | — | 260 | 1.05 | 273) | | |
| | | — | — | — | 60 | 1.15 | 69) | 640 | 766 |
| சித்திரை | 12 | — | — | — | 240 | 1.15 | 275 | 400 | 490 |
| வைகாசி | 10 | 500 | 1.10 | 550 | — | — | — | 900 | 1040 |
| | 25 | | | | 100 | 1.15 | 115 | | |
| | | | | | 280 | 1.25 | 350 | 520 | 575 |

எனவே இறுதியிருப்பின் பெறுமதி 575/-

## கடைசி வந்தது முதல் வெளியே LAST IN FIRST OUT

இது முதல் வந்து முதல் வெளியே முறைக்கு எதிர்மாறானது. அதாவது கடைசியாகக் களஞ்சியத்திற்கு வந்த பொருட்களே முதலில் வெளியே அனுப்புவதாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்பட்டு விலையிடப்படுகிறது. எனினும் இம்முறையிலும் உண்மையாக விலைகளிலேயே உற்பத்திக்குப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

## கடைசி வந்தது முதல் வெளியேறும் முறையின் நன்மைகள்

1. உற்பத்திக்கு வழங்கப்படும் பொருட்கள் ஏறக்குறைய நடைமுறைச் சந்தை விலையிலேயே வழங்கப்படுகின்றன.
2. உண்மையான விலையிலேயே வழங்கப்படுவதால் இலாபநட்டங்கள் ஏற்படாது.
3. இறுதிச் சரக்கிருப்பு மீதி மிகவும் குறைவாகக் காணப்படும்.

## கடைசி வந்தது முதல் வெளியேறும் முறையின் தீமைகள்

1. பல்வேறு வேலைகளுக்கிடையே செலவுகளை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு இது பொருத்தமற்றதாக இருக்கும்.
2. கையிருப்பிலிருக்கும் சரக்கிருப்பு பழைய பொருட்களாகவே இருக்கும். ஆகையால் அவற்றின் பெறுமதி நடைமுறைச் சந்தை விலையை பிரதிபலிக்காது.
3. விலை வீழ்ச்சியடைந்து செல்லும் சந்தர்ப்பங்களில் சரக்கிருப்பின் புத்தகப் பெறுமதி உண்மையான விலையிலும் கூடுதலாகவும் காட்டப்படும். ஆதலால் இவ்வாறான பெறுமதியை அழிக்க நேரிடும்.
4. விலை மட்டங்கள் அடிக்கடி தளம்பினால் கணிப்பிடுவது பிரச்சினையாக இருக்கும்.

மேற்கூறிய உதாரணத்தைப் பயன்படுத்தி கடைசி வந்து முதல் வெளியே அடிப்படையில் பேரேடு தயாரிக்குக.

**களஞ்சியப் பேரேடு — L. I. F. O. முறையில்**

| திகதி | கொள்வனவு | | | விநியோகம் | | | மீதி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அலகு | விலை | பெறுமதி | அலகு | விலை | பெறுமதி | அலகு | பெறுமதி |
| 01.1.92 | 1000 | 1 ரூ | 1000 | — | — | — | 1000 | 1000 |
| 10.1.92 | 260 | 1.05 | 273 | | | | 1260 | 1273 |
| 20.1.92 | | | | 260 | 1.05 | 273) | | |
| | | | | 440 | 1 ரூ | 440) | 560 | 560 |
| 04.2.92 | 400 | 1.15 | 460 | | | | 960 | 1020 |
| 21.2.92 | 300 | 1.25 | 375 | | | | 1260 | 1395 |
| 14.3.92 | | | | 300 | 1.25 | 375) | | |
| | | | | 320 | 1.15 | 368) | 640 | 652 |
| 12.4.92 | | | | 80 | 1.15 | 92) | | |
| | | | | 160 | 1 ரூ | 160) | 400 | 400 |
| 10.5.92 | 500 | 1.10 | 550 | | | | 900 | 950 |
| 25.5.92 | | | | 380 | 1.10 | 418 | 520 | 532 |

எனவே இறுதியிருப்பின் பெறுமதி 532/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிப்படை இருப்பு முறை BASE STOCK METHOD

இம்முறையில் பிரதான களஞ்சியத்தில் குறிப்பிட்ட பொருட்கள் ஆரம்பத்திலிருந்து கையிருப்பாக பராமரிக்கப்படும். இவ் அடிப்படை இருப்பு மூலப்பொருட்களின் தேவையைப் பூர்த்திசெய்யும் நோக்குடன் களஞ்சியத்தில் பேணப்படும் ஆகக் குறைந்த சரக்கிருப்பு மட்டுமே இல்லாது அடிப்படையிருப்பாக பராமரிக்கப்படுகிறது. கணிப்பீட்டை பொறுத்தவரையில் அடிப்படை இருப்புத் தவிர்ந்த மிகுதி வளங்கள் யாவும் முதல் வந்து முதல் வெளியே முறையை ஒத்ததாகக் காணப்படும். இறுதியிருப்பினது அடிப்படையில் பின் பெறுமதியுடன் உற்பத்திக்கு வழங்கியது போக மிகுதியாக உள்ளவற்றின் பெறுமதியைச் சேர்ப்பதன் மூலம் கணிப்பிடப்படுகின்றது.

மேற்கூறிய உதாரணத்தில் 100 அலகுகள் அடிப்படை இருப்பாகப் பேணப்படுகின்றது எனக்கொண்டு அடிப்படை இருப்பு முறையில் களஞ்சியப் பேரேட்டுக் கணக்கு பின்வருமாறு காணப்படும்.

**களஞ்சியப் பேரேடு**

| திகதி | கொள்வனவு | | | விநியோகம் | | | மீதி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அலகு | விலை | பெறுமதி | அலகு | விலை | பெறுமதி | அலகு | பெறுமதி |
| 01.1.92 | 1000 | 1 ரூ | 1000 | — | — | — | 1000 | 1000 |
| 10.1.92 | 260 | 1.05 | 273 | — | — | — | 1260 | 1273 |
| 20.1.92 | | | | 700 | 1 ரூ | 700 | 560 | 573 |
| 04.2.92 | 400 | 1.15 | 460 | | | | 960 | 1033 |
| 21.2.92 | 300 | 1.25 | 373 | | | | 1260 | 1408 |
| 14.3.92 | | | | 200 | 1 ரூ | 200) | | |
| | | | | 260 | 1.05 | 273) | | |
| | | | | 160 | 1.15 | 184) | 640 | 751 |
| 12.4.92 | | | | 240 | 1.15 | 276 | 400 | 475 |
| 10.5.92 | 500 | 1.10 | 550 | | | | 900 | 1025 |
| 25.5.92 | | | | 300 | 1.25 | 375 | | |
| | | | | 8) | 1.10 | 88 | 520 | 562 |

எனவே இறுதியிருப்பின் பெறுமதி 562/-

## சாதாரண சராசரி முறை SIMPLE AVERAGE METHOD

இம்முறையில் பொருட்கள் உண்மையான விலையில் வழங்கப்படுவதில்லை. உற்பத்திக்கு வழங்கப்படும் பொருட்களுக்காகக் கொடுக்கப்பட்ட விலையின் மொத்தப் பெறுமதியை அவ்விலையின் எண்ணிக்கையால் வகுத்து வரும் சராசரி விலையிலேயே பொருட்கள் உற்பத்திக்கு வழங்கப்படுகின்றன.

## சாதாரண சராசரி முறையின் நன்மைகள்

1. நடைமுறைப்படுத்துவது சுலபம்.
2. விலைகள் அதிகளவிற்குத் தளம்பாத நிலையில் ஏறக்குறைய நியாயமானதும் சரியானதுமான விலையைத் தருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதாரண சராசரி முறையின் தீமைகள்

1. உற்பத்திக்கு வழங்கப்படும் பொருட்களுக்கான விலை உண்மையான விலையி லிருந்து வித்தியாசப்படுவதால் இலாப நட்டங்கள் ஏற்படும்.
2. உற்பத்திக்கு வழங்கப்படும் பொருட்களுக்கும் இறுதிச் சரக்கிருப்பிலுள்ள பொருட்களுக்கும் தவறான பெறுமதி காட்டப்படும்.

**களஞ்சியப் பேரேடு**

| திகதி | கொள்வனவு | | | விநியோகம் | | | மீதி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அலகு | விலை | பெறுமதி | அலகு | விலை | பெறுமதி | அலகு | பெறுமதி |
| 01 1.92 | 1000 | 1 ரூ | 1000 | — | — | — | 1000 | 1000 |
| 10.1.92 | 260 | 1.05 | 273 | | | | 1260 | 1273 |
| 20.1.92 | | | | 700 | 1.025 | 718 | 560 | 555 |
| 04 2 92 | 400 | 1.15 | 460 | | | | 960 | 1015 |
| 21.2.92 | 300 | 1.25 | 375 | | | | 1260 | 1390 |
| 14.3 92 | | | | 620 | 1.1125 | 690 | 640 | 700 |
| 12 4 92 | | | | 240 | 1.20 | 288 | 400 | 412 |
| 10.5 92 | 500 | 1.10 | 550 | | | | 900 | 962 |
| 2 5 92 | | | | 380 | 1.175 | 447 | 520 | 515 |

இறுதியிருப்பின் பெறுமதி 515/-

## நிறையளித்த சராசரி முறை WEIGTED AVERAGE METHOD

சரியான சராசரி முறையில் விலைகள் மட்டுமே கவனத்தில் கொள்ளப்படுகிறது. ஆனால் நிறையளித்த சராசரி முறையில் விலைகளும் தொகைகளும் கணிப்பிட்டு ஒரு விலை கணிக்கப்படுகின்றது. உற்பத்திக்கு பொருட்களை வழங்கும்போது கையிலிருக்கும் பொருட்களின் எண்ணிக்கையால் அவற்றின் மொத்தப்பணத்தின் பெறுமதியை வகுத்து ஒரு அலகின் விலையாகக் கொள்ளப்படும்.

$$\text{நிறையளித்த சராசரி முறை} = \frac{\text{மொத்தப் பணப்பெறுமதி}}{\text{மொத்தப் பொருள் அலகு}}$$

## நிறையளித்த சராசரி முறையின் நன்மைகள்

1. எல்லாப் பொருட்களுக்கும் சமமான பெறுமதியைக் கொடுக்கிறது.
2. அடிக்கடி பொருட்களின் கொள்வனவு நடைபெறாவிட்டால் நடைமுறைப் படுத்துவது சுலபம்.
3. கொள்வனவு விலைகளில் ஏற்படும் தளம்பல்களை இல்லாமல் செய்கிறது.

## நிறையளித்த சராசரி முறையின் தீமைகள்

1 பொருட்களின் விலைகள் எப்போதும் தரமானதாக இருக்கும். அவ்வாறான விலை எச்சந்தர்ப்பத்திலும் சந்தையில் காணப்படாது வழங்கப்படும், பொருட்களின் விலைகள் நடைமுறை விலையை ஒத்ததாக இருக்கமாட்டாது.

மேற்கூறிய தாரணத்தைப் பயன்படுத்தி நிறையளித்த சராசரி முறையின் அடிப்படையில் பேரேட்டைத் தயாரிக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| திகதி | கொள்வனவு | | | விநியோகம் | | | மீதி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அலகு | விலை | பெறுமதி | அலகு | விலை | பெறுமதி | அலகு | விலை | பெறுமதி |
| 01.1.92 | 1000 | 1 ரூ | 1000 | | | | 1000 | 1 ரூ | 1000 |
| 10.1.92 | 260 | 1.5 | 273 | | | | 1260 | 1.0103 | 1273 |
| 20.1.92 | | | | 700 | 1.0103 | 707 | 560 | | 566 |
| 04.2.92 | 400 | 1.15 | 460 | | | | 960 | 1.0688 | 1026 |
| 21.2.92 | 300 | 1.25 | 375 | | | | 1260 | | 1401 |
| 14.3.92 | | | | 620 | 1.111 | 689 | 640 | | 712 |
| 12.4.92 | | | | 240 | 1.1119 | 267 | 400 | | 445 |
| 10.5.92 | 500 | 1.10 | 550 | | | | 900 | | 995 |
| 25.5.92 | | | | 380 | 1.1056 | 420 | 520 | | 575 |

## பருவகால சாதாரண சராசரி முறை
## PERIODIC SIMPLE AVERAGE METHOD

சாதாரண சராசரி நிறையளித்த சராசரி முறைபோன்று இம்முறையிலும் பொருட்களை உண்மையான விலையில் வழங்குவதில்லை. இம்முறையில் ஒரு குறித்த காலப்பகுதியில் பெறப்பட்ட பொருட்களின் விலைகளை பொருட்கள் எத்தனை தடவை பெறப்பட்டதோ அவற்றினால் வகுப்பதன்மூலம் சராசரி விலை பெறப்படுகின்றது. இங்கு இறுதி இருப்பும் கவனத்தில் கொள்ளப்பட்டே விலை கணிக்கப்படுகின்றது ஆனால் ஆரம்ப இருப்பு விலைக் கணிப்பீட்டில் இடம்பெறாது. காரணம் ஆரம்ப இருப்பானது கடந்த காலக் கணிப்பீட்டில் இடம்பெற்றிருக்கும் ஆகையால் நிகழ்காலத்தில் சேர்க்கப் படமாட்டாது. இதனைக் கணிப்பது சுலபமாயினும் இதிலுள்ள பிரதிகூலமானது எல்லாப் பொருட்களும் களஞ்சியத்திற்கு வந்த பின்பே வழங்கப்படும் விலையை தீர்மானிக்க முடியும்.

$$\text{பருவகால சாதாரண சராசரி முறை} = \frac{\text{மூலப்பொருட்களின் விலைகளின் கொ. வி.}}{\text{விலைகளின் எண்ணிக்கை}}$$

மேற்கூறிய உதாரணத்தைப் பயன்படுத்தி பருவகால சாதாரண சராசரி முறையின் அடிப்படையில் களஞ்சியப் பேரேட்டைத் தயாரிக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களஞ்சியப் பேரேடு

| திகதி | கொள்வனவு | | | விநியோகம் | | | மீதி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அலகு | விலை | பெறுமதி | அலகு | விலை | பெறுமதி | அலகு | பெறுமதி |
| 01.1 92 | 1000 | 1. | 1000 | | | | 1000 | 1000 |
| 10 1.92 | 260 | 1.05 | 273 | | | | 1260 | 1273 |
| 20 1 92 | | | | 700 | | | 560 | |
| 04.2.92 | 400 | 1.15 | 460 | | | | 960 | |
| /1.2.92 | 300 | 1.25 | 375 | | | | 1260 | |
| 04.3.92 | | | | 620 | | | 640 | |
| 12.4 92 | | | | 240 | | | 400 | |
| 10.5 92 | 500 | 1 10 | 550 | | | | 900 | |
| 25.5.92 | | | | 380 | | | 520 | |
| | 2460 | 5.55 | 2658 | 1940 | $\frac{5.55}{5} = 1.11$ | 2153 | 520 | 505 |

$$\text{பருவகால சாதாரண முறை} = \frac{\text{மூலப்பொருட்களின் மொத்த விலை}}{\text{விலைகளின் எண்ணிக்கை}}$$

$$= \frac{5.55}{5}$$

$$= 1.11$$

கொள்வனவு — விநியோகம் = இறுதி இருப்பின் பெறுமதி

2658 — 2153 = 505/-

## பருவகால நிறையளித்த சராசரி முறை
## PERIODIC WEIGHTED AVERAGE METHOD

இம்முறையிலும் உண்மையான விலையில் பொருட்களை வழங்குவதில்லை. குறித்த காலப்பகுதியில் பெறப்பட்ட மொத்தப் பொருட்களின் பெறுமதியை அவற்றின் அலகுகளால் பிரிப்பதன் மூலம் வழங்கப்படும் விலை பெறப்படுகின்றது. குறித்த கால முடிவின் பின்னரே வழங்கும் விலை பெறுவதால் கணிப்பதற்கு நிறையளித்த சராசரி முறையிலும் இலகுவானது. மேலும் எல்லா மூலப்பொருள் அலகுகளின் விலையும் இங்கு கணிப்பீட்டிற்குப் பயன்படுவதால் பருவகால சாதாரண சராசரி விலையைவிடச் சரியான பெறுமதியைக் கொடுக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### களஞ்சியப் பேரேடு

| திகதி | கொள்வனவு | | | விநியோகம் | | | மீதி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அலகு | விலை | பெறுமதி | அலகு | விலை | பெறுமதி | அலகு | பெறுமதி |
| 01.1.92 | 1000 | 1 | 1000 | | | | 1000 | 1000 |
| 10.1.92 | 260 | 1.05 | 273 | | | | 1260 | 1273 |
| 20.1.92 | | | | 700 | | | 560 | |
| 04.2.92 | 400 | 1.15 | 460 | | | | 960 | |
| 21.2.92 | 300 | 1.25 | 375 | | | | 1260 | |
| 10.3.92 | | | | 620 | | | 640 | |
| 12.4.92 | | | | 240 | | | 400 | |
| 10.5.92 | 500 | 1.10 | 550 | | | | 900 | |
| 25.5.92 | | | | 380 | 1.08 | 410.4 | 520 | |
| | 2460 | | 2658 | 1940 | 1.08 | 2095 | 520 | 563 |

பருவகால நிறையளித்த சராசரி விலை $= \dfrac{\text{மூலப்பொருட்கள் மொ. பெறுமதி}}{\text{கொள்வனவுத் தொகை}}$

$= \dfrac{2658}{2460}$

$= 1.08$

கொள்வனவு — விநியோகம் = இறுதியிருப்பு

2658 — 2095 = 563

இறுதியிருப்பு = 563/-

## நியம விலையிடல் முறையின் நன்மைகள்

1. நடைமுறைப்படுத்துவது மிகவும் இலகுவானது.
2. நியம விலையுடன் உண்மையான விலையினை ஒப்பிடுவதன் மூலம் நியம விலையின் திறமையினை அளவிட முடிகின்றது.
3. இரண்டு வேலைகட்கிடையிலான செலவினை ஒப்பிட்டுப் பார்க்க முடிகிறது.

## நியம விலையிடல் முறையின் தீமைகள்

1. முன்னரே நியம விலையினைத் தீர்மானிக்கும்போது அதனுடன் சம்பந்தப்பட்ட அம்சங்களையும் கருத்தில்கொள்ள வேண்டியுள்ளது.
2. விநியோகிக்கப்பட்ட பொருட்களுக்கான விலை நடைமுறைச் சந்தை விலையினை ஒத்திருக்காது.
3. விலை மாற்றங்கள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.

மேற்கூறிய உதாரணத்தைப் பயன்படுத்தி நியம விலையிடல் முறையின் அடிப்படையில் களஞ்சியப் பேரேட்டுக் கணக்கைத் தயாரிக்க. நியம விலை 1 ரூ. எனக் கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| திகதி | கொள்வனவு | | | விநியோகம் | | | மீதி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அலகு | விலை | பெறுமதி | அலகு | விலை | பெறுமதி | அலகு | பெறுமதி |
| 01.1.92 | 1000 | 1 | 1000 | — | — | — | 1000 | 1000 |
| 10.1.92 | 260 | 1.05 | 273 | | | | 1260 | 1273 |
| 20.1.92 | | | | 700 | 1 | 700 | 560 | 573 |
| 04.2.92 | 400 | 1.15 | 460 | | | | 960 | 1033 |
| 21.2.92 | 300 | 1.25 | 375 | | | | 1260 | 1408 |
| 14.3.92 | | | | 620 | 1 | 620 | 640 | 788 |
| 12.4.92 | | | | 240 | 1 | 240 | 400 | 548 |
| 10.5.92 | 500 | 1.10 | 550 | | | | 900 | 1098 |
| 25.5.92 | | | | 380 | 1 | 380 | 520 | 718 |

உசாத்துணை நூல்
ரி. லூசி — COSTING

With the Best Complements

**RATHY FANCY HOUSE**

*Dealers in:* **Fancy Goods**

*NO 53 - A*
*MODEL MARKET*
*JAFFNA.*

**வணிகத் தளிர்**
**சிறப்புற வாழ்த்துகிறோம்**

★ சிறந்த ரகம்!
★ நிதான விலை!!
★ நிறைந்த சேவை!!!

என்றும் எவரும் நாடுவது

**திருப்பதி ரெக்ஸ்**

*இல 33, நவீன சந்தை,*
*யாழ்ப்பாணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரணி நாகராஜா
ஆண்டு 13; வர்த்தகம்.

# பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி

இலங்கையின் நாணய சபையினால் 1985-ம் ஆண்டு 15-ம்இலக்க பிராந்திய கிராமிய அபிவிருத்திச் சட்டப்படி பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி ஆரம்பிக்கப் பட்டது. இவ் வங்கியின் நிர்வாகம் 5 பேர் கொண்ட இயக்குனர் குழுவினால் நிர்வகிக்கப் படுகிறது. மூவர் நாணய சபையாலும் இருவர் பொதுச்சபையாலும் நியமிக்கப்படுவர். கிராமிய ரீதியாக விவசாயம் சிறுகைத்தொழில்கள் மீன்பிடி, வர்த்தகம் மற்றும் கிராமியத்துறை அபிவிருத்தி நடவடிக்கைகளிற்கு கடன்வழங்குவதனை நோக்கமாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு இதுவாகும். வணிகவங்கி மற்றும் முறைசாரா அதாவது வங்கியல்லாத் துறைகளின் சேவைகள் திருப்திகரமாக காணப்படாதிருந்தமையால் இப்பிராந்திய கிராமிய அபிவிருத்திவங்கி இன்றியமையாததாக விளங்குகின்றது. மேலும் இவ்வங்கியின் நடவடிக்கையை மத்திய வங்கியே தீர்மானிக்கின்றது. சில குறிப்பிட்ட பிரதேசங்களில் அபிவிருத்தியை மேற்கொள்வதால் அபிவிருத்தி வங்கியாகவும் தொழிற்படுகிறது.

மத்திய வங்கி 30 மில்லியனை மூலதனமாக வழங்கியுள்ளது. ஏனைய நிதியினை மத்திய வங்கியிடம் கடன்பெறுவதன் மூலமும் வைப்புக்களின் மூலமும் பெறுகிறது. தேவையாயின் வெளிநாட்டு நிதி நிறுவனங்களிலும் கடன் பெறுகிறது. பிரதேச கிராமிய வங்கி ஆரம்பித்து 2 வருடங்களின் பின் மத்திய வங்கி வழங்கிய ஆரம்ப மூலதனத் தொகைக்கு ஈடாக 49% மான பங்குகளை வணிக வங்கிக்கு வழங்குகின்றது. இதில் இலங்கைவங்கி, மக்கள்வங்கி, கற்றன் நஷனல் வங்கி, வர்த்தகவங்கி ஆகிய 4 வணிக வங்கிகளும்உள்ளடக்கப் படுகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் மொத்தமாக வழங்கிய முதலில்10% பங்குகளைப் பெற அனுமதியளிக்கப் பட்டுள்ளது. மேலும் பிரதேச கிராமிய வங்கிகள் மத்திய வங்கியிடமிருந்து மொத்தமுதலில் 10%இற்கு அதிகரிக்காது நிதியினை கடன் பெறலாம். அத்துடன் 6 மாதகாலத்திற்கு மேற்படாதகால எல்லையைக்கொண்ட இலகு ஒதுக்குகளைப் பெறக்கூடியதாகவும் வசதியளிக்கப்பட்டுள்ளது. வங்கியானது தனது வியாபார நடவடிக்கையை ஆரம்பிக்கும்போது ஆரம்பத்திலிருந்து 3 வருடங்களுக்கும் மத்திய வங்கியின் ஒதுக்குத் தேவையிலிருந்து விதிவிலக்காக இப்பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி பெறுகிறது. எனினும் அடுத்துவரும் 3 வருடங்களுக்கு மத்தியவங்கியினால் சட்டபூர்வமாக வேண்டப்படும் ஒதுக்கு தேவையில் ½ வாசியினை மத்திய வங்கியில் வைப்பிலிட வேண்டும். இலாபத்தில் வழங்கப்படும் வரி, முத்திரைவரி விற்பனைவரி ஆகியவற்றிலிருந்து முதல்10 வருடத்திற்கு வரிச்சலுகை உண்டு.

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் தொழில்கள் கிராமிய அபிவிருத்திக்காக தொழிற்படுகின்றது. அத்துடன் சேமிப்பு, நிலையான வைப்புக்களின் மூலம் நிதியினை திரட்டும் நீண்டகாலக் கடனை வழங்கி வட்டியை உழைக்கும் இவ்வங்கிக்கு ஏனைய வங்கிகளைப்போல் காசோலைவழங்க, நடைமுறைக் கணக்கினைப் பராமரிக்க அனுமதியளிக்கப் பட்ட போதிலும் இதற்கு அதிக செலவேற்படும் காரணத்தால் கையாளப்படுவதில்லை. குத்தகையிடுதல் மறுகழிவு செய்தல், மாற்றுண்டியல்களை கொள்வனவு, விற்பனை செய்தல் போன்ற செயல்களிலீடுபடுகிறது. நகையடைவுபிடித்தல் தொழிலையும் மத்திய வங்கியின் சில வரையறைகளுக்கு உட்பட்டு செயல்பட அனுமதியுண்டு. ஏனைய வங்கி ஊழியரைப்போல் அன்றி இவ்வங்கி ஊழியர்களும் மக்களைத் தேடி கிராமங்களுக்குச் சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது கடமைகளை நிறைவேற்றுகின்றனர். இதன் மூலம் கிராமப்புறங்களில் வாழும் மக்களையும் அவர்கள் எதிர்நோக்கும் போக்குவரத்து பிரச்சனைகளையும் ஓரளவிற்கு தீர்க்கமுடிகின்றது.

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் கிளை அமைப்புக்களாக 1985-ம் ஆண்டு மத்திய வங்கி 4 பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிகளை முறையே களுத்துறை, மாத்தறை, குருநாகல், அனுராதபுரம் ஆகிய இடங்களில் ஆரம்பித்து களுத்துறையில் 4 கிளைகளையும் மாத்தறையில் 5 கிளைகளையும் குருநாகலில் 6 கிளைகளையும் அனுராதபுரத்தில் 2 கிளைகளையும் உருவாக்கியது. எல்லாமாக 17 கிளைகளிருந்தன. 1991-ம் ஆண்டில் 15 மாவட்டங்களில் மொத்தமாக 124 கிளைகளைக் கொண்டு இவ் வங்கிகள் இயங்கிவருகின்றன. அவை களுத்துறையில் 13, மாத்தறையில் 8, குருநாகலில் 15, அனுராதபுரம் 10, அம்பாந்தோட்டை 7, கேகாலை 11, புத்தளம் 9, காலி 9, கண்டி 11, நுவரெலியா 6, மொனராகல 6, பதுளை 6, பொலனறுவ 4, மாத்தளை 5, இரத்தினபுரி 4-ம் ஆகும்.

1986-ம் ஆண்டில் இவ் வங்கிகளில் 21 மில்லியன் ரூபா வைப்புத் தொகையாக இருந்தது. 77 சேமிப்பு கணக்குகளாகவும் 23 நிலையான வைப்புகளாகவுமிருந்தது.

1992-ம் ஆண்டு மத்திய வங்கியின் ஆண்டறிக்கையிலிருந்து பெறப்பட்ட பிரதேச கிராமிய வங்கியின் வைப்புக்களின் விபரமும் கடன்களின் விபரமும் பின்வருமாறு.

| மொத்த சேமிப்புகள் | 1991-ம் ஆண்டு | 1992-ம் ஆண்டு |
|---|---|---|
| சேமிப்புகள் | 387,806 | 586,943 |
| சிறப்பு சேமிப்புகள் | — | — |
| நிலையான வைப்புகள் | 49.727 | 79,618 |
| மொதத சேமிப்புகள் | 437,533 | 666,561 |

வழங்கிய மொத்தக் கடன் கள்

| | | |
|---|---|---|
| வேளாண்மை | 340,615 | 321,054 |
| விலங்கு வேளாண்மை | 24.336 | 32,800 |
| மீன்பிடி | 7,967 | 12 925 |
| சிறு கைத்தொழில் | 58,987 | 81,517 |
| வீடமைப்பு நீர்வழங்கல் மின்னூட்டல் | — | — |
| செயல் திட்ட வர்த்தகம் | 80 010 | 113,023 |
| ஏனைய கடன்கள் | 83,484 | 141 916 |
| மொத்தவழங்கிய கடன்கள் | 595,399 | 703,235 |

ஏனைய ஆண்டுகளில் உதாரணமாக 1990-ம் ஆண்டு முடிவடையும்போது ஏறத்தாழ 314 மில்லியன் ரூபாவை வைப்பாக வைத்திருந்தது இவற்றில் சேமிப்புக்கு 8% தையும் நிலையான வைப்புக்கள் 12% தையும் உள்ளடக்கி இருக்கின்றன. கிராமிய மக்கள் சேமிப்பு வைப்புக்களில் அதிகளவு பணத்தினை முதலீடு செய்வதனை அறியலாம். பணத்தினை தேவையானபோது பெற கிராமியமக்கள் விரும்புகின்றனர். இதனால் வைப்புகள் 1986 இலிருந்து 1990 வரை 309,537 ஆக அதிகரித்துக் காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறை ரீதியாக வழங்கப்பட்ட கடன்கள், முற்பணங்கள் என்பவற்றை நோக்கும் போது இவ்வங்கிகளின் செயற்திறனை அறியமுடிகிறது. 1986-ல் மொத்தமாக வழங்கப்பட்ட கடனின் அளவு 47 மில்லியன் ரூபாவாகும். இது 1990-ம் ஆண்டளவில் 430 மில்லியன் ரூபாவாக அதிகரித்துக் காணப்பட்டது. இதன் பிரதான காரணி யாக வங்கி கிளைகள் 90-ம் ஆண்டில் 101 ஆக அதிகரித்தமையைக் குறிப்பிடலாம். 86-ம் ஆண்டில் 6464 மில்லியன் ரூபாவாக இருந்த கடனின் அளவு 1990-ல் சராசரியாக 9026 மில்லியன் ரூபாவாக அதிகரித்தது. இவ்வங்கிகள் பெருமளவு கடனை விவசாயத் துறைக்கே வழங்கியது. மொத்தக் கடனை 1986-ல் 46% மும் 1990-ல் 86% மும் விவசாயத் துறைக்கே வழங்கியது. கைத்தொழில்களுக்கு வழங்கிய கடனளவு 1986-ல் 15% திலிருந்து 1990-ல் 10% மாக குறைவடைந்தது. அத்துடன் திட்டங்களிற்கு கொடுத்த கடனளவு 27% லிருந்து 12% மாக குறைவடைந்து காணப்பட்டது. இவ்வங்கிகள் திரட்டிய மொத்த பணத்தில் 1½ மடங்கு கடன் வசதிகளைச் செய்து கொடுத்திருக்கின்றன, வங்கியாளர்கள் கிராமப்புறங்களில் ''பனகமுவாஸ்'' என அழைக்கப்படும் கூட்டங்களைக் கூட்டி அக்கூட்டங்களில் வங்கியின் சேவைபற்றி விளக்கமளித்து கணக்குகளைத் திறந்து மக்களின் வீடுகளுக்குச் சென்று கணக்குப்புத்தகங்களை ஒப்படைப்பார்கள். இது நடமாடும் வங்கிச்சேவையாக விளங்குகின்றது. இவ்வங்கியின் வளர்ச்சி கிராமிய மக்களின் விடிவெள்ளியாக இருக்குமென எண்ணலாம்.

உசாத்துணை நூல்கள் : மத்தியவங்கியின் ஆண்டறிக்கைகள்
பொருளியல் நோக்குகள்.


வணிகத் தளிருக்கு எமது வாழ்த்துக்கள்

அழகு நிலா நகை மாடம்

தங்கப்பவுண் நகை வியாபாரம்

22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

213 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி. அமலராணி ஞானப்பிரகாசம்
ஆண்டு - 12 வர்த்தகம்

# ஏற்றுமதியாளருக்குக் கொடுப்பனவை உறுதிப்படுத்தும் நாணயக்கடிதம்

சர்வதேச வர்த்தகத்தில் பொருட்கள் ஏற்றுமதிக்கான கொடுப்பனவுகள் பல்வேறு முறைகளில் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றிலொன்று ஆவணங்கள் மூலமான நாணயக்கடிதமாகும். (Documentary Letter of Credit) நாணயக்கடிதம் எனப்படுவது இறக்குமதியாளனுடைய நாணயத்தை உறுதிப்படுத்தி இறக்குமதி நாட்டு வங்கியினால் ஏற்றுமதியாளனுக்கு வழங்கப்படும் கடிதம் ஆகும். பொருட்கள் அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து ஏற்றுமதியாளன் நாணயக் கடிதத்தில் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கிணங்க ஆவணங்களை வங்கியில் கொடுத்துப் பணத்தினைப் பெறலாம். இதன் மூலம் ஏற்றுமதியாளரது கொடுப்பனவு உறுதிப்படுத்தப்படுகின்றது. மறுபுறத்தில் இறக்குமதியாளனுக்கு நிதி வசதியளிக்கின்றது. நாணயக்கடிதத்தைப் பெறும் பொருட்டு வங்கிக்கு விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் போது விண்ணப்பப் பத்திரத்துடன் செலாவணி கட்டுப்பாட்டுப்பத்திரம், மாதிரி விலைப்பட்டியல் என்பவற்றினையும் இணைத்து அனுப்புதல் வேண்டும் நாணயக் கடிதத்தைத் திறக்கும் போது இறக்குமதிப் பொருட்களின் பெறுமதியில் குறிப்பிட்டளவு வீதத்தை வைப்பாக செலுத்தும்படி வங்கி கேட்கலாம். எனவே நாணயக்கடிதமானது சர்வதேச ரீதியில் செய்யப்படும் வியாபாரத்துக்குச் செலுத்தப்படும் பணத்திற்கான உறுதியை ஆவணங்கள் மூலமான நாணயக்கடிதம் மூலம் வழங்கப்படுகிறது. பல்வேறு வகையான நாணயக்கடிதங்கள் பாவனையில் கையாளப்படுகின்றன.

### மீளப்பெறும் அல்லது இரத்துச் செய்யக்கூடிய நாணயக்கடிதம் (Rev cable Letter of Credit)

ஏற்றுமதியாளருக்குப் பணம் செலுத்துவதற்கு முன் இறக்குமதியாளரால் எந்நேரத்திலும் இக்கடிதத்தைத் திருத்துவதற்கோ அல்லது நீக்குவதற்கோ உரிமையை வழங்குகின்றது பொருளை விற்றவர் அதாவது ஏற்றுமதியாளர் பொருளைக் கப்பலில் ஏற்றியதன் பின்பும் தனது நாணயக்கடிதத்தைத் திருத்தவோ அல்லது முற்றாக நீக்கிவிடுவதற்கோ முயல்வாராயின் ஏற்றுமதியாளர் தனது கடனைப் பெறாமல் போகும் ஆபத்தை எதிர்நோக்குவார். அதாவது வங்கியின் உத்தரவாதம் விலக்கப்பட்டு விடும். இந்நாணயக் கடிதம் விற்பனையாளருக்குப் போதிய பாதுகாப்பை வழங்குவதில்லை. பொதுவாக ஏற்றுமதியாளர் இவ்வித நாணயக்கடிதத்தை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

### மீளப்பெற முடியாத அல்லது இரத்துச் செய்ய முடியாத நாணயக்கடிதம் (Irrevocable Letter of redit)

இந்நாணயக் கடிதத்தை வழங்கும் வங்கி ஏற்றுமதியாளர்களின் சம்மதத்துடனேயே அதைத் திருத்தவோ அல்லது முற்றாக நீக்கவோ முடியும். எனவே இந்நாணயக்கடிதம் ஏற்றுமதியாளருக்கு மிகுந்த பாதுகாப்பை வழங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உறுதிப்படுத்தப்பட்ட நாணயக்கடிதம்** (Confirmed Letter of Credit)

மேற்கூறப்பட்ட நாணயக் கடிதத்தின் கீழ் ஒரு ஏற்றுமதியாளன் மேலதிக பாதுகாப்பை எதிர்பார்ப்பார். இந்த மேலதிக உத்தரவாதம் ஏற்றுமதி நாட்டிலுள்ள வங்கியால் இஸ்திரம் பெற்ற வெளிநாட்டு வங்கியால் வழங்கப்படுவது விரும்பத்தக்கதாகும். இத்தகைய வங்கிகளால் உறுதிப்படுத்தும் பொழுது இந்நாணயக்கடிதம் உறுதி செய்யப்பட்ட மீளப்பெற முடியாத அல்லது இரத்துச் செய்ய முடியாத நாணயக் கடிதமாகின்றது. இதுவே மிகவும் பாதுகாப்பான கொடுப்பனவு முறையாகும்.

**சுழலும் நாணயக்கடிதம்** (Revolving Letter of Credit)

நாணயக்கடிதத்தில் குறிப்பிடப்பட்ட காலம் முடிவடையும் திகதி (Expird Date) யினால் மட்டுப்படுத்தப்பட்ட காலத்திற்குள் கப்பலில் பொருட்களை அனுப்புவதற்குச் சுழலும் நாணயக் கடிதம் தொடர்ச்சியான வசதிகளை வழங்குகின்றது. காரணம் என்ன வெனில் ஏற்றுமதியாளரின் பெயருக்கு குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்குள் அதே போன்ற நாணயக்கடிதங்கள் திறக்கப்படுவதின் தேவைகளைத் தடுப்பதற்கே இம்முறை பயன் படுத்தப்படுகிறது. காலத்தையும் தொகையையும் பொறுத்தமட்டில் இந்நாணயக் கடிதத்தை பின்வருமாறு புதுப்பிக்க முடியும்.

அ) ஓரே தடவையில் அமெரிக்க டொலர் பத்தாயிரத்திக்கு கடன்பெற முடியும். இந்தக் கடனைப் பெற்று முடிந்தவுடனும் உடனடியாக அதே அளவு பணத்தை மீண்டும் கடனாகப் பெறமுடியும். ஒவ்வொரு நாளும் எவ்வளவு பெறமுடியும் என்பதைத் தவிர இந்தப் பத்தாயிரம் டொலர் முடிவதற்குள் எத்தனை தரம் வங்கியிலிருந்து எடுக்கலாம் என்பது பற்றி எந்த விதக் கட்டுப்பாடும் இல்லை.

ஆ) பத்தாயிரம் டொலர் வரை மாதமொன்றுக்குக் கடன் பெற முடியும். முதல் மாதத்தில் ஏதாவது பணம் வங்கியிலிருந்து பெற்றிருந்தாலும் அடுத்த மாதம் வழமை போல் அந்தப் பத்தாயிரம் டொலர் கடனைப் பெறக்கூடியதாக இருக்கும்.

**சிவப்பு வாசக நாணயக்கடிதம்** (Red Clanse Letter of Credit)

ஏற்றுமதியாளருக்கு, கடனைப் பெற்றுக்கொண்டதும் அந்த தொகையையோ அல்லது அதில் ஒரு பகுதியையோ வழங்கும்படி அறிவித்தல் கொடுக்கும் வங்கிக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் வழமையாக சிவப்பு மையினால் அச்சடிக்கப்பெற்ற விசேட வாசகத்தைக் கொண்டதாய் இக்கடிதம் இருக்கும்.

சிவப்பு வாசகக்கடன் என அழைக்கப்படுவது, ஏனெனில் இந்த வாசகம் இந்தக் கடனைப் பற்றிய தனிக் கவனத்தை ஈர்ப்பதற்காகச் சிவப்பு மையினால் எழுதப்பட்ட மையினாலாகும். இவ்வகையான கடன் ஏற்றுமதியாளருக்கு உதவியாக இருக்கும். ஏனெனில் ஏலத்தில் அல்லது விற்பனைகளில் பொருட்களை வாங்கும் பொழுது பணத்தை உடனடியாகச் செலுத்தக் கூடியாக இருக்கும்.

**மாற்றப்படக்கூடிய நாணயக்கடிதம்** (Transferable Letter of Credit)

மாற்றப்படக்கூடிய நாணயக்கடிதம் ஒன்று தெளிவான ஏற்பாட்டைக் கொண் டதாக இருக்கும். அதாவது கடனுக்குரிய நன்மைகளை முதலாவது நன்மை பெறுபவர் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இரண்டாவது நன்மை பெறுபவருக்கு அல்லது பெறுபவர்களுக்கு மாற்றக்கூடியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னுக்குப்பின்னான நாணயக்கடிதம் (Back to Back Letter of Credit)

பின்னுக்குப்பின்னான நாணயக்கடிதம் என்பது இரண்டு வெவ்வேறான நாணயக் கடிதங்களை உள்ளடக்கிய ஒரு ஒழுங்கு முறையாகும். இந்நாணயக்கடிதம் முதலாவது நன்மை பெறுபவர் ஒப்பந்தத்திற்கேற்பத் தனது பொருட்களையோ அல்லது சேவை களையோ அளிக்க முடியாத நிலையில் இன்னுமொரு வியாபாரியின் பொருளையோ அல்லது சேவையையோ அதற்குப் பதிலாக அளிக்க விரும்பும் போதே இந்நாணயக் கடிதம் வழங்கப்படுகின்றது.

இவ்வாறு இரண்டு நாணயக்கடிதங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஒன்று பொருளை வாங்குபவர் முதலாவது பெறுபவருக்காகவும் பின்னுக்குப்பின்னான நாண யக்கடிதத்தை முதலாவது நன்மை பெறுபவர் இரண்டாவது நன்மை பெறுபவருக்கு அல்லது பொருட்களை வினியோகிப்பவருக்கும் வழங்குவார்.

முதல் கடனைப் பின்பற்றியும் அதன் அடிப்படையிலும் உள்ள மூல நாண யக்கடிதத்தில் பொருட்களையும் ஆவணங்களையும் பெறுவதற்காக தனது வழங்குபவ ரின் பெயருக்கு மூலக்கடனின் நன்மை பெறுபவராக விற்பனை செய்பவரினால் நிறுவப் பட்டதே இந்த இரண்டாவது நாணயக்கடிதமான பின்னுக்குப்பின்னான நாணயக் கடிதம் ஆகும்.

பின்னுக்குப்பின்னான நாணயக் கடிதத்தை வங்கி வழங்குவதற்கு இணங்கும் பொழுது அங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் நிபந்தனைகள் அத்தனையும் குறித்த பெறு மதிக்கு இருந்தாலன்றி சரியாக மூல நாணயக் கடிதத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனை களுடன் ஒத்திருக்க வேண்டும்.

பின்னுக்குப்பின்னான நாணயக்கடிதத்தை வழங்கும் வங்கிக்கு உறுதிப்படுத் தும் ஆவணங்களைக் கொடுக்கும் பொழுது தீர்வு ஏற்படுத்தப்படும். பின்பு மூலக் கடனைப் பெற்ற நன்மை பெறுபவர் உடனடியாக அனுப்பும் பொருட்பட்டியலையும் உடனுண்டியலையும் தேவை ஏற்படும் பட்சத்தில் மாற்றும்படி கேட்கப்படுவார். மிகுதி யான ஆவணங்களோடு ஒத்துப்போவதற்காக மூலக்கடனின் அடிப்படையில் உடனடி யாக தீர்த்து வைப்பதற்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்படும். பின்னுக்கு பின்னான நாண யக்கடிதத்தின் நன்மை பெறுபவர் என்ற ரீதியில் அவரினால் வழங்கப்பட்ட பொருட் களுக்குப் பணம் வழங்கப்படும் பொழுது வித்தியாசமே வழங்கப்படும்.

நாணயக்கடிதத்தை பெறும் ஏற்றுமதியாளர்கள் தம்மால் நிறைவேற்ற முடி யாத நிபந்தனைகள் ஏதாவது நாணயக்கடிதத்தில் உண்டோ என நாணயக்கடிதத்தை நன்கு வாசித்துப் பார்க்க வேண்டும். அப்படியான சந்தர்ப்பங்களில் ஏற்றுமதியாளர் ''பக்ஸ்'' மூலமோ அல்லது ''ரெலக்ஸ்'' மூலமோ பொருட்களை வாங்குபவருடன் தொடர்பு கொள்ள வேண்டும். தொடர்பு கொண்டு நாணயக்கடிதத்தை ஏற்ற வகையில் திருத்தம் செய்யும்படி அவரது வங்கியைக் கேட்கும்படி அவருக்கு அறிவுறுத்தல் செய்ய வேண்டும்.

## ஆவணங்கள் சம்பந்தமான கடன்களைப் பொறுத்தவரை ஒரு சீரான ஒழுங்கு முறைகள்

நாணயக்கடிதங்களைக் கொண்டு ஏற்படுத்தப்படும் வியாபாரத்திற்கு பொது வாக பல நாடுகளைச் சேர்ந்த பலபேர் ஈடுபாடுகள் கொள்வார். எனவே அந்தந்த நாடுகளிலுள்ள சட்டங்களும் வழக்கங்களும் பெருமளவில் மாறுபடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கடனைப் பொறுத்த வரையில் பாவிக்கப்பட்ட சொற் பிரயோகங்கள் பற்றி யாவரும் ஒரு விதமான விளக்கத்தையே கொண்டிருப்பர்.

நியமமான விதிகள் இல்லாதவிடத்தும் நாணயக்கடிதத்தின் நிபந்தனைகள் பற்றிய விளக்கத்தில் வித்தியாசம் ஏற்படக்கூடிய நிலை பெரிதாக இருக்கும் பொழுதும் விளக்கம் கொடுப்பதில் ஏற்படும் பிரச்சினை வேலையில் பெரிய சிக்கல்களை ஏற்படுத்தும்.

நாணயக்கடிதத்தில் உள்ள நிபந்தனைகளில் ஏற்படக்கூடிய தெளிவின்மையும் வித்தியாசங்களையும் குறைப்பதன் பொருட்டு 1933 ஆம் ஆண்டின் முற்பகுதியிலேயே சர்வதேச வர்த்தகக்கூடம் (Chamer of Commerce) கடன் ஆவணங்களுக்குரிய சீரான பழக்கங்களையும் செய்முறைகளையும் ஏற்படுத்தியது. வர்த்தக போக்குவரத்து வியாபார பழக்கங்களிலும் செய்முறைகளிலும் ஏற்பட்ட அபிவிருத்திகளோடு சரிநிகராக நிற்பதற்கு இப்பிரச்சனைகள் காலத்துக்குக்காலம் மீளாய்வு செய்யப்பட்டது. இறுதியாக 1984 இல் மீளாய்வு செய்யப்பட்ட பிரசுரத்தின் இலக்கம் 400 ஆகும். அனேகமான வங்கிகளால் வழங்கப்படும் நாணயக்கடிதத்தில் காணப்படும் நிபந்தனைகள்யாவும் இந்த பிரசுர இலக்கம் 400 க்கு கீழேயே வழங்கப்படுகின்றன.

உசாத்துணை நூல்
'எக்ஸ்போ, — 92 — இலங்கை வங்கி வெளியீடு


வாழ்த்துகின்றோம்

மங்கள வைபவங்களுக்கேற்ப
கூறைச் சேலைகள்
பட்டு வேட்டி
கோவில் பட்டுபுடைவைகள்
மற்றும் பல
புடைவைத் தினுசுகளையும்
உங்கள் எண்ணம் போல
தெரிவு செய்ய ஏற்றதோர்
எழில் கூடம்

**அஜந்தாஸ்**

54, பெரியகடை
யாழ்ப்பாணம்.

வணிக மன்றம்
வளமுடன் திகழ்க!

நிதான விலை சிறந்த ரகம்
திருமணம் மற்றும் வைபவங்களுக்கு
காஞ்சிபுரம், தஞ்சூர், மணிப்புரி,
நைலெக்ஸ், பெனாரிஸ்,
மைசூர்சில்க், வூலிசாறி வகைகள்,
பட்டு வேட்டிகள், சேட்டிங் சூட்டிங்
மற்றும்
ஏனைய புடவைத் தினுசுகளையும்
தெரிவு செய்ய
சிறந்த ஸ்தாபனம்

**ஜி. எஸ். லிங்கநாதன் அன்கோ**

13, 14 பெரியகடை
யாழ்ப்பாணம்.

தொகுப்பு – வேஜினி சில்வெஸ்ரர்
ஆண்டு — 13 வர்த்தகம்

# பரீட்சைக்கு ஆயத்தமாகும் மாணவர்களுக்கு

"அருட்திரு. எட்வின் வசந்தராஜ் அவர்களின் கருத்தரங்கு வாயிலாகப் பெறப்பட்டவை"

உயர்தர, பரீட்சையை நெருங்கிக் கொண்டிருக்கும் மாணவர்களே! உங்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம். நீங்கள் பரீட்சையை வெற்றிகரமாக எதிர்கொள்ள உங்களுக்கு உதவுவதையிட்டு நான் பெருமகிழ்வு அடைகின்றேன்,

"யான் பெற்ற இன்பம்
பெறுக இவ்வையகம்" — எனும் குறளுக்கு

இணங்கி, எமது பாடசாலையில் 10-3-94 அன்று நடைபெற்ற கருத்தரங்கில் நான் பெற்ற பயனை வணிகத்தளிர் மூலமாக உங்களுக்கும் அளித்துப் பகிர்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கல்வி என்பது என்ன? அதை நாம் எவ்வாறு கற்கின்றோம்? அது எமக்கு சுகமாக இருக்கின்றதா? எனப் பலகேள்விகளை நாம் கேட்டால் எம்மனைவரிடம் இருந்தும் வரும் பதில்கள் ஒரு நிலையில்லாத அர்த்தமற்ற விடைகளாகும், உண்மையிலே கல்வி ஒரு சுகம் நிறைந்தது. இனிமையானது. ஆனால் நாம் அதனை சுமையாகக் கருதுகின்றோம், ஒரு பாடத்திற்கு பள்ளியில் ஏழெட்டுக் கொப்பிகளையும் ரியூசனில் படித்த ஏழெட்டுக் கொப்பிகளையும் அடுக்கி வைத்துவிட்டு அதனைப்பார்த்து பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கின்றோம். எமது இன்றைய நிலையில் பரீட்சையின் பெறுபேறுகள் எம் எதிர்கால வாழ்க்கையைச் சோதிக்கும் சோதனைகளாகி விடுகின்றன. இதன் காரணமாக எம்முள்ளத்தில்.

| | | |
|---|---|---|
| பதற்றம் | — | ANXIETY |
| மனவழுத்தம் | — | DEPRESSION |
| மனஇறுக்கம் | — | STRESS |

போன்ற பல்வேறு உளநோய்கள் ஏற்படுகின்றன. இவை எம் பரீட்சை பெறுபேறுகளை மட்டுமன்றி எம் வாழ்வையே கேள்விக்குறியாக்கிவிடும். இத்தகைய உளவியற் பிரச்சினைகளையும் பிறதாக்கங்களையும் வெற்றி கொண்டு பரீட்சையை எவ்வாறு வெற்றியோடு எதிர்நோக்கலாம்.

முதலில் நாம் கற்கும்போது மனதை ஒருமுகப்படுத்தவேண்டும். அதற்கு எமக்கு 2 தேவைகள் உண்டு. அவை.

1. உள்ளரங்கத் தேவை.
2. வெளியரங்கத் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெளியரங்கத் தேவையில்**

I. நிரந்தர இடம்
II. தேவையான பொருட்கள்.
III. போதுமான வெளிச்சம்.
IV. சத்தமற்ற அமைதியான இடம்

என்பன மிகவும் அவசியமாகின்றன. அடிக்கடி இடத்தை மாற்றாமல் ஒரேயிடத்திலிருந்து படிக்கவேண்டும், படிக்கச் செல்லும் போது அதற்குத் தேவையான பொருட்களை எடுத்துச் சென்றுவிடவேண்டும். அடிக்கடி தேடித்திரிதலும் எழும்பிச் செல்வதும் எம் மனதைக் குழப்பி விடுகின்றன. அடுத்ததாகபோதுமான வெளிச்சம் நாம் படிக்கும் இடத்தில் இருக்க வேண்டும். அத்துடன் அதுஅமைதியான இடமாகவும் இருப்பது மிகவும் சிறந்தது. இத்தகைய வெளியரங்கத் தேவைகளோடு,

உள்ளரங்கத் தேவைகளையும் நிறைவேற்ற வேண்டும். அவையாவன.

I. மனதில் முடிவெடுத்தல்
II. பகற்கனவு காணாதிருத்தல்
III. கவலையோடு படிக்கக்கூடாது
IV. படிப்பு ஒரு அரிய சந்தர்ப்பம் என்ற உணர்வு
V. வெளிச்சத்தங்களை வெல்லும் மனத்திறன்
VI. பசிக்கின்ற நேரம் படிக்காது விடல்.
VII. தூங்குகின்ற நேரத்தில் படிக்காது விடல்
VIII. பொழுது போக்கு
IX. குறிப்பெடுத்துப் படித்தல் என்பனவாகும்

இவை மூலம் நாம் எம் மனதை ஒருமுகப்படுத்திய பின்பு கற்றல் நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும். கல்வியின் வெற்றியானது எமது மதிநுட்பத்தினாலும் விடா முயற்சியாலுமல்ல, நாம் பயன்படுத்தும் நுட்பமுறையில் தங்கியுள்ளது. இதில் பல முறைகள் உண்டு. அதில் உளவியலாளராலும் பெரியோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு தரப்பட்ட முறை PQRST முறையாகும். இதில்

1. P = PREVIEW மேலோட்ட வாசிப்பு

இதில் முழு பாடப்பரப்பும் மேலோட்டமாக வாசிக்கப்படும். பொருளடக்கம் பிரதான தலையங்கம், உபதலையங்கங்கள், படங்கள் என்பவற்றைப் பார்ப்பதன் மூலம் பிரதான எண்ணக்கருக்களைப் பெறமுடியும்.

2. Q = QUESTION வினவி வாசித்தல்.

மேலோட்டமாக வாசித்துக் கொண்டு செல்கையில் விடைகான வேண்டிய வினாக்கள் வடிவம் பெறும். குறிப்பாக பாடத்தை பாடத் தலையங்கம், உபதலையங்கங்களையே விடைகாண வேண்டிய வினாக்களாக உருவாக்க முடியும்.

3. R = READ பொருள் விளங்கி வாசித்தல்.

மனதில் எழுந்த வினாக்களுக்கு விடைகாண முயலுகையில் பாடப் பரப்பை விளங்கி வாசிக்க வேண்டும். அத்துடன் முன்பு கற்ற விடயங்களுடன் தொடர்புபடுத்த வேண்டும், பாடப்பரப்பை முற்றாக வாசித்து அதில் சொல்லப்பட்ட பிரதான கருத்துகள், அவற்றின் தொடர்புகள் பற்றிய சரியான படத்தை உருவாக்கும் வரைக்கும் குறிப்பெடுப்பதைப் பிற்போடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. S = SELF RECITATION தனக்குத் தானே மீட்டல்.

பாடப்பரப்பை முற்றாக வாசித்த பின் கற்ற விடயங்களை தனக்குத் தானே சொல்வதன் மூலம் பிரதான விடயங்கள் மனதில் பதிந்துள்ளனவா எனப் பார்க்க முடியும். இது பாடங்களை மனதில் ஆழமாகப் பதிக்கவும் உதவும்.

5. T = TEST பரீட்சை நிலை.

பாட அலகை முழுமையாக கற்றதன் பின்னர் கற்ற விடயங்களை ஞாபகப் படுத்தவும் வேறுபட்ட விடயங்கள் ஒன்றுடனொன்று எவ்வாறு தொடர்புபட்டுள்ளன எனவறியவும் இப்பரீட்சை நிலை உதவும்.

இதன் (PQRST) மூலம் பரீட்சைக்கான பாடத்தைப் படித்த பின்னர் பரீட்சைக்கு ஆயத்தம் செய்யவேண்டும்.

**1) நேர அட்டவணை**

**I. பரீட்சைக்கு ஆயத்தம் செய்வதற்குரிய காலத்தை நேர அட்டவணைக்குட் படுத்தல்.**

பரீட்சைக்குப் படிக்க வேண்டிய பாடங்களை பாடத்திட்டம் மூலம் அறிந்து ஒவ்வொரு பாடத்திற்கும் எவ்வளவு நேரம் ஒதுக்க வேண்டும் எனவும் ஒவ்வொரு பாடத்திற்கும் பயன்படுத்தும் குறிப்புகள், புத்தகங்கள் என்ப வற்றை பயன்படுத்துவதற்கான காலத்தையும் கணிக்க வேண்டும்.

**II. பரீட்சை நேர அட்டவணை.**

என்ன பாடங்கள் என்ன நாளில் வருகின்றன என்ற அட்டவணை.

**2) மீட்டல் (RIVISION)**

மீட்டலானது மாணவனின் பதட்டத்தைத் தவிர்க்க நிச்சயம் உதவும்.
இதுவும் 4 படிமுறை கொண்டது.

I. வழமையான கற்றல்.
II. ஆரம்ப மீட்டல் — கற்றதை அன்றோ அல்லது கற்று ஒரு சில தினங்களில் மீட்டல்
III. இடைக்கால மீட்டல் — கற்றதை ஒரு சில மாதங்களின் பின் மீட்டல்.
IV. இறுதி மீட்டல் — பரீட்சைக்கு ஒரு சில தினம் அல்லது வாரங் களுக்கு முன்னர் மீட்டல்.

இவ்வாறு படிமுறையாக மீட்கப்பட்டது மறக்கப்பட மாட்டாது.

**3) அநாவசியப் பதட்டத்தைத் தவிர்த்தல்.**

இதனைத் தவிர்க்க தனக்குள் மனத்துணிவை வருவித்தல். உடற்பயிற்சி செய்தல், ஓய்வெடுத்தல், தியானம் செய்தல் என்பவற்றை மேற்கொள்ளலாம்,

**4) பழைய மாதிரி வினாத்தாள்களுக்கு விடையளித்தல்**

இதன் மூலம் நாம் பரீட்சை நிபந்தனைகளுக்கேற்ப விடையளிக்கப் பழகமுடியும். வினாக்கள் சுலபமானதாக இருந்தாலும் விடையெழுதப் பழகவேண்டும்,

**5) ஓய்வெடுத்தல்**

பரீட்சை ஆயத்தத்தை மேற்கொண்ட மாணவர்களுக்கு பரீட்சையை எதிர்கொள்ளல் ஒரு முக்கியமான செயற்பாடாகும். இரண்டரை வருடங்கள் படித்தவற்றை மூன்று மணித்தியலாத்துள் எம் பரீட்சை வினாத்தாளில் கொட்டி விடப்போகின்றோம். இதற்கு உதவும் நுட்பங்கள் வருமாறு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. பரீட்சை மண்டபத்தை நேரத்திற்கு சென்றடைதல். இது அமைதியாகவும் தளர்ந்த மனநிலையுடனும் (RELAXED) பரீட்சையை எதிர்கொள்ள உதவும்,

ii. தேவையற்ற பயத்தை தவிர்த்து நான் பரீட்சையை நன்றாக செய்வேனென நினைத்து எமக்கு நாமே உறுதி கூறிக் கொள்ளல் (AUTO SUGGESTION) வேண்டும்,

iii· புதியவற்றைப் படிக்காதே.

iv. படித்ததை ஞாபகப்படுத்து.

v. தேவையற்ற எண்ணங்களைத் தவிர்

vi. வினாத்தாளை கவனமாக முழுதாக ஒரு முறை வாசி. இது தெரிவிற்குரிய கேள்விகளை (CHOICE) தெரிந்தெடுத்து சிறப்பாக விடையளிக்க உதவும்.

vii. நேரத்தை, செய்யப்போகும் கேள்விகளுக்களவாக பகிர்ந்து கொள்ளல் வேண்டும். இது கட்டுரை வினாக்கள், கட்டமைப்பு வினாக்கள் (STRUCTURED) என்பவற்றைப் பொறுத்தவரையில் இது அவசியம்.

viii. கட்டுரை வினாக்களுக்கு விடையளிக்கும்போது நீண்டதாக எழுதாமல் உபதலையங்கம், பிரிவுகளாகப் பிரித்து எழுதுவது விடையெழுத சுலபத்தையும் பரீட்சகரின் கவனத்தைக் கவரக்கூடியதாகவும் இருக்கும்.

ix. தெளிவான கையெழுத்தில் எழுத வேண்டும்,

x, சாதாரண மொழிநடையில் எழுத வேண்டும்.

xi. விடையெழுதும்போது முதலில் நன்றாகத் தெரிந்த கேள்விக்கும் இடையில் தெரியாத கேள்விக்கும் பின்னர் தெரிந்த கேள்விக்குமாக விடையெழுத வேண்டும். இது உங்கள் வினாத்தாள் பற்றிய நல்லபிப்பிராயத்தை பரீட்சகரிடம் ஏற்படுத்தும்·

xii· விடையெழுத வெறும் ஊகங்களைப் பிரயோகிக்கக் கூடாது. இது தவறான விடைகளாக மாறுவதோடு புள்ளிகளும் கழிக்கப்படும்.

xiii. தனியொரு வினாவிற்கு விடையளிப்பதைக் காட்டிலும் நேரம் குறைவாக உள்ள நிலமையில் இரு வினாக்களுக்கு தெரிந்த விடையாக குறைவாக வாவது எழுதுதல் நலம். இது. கூடிய புள்ளியைப் பெற்றுத்தரும்.

xiv. விடைக்கான அனைத்துப் பிரதான குறிப்பையும் விடையில் சேர்த்தலால் பரீட்சகருக்கு, உங்களுக்குப் பாடப்பரப்பில் தெளிவான அறிவிருப்பதை உணர்த்தும்.

xv. தெரியாத வினாக்கள் சில இருப்பின் அவற்றை விட்டுவிட்டு முதலில் உங்களுக்குத் தெரிந்தவற்றை எழுதி பின் அவற்றை எழுதலாம். தெரியாத கேள்விகளை எண்ணிக் குழப்பமடையாது தொடர்ந்து ஏனைய கேள்விகளுக்கு விடையளிக்கக் கூடிய மனோதிடனை வளர்க்க வேண்டும்.

xvi. விடையெழுதி முடித்த பின்னர் அனைத்து விடைகளையும் மீண்டும் சரி பார்த்து அவதானிக்க வேண்டும். இதனால் கவனயீனப் பிழைகள் கண்டு பிடிக்கப்படும்.

xvii. சுட்டெண் திகதி முதலியன கவனிக்கப்பட்டு ஒழுங்காக விடைத்தாள்கள் அடுக்கப்பட்டு கட்டப்பட்டு பரீட்சகரிடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

இவற்றின் மூலம் நாம் திறமையாக பரீட்சையை வெற்றியுடன் எதிர்கொண்டு வீடு திரும்பலாம். இவை எம் மனத்திற்கு எமது பெறுபேறுகளின் பெயரில் நம்பிக்கையையும், உறுதியையும் தருகின்றன. எனவே நாமும் இம்முறைகளைப் பின்பற்றி பரீட்சையை எதிர்கொண்டு சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பாடசாலைக்கும் எம்மைப் பெற்றவர்களுக்கும் பெருமை சேர்ப்போம். எம் எதிர்காலத்தை வளமாக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி. ரஞ்சினி அச்சுதம்பிள்ளை
(Sp. Trained, B. Com, Dip. in Edu.)
ஆசிரியர்
யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்

# வர்த்தகத்துறைப்பாட நெறியைக் கற்றோர் பெற்றுள்ள தொழில் வாய்ப்புக்கள் - யாழ் நகரில் ஓர் ஆய்வு

மாறும் பொருளாதார மாற்றத்திற்கேற்ப மனிதன் தன்னை மாற்றி அமைத்துக் கொள்வது மிக இன்றியமையாததாகும். இன்றைய சமூக மட்டத்தில் பல்வேறு தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் பல காரணிகள் முன் நிற்கின்றன. அந்த வகையில் போக்குவரத்துத்துறை மிக முக்கியமானதொன்றாகும். சர்வதேச அடிப்படையில் போக்குவரத்து, தொழில் நுட்பத்திறன் வாய்ந்ததாக அபிவிருத்தி அடைந்த போதிலும் துர்அதிஷ்டவசமாக இலங்கையின் வட பிரதேசத்தை பொறுத்தளவில் வான் வழிப் போக்குவரத்தும், ஒழுங்கான தரை வழிப் போக்குவரத்தும் இடை நிறுத்தப்பட்ட நிலையிலும் மட்டுப்படுத்தப்பட்ட நீர் வழிப் போக்குவரத்தையும் மையமாக வைத்து இங்கு மேற்கொள்ளப்படுகின்ற தொழிற்றுறை நடவடிக்கைகள் பற்றியும், அந் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனங்களிலேயே வர்த்தகம், கணக்கியல் கற்றோர் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றனர் என்பதையும் ஆய்வு செய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## 1. வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன லிமிட்டெட் (Insurance Corporation)

இக் கூட்டுத்தாபனம் 13 பிராந்திய அலுவலகங்கள் உட்பட மொத்தம் 37 அலுவலகங்களைக் கொண்டு விளங்குகின்றது. இங்கு பணிபுரியும் ஊழியர்களில் மொத்த எண்ணிக்கை 3845 ஆகும். இங்கு வர்த்தகம், கணக்கியல் பாட அறிவுடையவர்கள் ஒரு விகிதமாகும்.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாண பிரதேச அலுவலகத்தை எடுத்துக் கொண்டால் அங்கு பிராந்திய முகாமையாளர், உதவி பிராந்திய முகாமையாளர், கணக்காளர், நிர்வாக அத்தியட்சகர் போன்றோரும், மற்றும் விகிதர் தரம் ஒன்றிலிருந்து தரம் மூன்று வரை எடுத்தவர்களும், சிற்றூழியர்களும் உட்பட மொத்தம் 36 பேர் இங்கு கடமை புரிகின்றனர். இங்கு கடமை புரியும் ஊழியர்களில் பதவி உயர்வுக்கான பரீட்சைகள் யாவும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினாலேயே நடாத்தப்படுகின்றன. பரீட்சைக்குரிய பாடங்கள்.

1. காப்புறுதி
2. அலுவலக நிர்வாகம் (வர்த்தகம், கணக்கியல் பாடங்கள் உட்பட)
3. பொது அறிவு

இங்குள்ள பணியாளர்கள் க. பொ. த. சாதாரண பரீட்சையில் சித்தியடைந்தவர்கள். பட்டையக் காப்புறுதி நிறுவனத்தால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தி எய்தினால் ஏ. சி. ஐ. ஐ தராதரப்பத்திரம் வழங்கப்படும். இப் பரீட்சையில் சித்தியடைந்தால் எ. சி. வ் ஐ. ஐ பரீட்சை எடுக்க முடியும். இது காப்புறுதியில் ஒரு துறைக்குரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டையக் காப்புறுதிப் பரீட்சையாகும். காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் பணி புரியும் ஊழியர்களுக்கான சம்பளப் பட்டியலை எடுத்துக் கொண்டால் பிரதேச முகாமையாளருக்கு 9000/- தொடக்கம் சிற்றூழியர்களுக்கு 2000/- வரை பல்வேறுபட்ட சம்பளம் வழங்கப்படுகிறது. மேலும் இங்கு வேலை செய்யும் பணியாளர்களுக்கு மருத்துவ வசதி உதவித் தொகைகளும் வழங்கப்படுகின்றது.

வர்த்தகம், கணக்கியல் பாடத்தின் பங்களிப்பை நோக்குகின்ற போது இப் பாடம் கற்றவர்களை முக்கியத்துவப்படுத்தி வேலைக்கு அமர்த்தாவிட்டாலும் வேலை மேற்கொள்கின்ற போதும் பதவி உயர்வுகளைப் பெறுகின்ற போதும் வர்த்தகம், கணக்கியல் அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பது கவனத்தில் கொள்ள வேண்டியதாகின்றது.

## 2. இலங்கை வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி (Commercial Bank)

இவ் வங்கியின் தலைமை அலுவலகம் இல 21, பிறிஸ்ரல் வீதி, கொழும்பு-1 இல் அமைந்துள்ளது. மொத்தம் 29 கிளை நிறுவனங்களுக்கு தலைமை நிறுவனமாக அமைந்துள்ளது. இங்கு தொழில் புரியும் ஊழியர்களது எண்ணிக்கை 2500 ஆகும். இவர்களில் ஏறக்குறைய 75 வீதமானவர்கள் வர்த்தக கணக்கியல் பாட அறிவுடையவராவார்.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் கிளையினை நோக்குவோமாயின் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை மொத்தம் 49 ஆகும். இந் நிறுவனத்தில் வேலை செய்வதற்கு அடிப்படைத் தகுதி க. பொ. த. சாதாரண பரீட்சையில் 5 பாடங்களுக்கு திறமை சித்தியுடன் கணிதம், தமிழ் உட்பட 8 பாடங்களும் சித்தியடைவதுடன் க. பொ. த. உயர்தரத்தில் 4 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இங்கு பணிபுரியும் 10 பேர் க. பொ. த. உயர்தரத்தில் வர்த்தக பாடநெறியை கற்றவர்களாவார்.

## 3. இலங்கை வங்கி (Bank of Ceylon)

இலங்கை வங்கியின் தலைமை அலுவலகம் இல-5, ஜனாதிபதி மாவத்தை கொழும்பு-1 இல் இயங்குகின்றது. இதன் கிளை அலுவலங்கள் நாடு பூராகவும் 440 உள்ளது. இங்கு மொத்தமாக 10300 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்.

ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கிக் கிளையை எடுத்துக் எடுத்துக்கொண்டால் இங்கு 100 பேர் பணியாளர்களாக கடமையாற்றுகின்றனர். இங்கு தொழில் புரிவோருக்கு அடிப்படைத் தகமை க. பொ. த. சாதாரண பரீட்சையில் 8 பாடங்களில் ஆங்கிலம், கணிதம் உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்தி இருத்தல் வேண்டும். இலங்கை வங்கியாளர் நிலையத்தினாலும் ஏ. ஐ. பி. (Associated Institute of Bankers London) பரீட்சை நடாத்தப்படுகின்றது. ஏ. ஐ. பி லண்டன் பரீட்சையில் பாடங்கள் பின்வருமாறு,

1. ஆங்கிலம்
2. ஆங்கில சட்ட மூலகம்
3. கணக்கியல்
4. பொருளாதாரப் புவியியல்
5. பொருளியல்
6. வங்கிச் சட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. நாணய கோட்பாடும் பயிற்சியும்
8. வங்கி நடைமுறைகள்
9. உயர்தரக் கணக்கியல்
10. சர்வதேச வர்த்தக நிதி

ஏ. ஐ. பி இலங்கை வங்கியாளர் நிலையம் – பகுதி – 1

1. கணக்குப்பதிவும் கணக்கியலும்
2. தமிழ்
3. பொருளியல்
4. வங்கித் தொழில் மூலங்கள்
5. இலங்கை சட்டத்தின் பொதுக் கோட்பாடு

பகுதி – 2

1. வங்கித் தொழில் சட்டம்
2. நாணயகோட்பாடும் பயிற்சியும்
3. உயர்நிலைக் கணக்கியல்

இங்கு அடிப்படைத் தகுதியில் வர்த்தகம், கணக்கியல் இல்லாத போதும் கூட வங்கியாளர் பரீட்சைக்கு இப்பாடங்கள் முக்கியமாகக் கொள்ளப்படுகின்றது. எனவே பாடசாலைகளில் உயர்தர சாதாரண தரங்களில் வர்த்தகம் கணக்கியல் கற்ற மாணவர்கள் இத் தொழில் துறைக்கு தெரிவு செய்திருப்பின் கற்ற கல்வியுடன் வேலையை இலகுவாக செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கும்.

## 4. மக்கள் வங்கி (People's Bank)

மக்கள் வங்கி தலைமை அலுவலகம் இல. 75, சேர் சிற்றம்பலம் ஏகாடினியா மாவத்தை, கொழும்பு - 2 இல் அமைந்துள்ளது. இது இலங்கை பூராகவும் 334 கிளைகளைக் கொண்டு இயங்குகின்றது.

பிரதான வீதி யாழ்ப்பாணத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளை நிறுவனத்தை நோக்கும் போது இங்கு மொத்தம் 22 பேர் பணிபுரிகின்றார்கள். இங்கு பணிபுரியும் ஊழியர்களில் அடிப்படைத்தராதரம் க. பொ. த சாதாரணம் 8 பாடங்களில் 5 பாடங்களுக்கு ஒரே தடவையில் திறமை சித்தி கணிதமும் மொழியும் உட்பட இருத்தல் வேண்டும்.

இவ் வங்கியைப் பொறுத்த மட்டில் வர்த்தகம், கணக்கியல் என்ற பாடங்களை ஏற்கனவே பாடசாலையில் கற்ற மாணவர்களாக இருப்பின் இலங்கை வங்கியாளர் நிலையத்தால் நடாத்தப்படும் பரீட்சைகளை இலகுவில் சித்தியடையக் கூடிய ஒரு வாய்ப்பையும் இதன் மூலம் அவர்கள பதவி உயர்வுகளையும் இலகுவில் அடையக் கூடிய வாய்ப்பையும் பெறுவர்.

## 5. பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (Palm Product Development co-operative Society)

இதன் தலைமை அலுவலகம் இலக்கம் 572, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ளது. கிட்டத்தட்ட 1000 ஊழியர்கள் வரை இச் சங்கத்தில் பணிபுரிகின்றனர். யாழ் குடாநாட்டில் இயங்கும் சங்கங்களில் மொத்த ஊழியர்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60 வீதமானவர்கள் வர்த்தகம், கணக்கியல் அறிவு உடையவர்கள். இங்குள்ள ஊழியர்களின் அடிப்படைத் தகமை க. பொ. த. உயர்தரமாகும். இச் சங்கத்தின் பதவி உயர்வுப் பாடங்கள்.

1. கணக்கியல்
2. கூட்டுறவு
3. முகாமையியல்
4. பொருளியல்
5. சமூகவியல்
6. ஆங்கிலம்
7. கணக்காய்வியல்
8. சட்டவியல்

இங்கு பணியாற்றும் அலுவலர்களில் 5 பேர் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் வர்த்தக பாடங்களில் சித்தியடைந்தவர்களாவர். கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரி நடாத்தும் பரீட்சைகள் வர்த்தகம் கணக்கியல் கற்ற மாணவர்களுக்கு இலகுவானதாக அமையும்.

## 6. சாமுவேல் சன்ஸ் அன் கம்பனி லிமிட்டெட் (Samuel Sons and Company Ltd)

இந் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் இல 164, மெசன்சர் வீதி, கொழும்பு 12 இல் அமைந்துள்ளது. இங்கு 500 பேர் வேலை செய்கின்றனர். வர்த்தகம், கணக்கியல் கற்ற சி ஏ. சி. ஐ எம். ஏ தராதரமுடையவர்கள் 13 பேர் உள்ளனர். மொத்தமாக 10 வீதமானவர்கள் வர்த்தக கணக்கியல் அறிவுடையவர்களாவர்.

இந் நிறுவனம் ஒரு பொது கம்பனியானியாகும். 500 க்கு மேற்பட்ட பொருட்களை விற்பனை செய்யும் ஒரு கம்பனியாக விளங்குகிறது. இங்கு வேலை செய்பவர்களுக்கான அடிப்படைத் தகமை க. பொ. த. உயர்தரமாகும்.

## 7. இராஜநாதன் இரவீந்திர வர்மன் அன் கம்பனி – கணக்காய்வு நிறுவனம் (Rajanathan Ravindra Varman and Company Audit Firm)

இந் நிறுவனம் சங்கரப்பிள்ளை கட்டிடத்தில் மேல் மாடியில் அமைந்துள்ளது இதன் தலைமைக் காரியாலயம் கொழும்பில் உண்டு. இங்கு பணிபுரியும் ஊழியர்கள் யாவரும் கணக்கியல் அறிவியல் டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்களாகும். இந் நிறுவனம் வேறு பல நிறுவனங்களில் கணக்குகளை ஆய்வு செய்யும் பொறுப்பையும் ஏற்று நடத்துகின்றது.

எனவே மேற் கூறப்பட்ட தொழிற்றுறை நிறுவனங்களை உற்று நோக்கும் போது கணக்காய்வு நிறுவனத்தை தவிர ஏனைய தொழில் துறை நிறுவனங்கள் அனுபவரீதியாக வர்த்தக கணக்கியல் அறிவைப் பெற்றுள்ளன. வர்த்தகம், கணக்கியல் அறிவில் தராதரம் உள்ளவர்களை வேலைக்கு அமர்த்தினால் அது தொழில் துறையை இன்னும் மேம்படுத்தும். நிறுவனத் தலைவர்களை நேர் கண்டபோது அவர்கள் வர்த்தகம், கணக்கியலை நாம் அனுபவ ரீதியாகத் தான் இங்கு பெற்றுக் கொள்கின்றோம். ஆனால் பதவி உயர்வுக்கான பரீட்சைகளுக்கு இப் பாடங்களே முக்கியமாக விளங்குகின்றன என்று கூறினார்கள்.

★ ★ ★



- 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றெனிற்ரா தர்மினி யேசுதாசன்
ஆண்டு 13. வர்த்தகம்

# நாட்டிற்கு நான் செய்ய....

ஈழ நாட்டின் மக்களே!
இனிய நாட்டின் உயிர்களே!!
குனிய வேண்டாம் தலையும் இனி
குவிந்திருக்கு செல்வமிங்கு.

பார்க்குமிடமெல்லாம் பனை தென்னை மரங்கள்
பரந்து நெருங்கி பற்றையாக நிற்கும்
வருடம் முழுதும் வளமளிக்கும்
வாழ் நாளெல்லாம் பலனளிக்கும்
கற்பகத் தருக்கள் இவை
உற்பத்திக்கு இனியவை
எத்தனை எத்தனை அதிசயம்
இவை தரும் வருமானம்
ஏற்றுமதிக்கு அவசியம்

நீண்டு நெளியும் ஆழ
நீலக்கடல் அலை மேலே
ஏலேலோ பாடிச் சென்று
வலை வீசி, வளம் கரையில் குவித்து,
ஏற்றுமதிக்கு உகந்ததாக
எல்லாமும் செய்து முடித்து — இது
இல்லாத நாட்டுக்கு
இங்கிருந்து அனுப்பலாமே.

வணிகமும் பொருளியலும்
வளர்ந்து வரும் காலத்தில்
பொருளாதாரம் தான் இங்கே
பொல்லாத பிரச்சனை ஐயா
சொல்லிச் சொல்லி சும்மா இருந்து விட்டால்
படித்தது பயன்தராமல்
பள்ளியோடு நின்றுவிடும்.

கையிலே வெண்ணெய் வைத்து
கடனுக்கு நெய்க்கு அலைவானேன்
காடும் கடலும்
வயலும் வலுவும்
வளமாக நிறைந்திருக்கு
கிழக்குச் சூரியன் விரிக்கும் கதிரெல்லாம்
உனக்கும் எனக்கும் தான்.

வீசும் காற்றும்
விடியும் பொழுதும்
பேசும் கடலும்
வீணாகிப் போகாமல்
தூணாகத் தோள்களை உயர்த்தி நின்றால்
தேசத்தின் தேவைகள் தீர்ந்திடுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றொபினா பிலிப்
ஆண்டு 12 வர்த்தகம்

# அருளப்பர் காணும் கிறிஸ்து

எண்ணிக்கை பெருகிக் கொண்டிருக்கும் வையகத்தில் எண்ணங்களும் பெருகிக் கொண்டே இருக்கின்றன ஒன்றுபட்ட எண்ணம்தான் மக்களிடையே ஒருமைப்பாட்டை வளர்த்து, குடும்ப உணர்வை ஏற்படுத்த முடியும். இலகுவில் இறைவனையும் காண முடியும். ஆயினும் இன்று மண்ணில் தோன்றும் சமயங்கள் அனைத்துமே இத்தகைய இறைவனைப் பார்க்க (காண) ஒருமைப்பாட்டோடு முனைகின்றன. ஆனால் அவை ஒவ்வொன்றும் தம்மிடம் மட்டுந்தான் உண்மை உள்ளது என்று இறுமாந்து இருப்பதனால் ஒருமைப்பாட்டுக் குறிக்கோளை அடைய இயலாது ஏமாந்து போய்விடுகின்றன.

''குறிஞ்சி மட்டுமல்ல நெரிஞ்சியும் வண்ணமலர் முகிழ்க்கும்'', ''மாற்றான் வீட்டு தோட்டத்திலும் மலர்கள் பூக்கும்; அவை மணம் பரப்பும்'' என்று எண்ணினால் ஒருவரை ஒருவர் மதிக்கும் மனப்பாங்கும் ஒருமைப்பாடும் வளரும். மேலும் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் அழைப்பிற்குப் பின், வாழ்க்கை நிலையை கட்டுப்படுத்தி இறையியலை விளக்கமாக அறிய கடைமைப்பாடு உள்ளவர்களாக இருக்கிறோம். எத்தனை நற்செய்தியாளரைக் காட்டிலும் அருளப்பர் நற்செய்தியை படைக்கும் பாங்கு கிறிஸ்துவை சிறிது எனினும் உணர்த்த எங்களின் அறிவிற்கும் உணர்விற்கும் ஏற்புடையதாக உள்ளது.

அருளப்பர் பன்னிரு அப்போஸ்தலர்களுள் ஒருவராவார். ''யேசுவின் அன்புச் சீடர்'' என்று அழைக்கப்பட்டவர். அருளப்பர் நற்செய்தி என்றழைக்கப்படும் நான்காம் நற்செய்தியினை இவரே எழுதினார். ஆம்; தாம் எழுதிய நற்செய்தியிலே கிறிஸ்துவை அருளப்பர் காட்டும் விதம் ஒரு தனித்தன்மையானதே. அருளப்பரின் நூலிலே கிறிஸ்துவின் அருள் அப்படியே (அருளப்படியே) பிரதிபலிப்பதை ஈண்டு காண்போம்.

அருளப்பரை வழிகாட்டியாகக் கொண்டால் அவர் வழி சென்றால் இம் மண்ணில் ''ஒருவனே இறைவன்'' என்ற ஒருமித்த எண்ணம் எழுந்து அது ''ஒன்றே குலம்'' என்ற ஒருமைப்பாட்டை விளக்கத் துணைபுரியும்.

வார்த்தை உண்மைக்கு இட்டுச் செல்லும்; உண்மை அன்பினைக் காட்டும். அன்பு விடுதலைக்கு வழிகோலும், அவ்விடுதலையோ இறை நெறியில் நம் உயிரை நிலை நாட்டும். மனிதனின் வாயிலிருந்து வெளிவரும் வார்த்தை ஒரு நாள் இறைவனை அடையவேண்டுமென்ற அவனது ஏக்கத்தினை வெளிப்படுத்துகின்றது. அவன் காணும் இறைவனின் பெயர்கள் மாறுபடலாம், ஆனால் முடிவு ஒன்றைத் தேடி அவன் வாழ்வு தொடங்குகின்றது என்னும் உண்மை மாறுபடுவதில்லை. வார்த்தைக்கும் அது இட்டுச் செல்லும் இறுதி நிலை வெற்றிக்கும், இடையில் எத்தனையோ பாவங்களும் சந்திப்புச் சாலைகளும் உறுதுணையாக வருகின்றன. அவைதான் அன்பு, உண்மை என்பனவாகும். இத்தகைய அரிய மதிப்பீடுகள் அருளப்பர் நற்செய்தியில் பரவலாகப் பரவிக்கிடக்கின்றன. அவை ஆழமான அர்த்தத்தை கொண்டிருந்த போதிலும் புரிந்து கொள்வதற்கு எளிமையாகவும் இனிமையாகவும் உள்ளன.

இறைவனின் இருப்புத் தன்மையில் மறைபொருள் பற்றி புனித அருளப்பர் தொடக்கவுரையில் ''ஆதியிலே வாக்கு இருந்தார்...'' என்று தொடங்குகின்றார். ஆம்! இவ்வார்த்தையானது இருந்தது, இருப்பது, இருக்கப்போவது அனைத்தையுமே தன்னிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கிய கோட்பாடாகத் திகழ்கின்றது. அனைத்திலும் உட்பொருளாக திகழ்வது வார்த்தை. சமூக வாழ்வில் வார்த்தை உயரிடம் வகிக்கின்றது. ஆம்! கிறிஸ்துவை அருளப்பர் நமக்கு எடுத்துரைக்கையில் அவ்வார்த்தையை உறவின் பாலமாக வெளிப்படுத்துவது நோக்கத்தக்கது. அது யேசு பாலரை வெளிப்படுத்துகிறது. அத்துடன் செயற்படவும் செய்கின்றது. பழைய ஏற்பாட்டிலுள்ள மனிதனுக்கு அதிகாரப் பெயர் போற்றப்பட்டது போல வார்த்தை இறை அனுபவமாக அமைகிறது. மனிதனின் வார்த்தையை விட இறைவனின் வார்த்தை அனைத்திலும் உயர்ந்து விளங்குகின்றது. இவ்வார்த்தை வழியே "அனைத்தும் உண்டாயின" (அரு 1:3) வார்த்தை வழியாகத் தன்னை வெளிப்படுத்துபவை. இறைவன் தன்னை முழுவதையும் தலை வார்த்தையான கிறிஸ்துவில் வெளிப்படுத்தினார். எனவே வார்த்தையாம் கிறிஸ்துவோடு உறவு கொள்ள வைக்கும் அருளப்பர் நம்மை இறைவனுடனேயே தொடர்பு கொள்ள வைக்கிறார் என்பதை உணரவும் முடிகின்றது. ஆம்! வார்த்தை மனிதனின் அன்றாட வாழ்வின் அனுபவப் பொருளாக மாறிவிட்டதால் மனித வரலாற்றின் மையமாகத் துலங்குகின்றது.

முழுமையில் உருவான கிறிஸ்துவும் வேதத்தை நிறைவு செய்யவே வந்தார் (அரு. 5:36) அவர் மகனாக வந்தபோதும் கடவுளாகத் திகழ்ந்தார் இதை பழைய ஏற்பாட்டில் கடவுள் கூறிய "நாமே" என்ற ஆழமான சொல்லை அருளப்பர் தமது நற்செய்தியில் "நானே" என்று கிறிஸ்துவை காண்பதூடாக கடவுளுக்குச் சமமாக்குவதை, கூர்ந்து அவதானிக்கலாம். இவ்வார்த்தையில் கடவுளான கிறிஸ்துவை காண்கின்றவன் கடவுளையே காண்கிறான். இவரில் ஒன்றாகிறவன் இறைவனில் சங்கமமாகி ஒன்று சேருகின்றான். இவ்வார்த்தையாகிய கிறிஸ்துவை உதறி தள்ளிவிட்டு எவனும் இறை தந்தையை அடைய முடியாது. (அரு. 4:34, 5:30, 6:38) இல் இந்த வார்த்தையைத்தான் அறிவிக்க நாம் கடமைப்பட்டுள்ளோம். நாம் அதை அறிவிக்கும் போது கிறிஸ்துவையே அறிவிக்கின்றோம். இத்தகைய அறிவிப்பு வார்த்தையில் மட்டும் நின்றுவிடாமல் வாழ்வில் தியாக சேவை இவற்றுடன் கலந்து நிற்கும் போது மனமார்ந்த அர்ப்பணிப்பின் முழுப் பொருளையும் பயனையும் தருகின்றது. நம் வாழ்வும் கிறிஸ்துவிலே தொடங்கி அக்கிறிஸ்துவிலேயே நிறைவு பெறுவதை ஆசிரியர் நமக்குத் தெட்டத்தெளிவாக்குகிறார்.

பொய்மையிலிருந்து உண்மைக்கு இட்டு செல்ல இறைவனை வேண்டுவது நம் எல்லோரதது மரபும், மன்றாட்டுமாகும். கிறிஸ்துவோ "நானே வழியும் உண்மையும் உயிருமாயிருக்கிறேன்" என்று (அரு. 14:6) கூறுகிறார். உண்மை என்பது கிறிஸ்துவாக இருக்கும் போது உண்மையை அடையத் துடித்து, அதனை அடையும் மனிதன் கிறிஸ்துவிடமே வருகின்றான். இறைவன் தான் இனிமையெனில் தேவனைத் தேடுபவன் தேவனை அன்றி யாரைத் தேடுகிறான்? ஆம் இக்கிறிஸ்துவை அடையாளம் கண்டு கொள்ள முடியாமல் இருக்கின்றான். ஆனால் அவன் கிறிஸ்துவின் பிணைப்பிலேயே இருப்பதை மறுக்கவும் இயலாது என்று அருளப்பர் கூறுகின்றார்.

மேலும் நாங்கள் எங்களை கிறிஸ்தவர்களாகப் பெருமையோடு கூறிக்கொள்கிறோம். ஆனால் அதன் உட்பொருளை ஆசிரியருடன் சேர்த்துக் காணும் போது (கிறிஸ்து + அவன்) கிறிஸ்தவனாக திருப்பலியில் மாறுவதை உணர முடியும்.

(அரு. 12:44) இல் யேசு உரக்கக் கூவிச் சொல்வதென்னவெனில் "என்மேல் விசுவாசங் கொள்கிறவன் என்மேல் அன்று என்னை அனுப்பியவர் மேல்தான் விசுவாசங் கொள்கிறான். என்னைக் காண்கிறவனும் என்னை அனுப்பினவரையே காண்கிறான்" என்று அருளப்பர் குறிப்பிடும் பொழுது இன்னும் அதிகமாகவே கிறிஸ்துவை நமக்கு சமீபமாக்குவதையும் இறைத் தந்தையை எம் ஒவ்வொருவரிற்கும் அன்புத் தகப்பனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்புபடுத்துவதையும் தெரிந்து கொள்ளலாம். மேலும் கிறிஸ்துவில் விசுவாசம் கொள் பவன் எவனும் இருளிலே இருந்துவிடாதபடி கிறிஸ்து ஒளியாக இவ்வுலகிற்கு வந்த தாக நமக்கு ஆசிரியர் காட்டுவதிலிருந்து நமது கிறிஸ்தவ விசுவாச வாழ்க்கை எத்தகைய நிலையாக இருக்க வேண்டும் என்பதைத் தெட்டத்தெளிவாக்குகிறார். அதைத்தான் கிறிஸ்துவும் காண முற்படுகையில் 'என்னைக் கண்டதால் நீ விசுவாசங் கொண்டாய் காணாமலே விசுவசிப்பவர்கள் பேறுபெற்றோர்'' என்று கூறி நாம் வாழும் இவ்வுலகில் தோற்ற வடிவில் காண இயலாத கிறிஸ்துவை நம் விசுவாச வாழ்விற்கு விடும் சவா லாக எடுக்க வேண்டுமென அருளப்பர் உணர்த்துகிறார்.

ஆம்! யேசு கிறிஸ்து கடவுளின் மகனாகிய மெசியாவென்று விசுவசிக்கும் படியும், விசுவசித்து வாழ்வு பெறும் படியும் இந்நூலில் உள்ளவை எழுதப்பெற்றன (அரு. 20:31) என்ற அருளப்பர் தம் நூலில் விளக்கும் வார்த்தையிலிருந்து இச் சுவிசேஷத்தின் நோக்கத்தையும் (நமக்குக்) காட்டும். கிறிஸ்துவையும் அதன் கருத்தையும் இவ்வண்ணமாகத் தெரிந்து கொள்ளலாம்.

''தாங்கள் ஊடுருவக் குத்தியவரை நோக்குவார்கள்'' (அரு. 20:37) என்ற மறைநூலின் வாக்கின்படியே புனித அருளப்பர் நாம் காணும் கிறிஸ்துவை அவரின் தெய்வீக மறைபொருளின் ஆழ்ந்த அறிவை எமக்கு உய்த்துணரவும் கிறிஸ்துவை இனம் காணவும் வைப்பது வெள்ளிடை மலை (தெளிவு) உண்மையாகும்.

''இதுவே (கழுகுப்பார்வை) அருளப்பர் காணும் கிறிஸ்து அதில் அருளப்படியே காண்''.


*Witch the Best Compliments*

FROM

**PRABA PHOTO**

**108, Stanly Road,**

**J·ffna**

பாலர் வகுப்பு முதல்
பட்டதாரி வகுப்பு வரையிலான
சகலபாட நூல்களுக்கும்
பாடசாலை உபகரணங்கள்,
ஸ்ரேசனறிச் சாமான்கள்
இலங்கை, இந்திய சஞ்சிகைகள்,
நாவல்கள், புதினப்பத்திரிகைகள்,
வாழ்த்துமடல்கள்.
அனைத்திற்கும்

சிறந்ததோர் இடம்

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

**யாழ்ப்பாணம்.**

வணிகத்தளிருக்கு

எமது வாழ்த்துக்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஷ்ணவதனி யோகரட்ணம்,
ஆண்டு 13 கலை

# இந்து மதத்தின் சிறப்பியல்பு

சமயம் என்பது மனிதனை ஆன்மீக ரீதியாக வாழவைப்பது. இது மனிதன் எவ்வாறு வாழவேண்டும் என்ற நோக்கினை அடிப்படையாகக் கொண்டது. அதாவது மனிதனை உலகியலில் நின்றும் சிறந்த சாதகனாக ஆக்கவல்லது சமயம். மனித மனங்களை ஒருமுகப்படுத்தி மனித வாழ்வினை ஒழுங்கமைப்பதே மதங்களின் இலட்சிய மாகக் கூறப்படுகின்றது. மனிதன் தன் உளவியல் சிந்தனையின் அடிப்படையில் மதங் களைத் தோற்றுவித்தான்.

உலகில் உள்ள சமயங்கள் யாரால் எப்போது எங்கே தோற்றுவிக்கப்பட்டன என்ற வரையறையினைக் கொண்டு உள்ளன. அதாவது பௌத்தம் கி. பி. ஆறாம் நூற் றாண்டளவில் தோற்றுவிக்கப்பட்டது. சமணம் பௌத்தம் உருப் பெற்ற பின்னர் தோற்று விக்கப்பட்டது. கிறிஸ்தவம் இரண்டாயிரம் நூற்றாண்டுக்கு முன்பு உருவாக்கப்பட்டது. இஸ்லாம் பதின்மூன்றாம் நூற்றாண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்டது. ஆனால் இந்துமதம் யாரால் எப்போது எங்கு தோற்றுவிக்கப்பட்டது என்று கூறமுடியாதவாறு தொன்மைமிக்க மதமாக விளங்குவது இதன் சிறப்பினையே எடுத்துக் காட்டுகிறது. இதன் காரணமாகவே இந்து மதத்தினை வடமொழியில் ''சனாதன தர்மம்'' என்று அழைக்கப்படும் மரபும் உண்டாயிற்று. உலகம் நாகரிகத்தில் கண்மூடிக்கிடந்த காலத் திலே மண்மூடிக்கிடந்த சிந்துவெளிக்கால அகழ்வுகளின் ஊடே இந்துமதத்தின் தொன்மை வெளிப்படுகின்றது. இவை இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சமய சிந்த னைகளாக விளங்குவனவாக அமைகின்றன.

''ஏகம் ஸக் விப்ரா பகுதா வதந்தி'' என்பது இருக்கு வேத சுலோகம் ஆகும். இதன் பொருள் உண்மைப் பொருள் ஒன்றே அதனை அறிஞர் பல என பொய்யுரைத்து விட்டனர் என்பதாகும். இந்துமதம் பல தெய்வங்களை வழிபட்ட போதிலும் உண்மைப்பொருள் ஒன்றே என்பதனை உலகிற்கு உணர்த்திய பெருநெறி யாகும். அதாவது இந்துமதம் அவரவர் விருப்பத்திற்கு ஏற்ற வகையில் தெய்வத்தினைத் தேர்ந்தெடுத்து வழிபாடு மேற்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தும் முகமாக சைவம், வைஷ் ணவம் சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் எனப்படும் ஆறு பிரிவுகளைக் கொண்டு, நிலைத் திருப்பது குறிப்பிடத்தக்கது. ''யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகியாங்கேமாதொரு பாகனார் வருவார்'' என்பது இந்துக்களது நம்பிக்கை.

எல்லா உயிர்களும் இன்புற்றிருக்க அல்லால் யாதொன்றும் அறியாதது நம் இந்துமதம். ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என எமது ஞானிகளும் இதனையே கூறிச் சென்றனர். ''அகிம்சோ பல'', ''சத்தியம் ஏவ ஜெயதே'' என்ற வடமொழி சுலோகங்கள் கூட இந்துமதத்தின் உயர்ந்த சிந்தனையை வெளிப்படுத்துவன வாகவே உள்ளன.

பிற மதங்களுக்கு இன்ன நூலே முதல்நூல் என்று திட்டவட்டமாகக் கூறி விடலாம். இந்து சமயத்திற்கு இது பொருந்தாது. வேதம் பொதுநூல் எனவும், ஆக மம் சிறப்பு நூல் எனவும் கூறப்பட்டிருப்பினும் வேறு வேறு சாஸ்திர நூல்களையும் தோத்திர நூல்களையும் தமக்குரிய முதல் நூலாகக் கொள்ளும் வழக்கம் இந்து மதத் திற்குரியது. வேதங்களும் ஆகமங்களும் மனிதரால் செய்யப்பட்டன அல்ல என்று கூறும் ஒரு மரபு உண்டு. இதுவே இந்துமதத்தின் பலம் என்று ஒரு சாராரும், பலவீனம் என்று இன்னொரு சாராரும் உரைக்கத்தக்கவகையில் இந்துமதம் மர்மம் பொதிந்ததாய் விளங்குகின்றது. இந்துமதம் பல தெய்வ வணக்கத்தைக் கொண்டது என்று பலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைகூறக் கேட்டிருக்கின்றோம். ஒருநாமம், ஒருகுலம், ஒன்றுமில்லா இறைவனுக்குப் பலநாமம் கூறி வழிபடும் வழக்கத்தை ஒருவகையில் இந்து சமயிகள் பெருமையாகவே கொள்கின்றனர் எனலாம்.

இந்துமதம் வேதத்தினையும், ஆகமத்தினையும் முதல் நூலாக கொண்டமையினால் "வைதிகதர்மம்" எனச் சுட்டப்படுகின்றது. வைதிகத்தினை எதிர்த்து எழுந்த மதங்கள் அவைதிக தர்மங்கள் எனப்பட்டன. இந்து சமயத்தினை எதிர்த்தும், வேத கூற்றுக்களை மறுதலித்தும் இந்தியாவிலே தோன்றிய சமணம், பௌத்தம், உலகாயதம் போன்ற மதங்களில் பௌத்தம் ஓரளவிற்கு பெருமழிவினை அடையாது பாதுகாக்கப்பட்டு வந்திருப்பினும் ஏனைய இரு மதங்களும் தாம் தோன்றிய இடமாகிய இந்தியாவிலேயே தம் வாழ்வினை முடித்துக் கொண்டன. வாள்முனையில் தமது சமயத்தைப் பரப்பிய இஸ்லாமியரும் இந்தியாவை இஸ்லாம் மயமாக ஆக்கிவிட முடியவில்லை. கிறிஸ்தவமும் இந்துமதத்தின் நம்பிக்கைகளை அடியோடு ஒழித்து விட முடியாமல் வாழா நிற்கின்றது. ஏனெனில் இந்துமதம் எல்லாச் சமயங்களின் அம்சத்தையும் தன்னுள் வாங்கிக் கொண்டு அதேசமயம் தனது தனித்தன்மையினையும் பேணிக் காத்து வருவதாகும்.

சமணத்தின் துறவு மனப்பான்மையையும் இந்துமதம் ஒதுக்கிவிடவில்லை. பௌத்தத்தின் அஹிம்சை நெறியினையும் ஏற்றுக் கொண்டது. அதாவது அவைதீக மதம் கூறும் அறக்கருத்துக்களினை கடன் பெற்று, தன் உயிரைக் கொலை வேள்விக்கு பிரியா விடை அளித்தது. கிறிஸ்தவத்தின் பகைவனுக்கு மன்னிப்பு அளிக்கும் பண்பு இந்துமதத்திற்கு புதியதன்று,. "இன்று போய் போர்க்கு நாளை வா" என்று இராமன் கூறுவதாக கூறுகிறது கம்பராமாயணம். எனவே இந்துமதம் "முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழமையதாய் பின்மைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியதாய்" உள்ளது. ஆகவே அதனை அழிப்பதென்பது இயலாததொன்று.

இந்துமதம் சாதிக் கட்டுப்பாடுகளிற்கு அப்பாற்பட்டது. ஆனால் ஒழுக்க விதிக்கு முன்னுரிமை அளிப்பது. உயர்ந்தோர் என்றும் தாழ்ந்தோர் என்றும் ஒதுக்கி வைத்து வேடிக்கை பார்ப்பதையும் நிறதோஷம் காட்டுவதையும் இந்துமதம் எதிர்க்கின்றது. சாதாரண மனிதனும் சமய நெறியின் நின்று வாழுவானாயின் அவன் வணக்கத்திற்கு உரியவன் என்கிறது இந்துமதம். "ஆவுரித்து தின்றுழலும் புலையரேனும் கங்கைவார் சடைக்கரந்தாருக்கு அன்பனாகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" என நாயன்மார்கள் கூறிச் சென்றமையும் மறுப்பதற்கு இல்லை. "மனிதன் எல்லாரும் ஒருவரே, தெய்வத்துள் எல்லாமே ஒன்று" என்பதும் இந்துமதம். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பது இந்துக்களின் கொள்கையாகும். "ஒரே மதம் தான் இருக்கிறது. அது அன்புமதம். ஒரே குலம் தான் இருக்கின்றது. அது மனிதகுலம். யேசுவும் அல்லாவும், புத்தனும். ஈசனும், ஒரே கடவுள்தான்" என்கிறார் ஸ்ரீமான் சாயி சத்திய பாபா அவர்கள். இதன் மூலம் "எம்மதமும் சம்மதமே" என்ற இந்துக்களின் உயர் சிந்தனை வெளிக்கிளம்புகின்றது.

இந்துமத ஆத்மீக நெறியில் காலந்தோறும் எத்தனையோ ஞானிகள் உருவாகியுள்ளனர். வாழும் இந்துமதத்தின் தொன்மையான ஆத்மீக ஞான சிந்தனைகளை உரிய விளக்கங்களோடு பாரெங்கும் பரப்புவதில் பலர் தலை சிறந்து விளங்கினர். இந்து மத வரலாற்றிலே சிறந்த ஆத்மீக வாதிகளாக திகழ்ந்தவர்களுள் ஸ்ரீராமகிருஸ்ண பரமகம்சர், விவேகானந்தர், ஸ்ரீரமணர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். ஸ்ரீமான் சாயி சத்யபாபா போன்றோர் இன்றும் ஆத்மீக ஒளியை வீசிய வண்ணம் இருக்கின்றனர். இத்தகைய ஞானிகளது உயர் போதனைகளாலும் தூய வாழ்வினாலும் இந்துமதம் மெஞ்ஞானத்தின் நிலை பெற்று இருக்கின்றது. இது இந்துமதத்தின் சிறப்பு மட்டுமல்ல தெய்வீகமும் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிந்து கொள்ளுங்கள் ... ...

நிரந்தர ஓய்வூதியம் உள்ள அரச ஊழியர்கள் அனைவருக்கும் இலவச மருத்துவக் காப்புறுதியொன்றை அரசு நடைமுறைப் படுத்த இருக்கின்றது. இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இத்திட்டத்தைச் செயற்படுத்தும். இதற்கென அரச ஊழியரிடமிருந்து வருடந் தோறும் அறவிடப் பட வேண்டிய 480 ருபா தவணைக் கட்டணத்தை அரசே செலுத்துமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது மருத்துவக் காப்புறுதித் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும் திருமணமான ஊழியரின் கணவர், அல்லது மனைவி மற்றும் 21 வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் குடும்ப அங்கத்தவ ராகக் கருதப்படுவர். அத்துடன் திருமணமாகாத ஊழியர்களின் குடும்பங்களில் 70 வயது வரையுள்ள பெற்றோர் 21 வயதுக்குக் குறைந்த தொழிலற்ற சகோதர சகோதரிகள் இத்திட்டத்தின் கீழ் நன்மை பெறுவர்.

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கம் இலங்கை வங்கியின் அனுசரணையுடன் ''இடம் பெயர் விஞ்ஞான தொழில் நுட்ப கண்காட்சிப் புகையிரத சேவை'' ஒன்றை 1994 யூன் 19ம் திகதி முதல் நடைமுறைப் படுத்தியுள்ளது.

இலங்கையின் முதலாவது வணிக வங்கி
1840 ல் *BANK OF KANDY*

உலகின் முதலாவது வணிக வங்கி
1694 ல் *BANK OF ENGLAND*

*With Best Compliments from*

**LINGAM COOL BAR**

*52, Clock Tower Road*
*Jaffna*

பிரியம்வதா திலகநாயகம் போல்
ஆண்டு 13 கலை

# யொகானெஸ் கெப்ளர் 1571-1630

கெப்ளர் ஜேர்மன் தேசத்தில் கைல் என்னும் நகரத்தில் 1571இல் பிறந்தார். ஐசாக் நியூட்டன் பிறப்பதற்கு 12 ஆண்டுகளுக்கு முன் 1630இல் இவர் காலமானார். நியூட்டன் தன் அறிவு மாளிகையை கெப்ளர் என்ற மாபெரும் அறிஞரின் தோளில் ஒரு காலையேனும் வைத்து ஏறியே அம்மாளிகையைக் கட்டினார் என்று கூறப்படுகிறது.

மிகமிகக் கஷ்டமான சூழ்நிலையிலும் நாம் அறிவை விருத்தி செய்யலாம் என்பதற்குச் சிறந்த உதாரணம் கெப்ளர் ஆவர். நாலு வயதாக இருக்கும்போது இவருக்கு அம்மை கண்டது, கண்கள் ஊனமுற்றன. நன்றாகக் கண் தெரிவதில்லை. கைகளும் சிறிது முடமாயின. அவருடைய தந்தையார் ஒரு இராணுவ வீரர்; குடிகாரன். தாயார் சித்த சுவாதீனம் குறைந்தவர். இத்தனை இடையூறுகளுக்கும் மத்தியில் கெப்ளர் வகுப்பிலே சிறந்த மாணவராய் இருந்தார். சமய குருவாக வர ஆசைப்பட்டார்.

"டுப்பிங்கென்" பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது, சூரியனைச் சுற்றி கோள்கள் வலம் வருகின்றன என்ற கொப்பர்நிக்கசின் கருத்து அவருக்கு அறிமுகமாகியது. விஞ்ஞானமும் கணிதமும் அவரை ஆட்கொண்டன. மதகுருவாக வரும் ஆசையைக் கைவிட்டுவிட்டார்.

23 வயதாக இருக்கும்போது "கிராட்ஸ்" பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் பதவி கிட்டியது. அதை ஏற்றுக்கொண்டார். பணக்காரப் பெண்ணொருத்தியை மணந்து கொண்டார். அவரது வாழ்க்கை இனிமையாக, அமைதியாக நடைபெற்று வரும் நேரத்தில் நாட்டில் சமயக் குழப்பம் ஏற்பட்டது. புரட்டஸ்தாந்து மதத்தினரான கெப்ளர் கிராட்சை விட்டு வெளியேறினார். நாடு கடத்தப்பட்டு பிராக் நகரில் அடைக்கலம் புகுந்திருந்து டென்மார்க் வானியல் நிபுணரோடு சேர்ந்து கொண்டார். அவர் பெயர் "டைக்கோ பிரா" என்பதாகும். பிரா, கொப்டர்நிக்கசின் கொள்கைக்கு எதிரானவர். "பிரபஞ்சத்தின் மையம் சூரியனே" என்பது கடவுளின் விதிகளுக்கும் பௌதிக இயலின் விதிகளுக்கும் எதிரானது என்ற கொள்கையுடையவர். பூமியே பிரபஞ்சத்தின் மையம் என்ற கொள்கையை உடையவர். அதை நிரூபிக்கப் பல முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். ஆனால் கெப்லரின் உறவால் மது கொள்கை தவறானது எனப் பிரா உணர்ந்தார். கெப்ளரைத் தனது துணை அலுவலராகவும் தமக்குப் பின் தமது பதவிக்கு உரியவராகவும் ஏற்றுக் கொண்டதிலிருந்து இது தெரிகிறது.

"டைக்கோ பிரா" 1601இல் காலமானார். அதன் பின்பும் கெப்ளர் வானவியல் ஆராய்ச்சிகளைச் செய்து கொண்டு வந்தார். பிராவின் எடுகோள்களைப் பகுத்தாய்ந்த போது கோள்களின் இயக்கம் பற்றிய விதிகளைக் கவனிக்க வேண்டியிருந்தது.

கோள்கள் எல்லாம் சூரியனைச் சுற்றி வருகின்றன என்று கொப்பர்னிக்கஸ் கூறியதை கெப்ளர் முன்னமே ஏற்றிருந்தார். இப்போது அவர் கோள்கள் எலலாம் சூரியனைச் சுற்றி நீள்வட்டப் பாதையிற் சுற்றுகின்றன என்பதனைக் கண்டுபிடித்தார். வட்டமே பூரண வடிவம் என்ற கிரேக்கரின் கொள்கை நிலவிய அந்தக் காலத்தில் இவரது கொள்கை புரட்சிகரமானதே. அத்தோடு கோள்களின் வேகம் இடத்துக்கிடம் வேறுபடுவதையும் கண்டுபிடித்தார். அதாவது கோள்கள் சூரியனை அண்மிக்கையில் அவைகளின் வேகம் அதிகரிப்பதையும் அவை சூரியனுக்குத் தொலைவில் இருக்கும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவைகளின் வேகம் குறைவதையும் கண்டுபிடித்தார். ஒரு கோள் சூரியனைச் சுற்றி வர எடுக்கும் நேரம், சூரியனுக்கும் கோள்களுக்கும் இடைப்பட்ட தூரத்தில் தங்கியுள்ளதென்றும் கூறினார். ஒவ்வொரு கோளையும் தனித்தனியாக எடுத்து அவரின் கணித விதிகள் எவ்வாறு பொருந்துகின்றன என்று திருத்தமாகக் கணக்கிட்டுக் காட்டினார். அவரது கணக்குகள் அவ்வளவு திருத்தமாக இருப்பது நமக்கு வியப்பைத் தருகின்றது

வானவியலுடன் தொடர்புடைய வேறு துறைகளிலும் அவர் ஆய்வு நடத்தியுள்ளார் ஒளிமுறிவு பற்றியும், புவியீர்ப்புப் பற்றியும், கடல்களின் வற்றுப் பெருக்குப் பற்றியும் பல கருத்துக்களை வெளியிட்டார். அவருடைய கணித அறிவு அவரைக் கிட்டத்தட்ட நுண்கணிக இயல்வரை கொண்டு வந்து விட்டது. அவர் கணிதத்துறையில் செய்த ஆராய்ச்சிகள் மிகச் சிறந்தவை, அற்புதமானவை. சோதிடத்தில் தமக்கு நம்பிக்கையில்லையென்று அவர் கூறி வந்த போதும் சோதிடக் குறிப்புகள் அவருடைய நாட் குறிப்பில் காணப்படுவது நமக்கு வியப்பைத் தருகின்றது.

உசாத்துணை நூல் • உலக மேதைகள்

※ ※ ※


வணிகத் தளிரை வாழ்க வாழ்க
என வாழ்த்துகின்றோம்

சகல விதமான வைபவங்களையும்
அதி நவீன வீடியோ கமராக்கள், மிக்சர்கள் கொண்டு
வீடியோ படம் பிடித்திடவும்
சிறந்த முறையில்
கொம்பஸற், டிஸ்க் மூலம் பாடல்களை பதிவு செய்யவும்
ஒரே ஸ்தாபனம்

ஷண் றெக்கோடிங் ஸ்பொட்

165, நவீன சந்தை
உட்புறம்
யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PE... ROAD
NALLUR, ...
No......

Sumangala Rajeswaran
Year 12 Arts.

# WHY I LIKE TO STUDY ENGLISH

TODAY the study of English is very much in the news. We all know that English is important for very many reasons. A person can hardly survive in today's society without any knowledge of English. That is why, there is a market increase in the desire to learn the subject. The tutories are overflowing with pupils who want to improve their knowledge.

English is an international language. It is spoken all over the world. So, if one wants to travel widely, a knowledge of English is a must. English also is necessary for higher education. Most of us would be entering the University. So, we will have to do a lot of reference reading and attend seminars and talks by guest speakers. More over we may have to go abroad to do post graduate degrees in foreign universities We require some knowledge of English for all those purposes.

For a student, reading, is an important part of Education The world's best books are either written in English or translated into it. A knowledge of English is the key to open the vast treasure houses of Science, Religion, Phylosophy and Literature. By reading we can expand our knowledge deepen our wisdom and come into contact with some of the world's best minds.

English is of utmost importance in the world of Science. The 20th century is the era of scientific and technological advancement. If we do not know English we will not be able to keep up with the latest discoveries in medicine Science and technology. This would be a great handicap.

English also bestows social grace. In today's world where people of different nationalities and helps in unifying the whole world. At present inter-communal harmony is very important in our own country, where there is an ethnic crisis. English could well be the bridge on which all communities of Shri-Lanka would unite as a nation.

The fore-mentioned reasons are why I like to study English. Personally speaking, I love reading, and English literature. English poetry fascinates me. Therefore from early childhood I always had a wish to offer English whenever possible. I hope there are many like me who would like to improve their skills in English.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கையர் மலர்
மிளிர வாழ்த்துக்கள்
சிறந்த ரக நவீன டிசைனுகளில்
பாதணிகளை பெற்றுக் கொள்ள
ஒரே ஒரு தாபனம்

அகிலன் பாதணி நிலையம்

12/1, பெரிய கடை
யாழ்ப்பாணம்.

வணிகத் தளிரின் 4 வது மலர்
சிறப்புற எமது வாழ்த்துக்கள்

HOTEL
ROLEX

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

*With the Best Compliments*
*From*

CITY MEDICALS

487, HOSPITAL ROAD, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகத்தளிர் புதுப்பொலிவுடன் மிளிர
வாழ்த்துக்கள்

# அன்னை வேளாங்கன்னி விளையாட்டுக் கழகம்

★ எறிபந்தாட்டம்

★ உதைப்பந்தாட்டம்

★ கரப்பந்தாட்டம்

★ சதுரங்கம்

★ கூடைப்பந்தாட்டம்

1994 ஐங்கரன் விளையாட்டுக்கழகத்தால் நடாத்தப்பட்ட எறிபந்து விளையாட்டுப் போட்டியில் முதலிடத்தை பெற்றுக் கொண்டது. இச்சிறப்பு விளையாட்டுக் கழகத்துடன் ஏனைய விளையாட்டுக் கழகங்கள் நட்பு விளையாட்டு முறைப்படி விளையாடுவதற்கு வரவிருக்கின்றார்கள். அனைத்து விளையாட்டுக் கழகங்களையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

*தலைவர்:*
A. விஜயரட்ணம்

*செயலாளர்:*
S சிறீஸ்கந்தராஜா

## அன்னை வேளாங்கன்னி விளையாட்டுக் கழகம்

176/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க ! வாழ்க ! வணிகத்தளிர்

# ஜென்சி மியூசிக் சென்ரர்

இசைப் பதிவுக்கென்றே இன்றைய
இணையில்லாத நிறுவனம்

# ஜென்சி மியூசிக் சென்ரர்

※ நீங்கள் விரும்பும் எந்தப் பாடல்களாக இருந்தாலும் 'கொம்பக் டிஸ்க்' மூலம் அனுபவமிக்க வல்லுனர் களைக் கொண்டு உடனுக்குடன் பதிவு செய்திடவும்,

※ மற்றும் மங்களகரமான வைபவங்களை நவீனமுறையில் வீடியோ படப்பிடிப்பு செய்வதற்கும்

நீங்கள் நாடவேண்டிய இடம்

## ஜென்சி மியூக் சென்ரர்

இல. 17, பழைய பஸ் நிலையம்
யாழ்ப்பாணம்

எங்ரும் வாழ்க வணிகத்தளிர்

# கயல்விழி நகைப் பூங்கா
# KAYALVILI NAKAI POONGA

தங்கப்பவுண் நகை வியாபாரம்

*ஆடர் நகைகள் 22 கரட் தங்கத்தில்*
*சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்*

224/B, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

# S. M. FERNAANDO
**OPTICIANS**

*Specialists In Handling The*
*Latest Technology In*
*Optical Work*

**S·M·FERNANDO**

580, Hospital Road
*[Near Bank of Ceylon]*
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வணிகத்தளிர்' வரவால்
தேசத்து அறிவியல்
வளம் பெற்று வாழி! வாழி!

உங்கள் அறிவுத் தேவையின் நிறைவிடம்
ஆம்!
பாலர் முதல் பல்கலைக்கழகம் வரையிலான
எல்லா நூல்களினதும் உறைவிடம்.

* அரசியல்
* வரலாறு
* சமூகவியல்
* இலக்கியம்
* விஞ்ஞானம்
* ஆய்வியல்

அனைத்து துறை நூல்களையும்
பாடசாலை உபகரணங்களையும்
குறைந்த விலையில் நிறைந்த திருப்தியில்
நீங்கள் பெற்றுக்கொள்ள
யாழ் நகரில் ஒரே இடம்.

# தமிழ்த்தாய் புத்தகசாலை

191, லெப். கேணல் இராசன் சாலை,
யாழ்ப்பாணம்.

புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம் - 1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org